
# வாழ நினைத்தால்

லக்ஷ்மி



பூங்கொடி பதிப்பகம்

# வாழ நினைத்தால்

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 24643074

NATIONAL LIBRARY BOARD
B21133475D

## நூல் விவரப் பட்டியல்


| | |
|---|---|
| நூலின் பெயர் | வாழ நினைத்தால் |
| நூலாசிரியர் | லக்ஷ்மி |
| மொழி | தமிழ் |
| நூலின் பொருள் | நாவல் |
| நூல் உரிமை | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| வெளியீடு | பூங்கொடி பதிப்பகம் 14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. |
| பதிப்பு ஆண்டு | முதற்பதிப்பு : மார்ச் 1978 |
| | இரண்டாம் பதிப்பு : மே 1979 |
| | மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட் 1987 |
| | நான்காம் பதிப்பு : ஆகஸ்ட் 1992 |
| | ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 1994 |
| | ஆறாம் பதிப்பு : அக்டோபர் 2005 |
| | ஏழாம் பதிப்பு : ஜூன் 2008 |
| நூல் அளவு | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | 128 |
| எழுத்து | 11 புள்ளிகள் |
| தாள் | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | சாதா அட்டை |
| அச்சிட்டோர் | வசந்த் ஆப்செட் பிரஸ் சென்னை-24. ✆ : 23726603 |

**விலை : ரூ. 45.00**


# பதிப்புரை

"வாழ நினைத்தால்" என்ற இந்த நாவல் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

ஆசிரியை "லக்ஷ்மி" அவர்கள் தனது குரலில் வானொலி ரசிகர்களுக்கு வாரம் ஒருமுறை— 12 வாரங்களில் தொடர்ந்து வழங்கிய நாவல்.

அதை அப்படியே நூலாக வெளியிட்டுள்ளோம்.

இந்த நாவலின் நாயகியான மனோகரி வானொலி ரசிகர்களின் நெஞ்சங்களை நெகிழ வைத்து உணர்ச்சிவயப்படவைத்த பாத்திரப் படைப்பு.

குடும்பச் சூழலில் சம்பவங்களை நிகழவைத்துப் பாத்திரங்களோடு வாசகர்களையும் இணைத்து விடும் ஆற்றல் பெற்ற திருமதி "லக்ஷ்மி" அவர்கள் இந்த நாவலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இதைப் புத்தகமாக வெளியிடும் வாய்ப்பை எங்களுக்குஅன்புடன் வழங்கிய அமரர் "லக்ஷ்மி' அவர்களுக்கு எங்கள் நன்றியை சமர்ப்பிக்கிறோம்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

"லக்ஷ்மி"யின்
'பூங்கொடி' வெளியீடுகளில் சில

| | |
|---|---|
| அடுத்த வீடு | 145.00 |
| அரக்கு மாளிகை | 170.00 |
| அதிசய ராகம் | 90.00 |
| இரண்டாவது தேனிலவு | 45.00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 105.00 |
| இன்றும் நாளையும் | 90.00 |
| உறவின் குரல் | 65.00 |
| ஊன்றுகோல் | 60.00 |
| என் வீடு | 55.00 |
| ஒரு காவிரியைப்போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 125.00 |
| ஒரு சிவப்பு பச்சையாகிறது | 90.00 |
| கங்கையும் வந்தாள் | 115.00 |
| கதவு திறந்தால் | 95.00 |
| கதாசிரியையின் கதை (முதல் பாகம்) | 60.00 |
| கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) | 70.00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 70.00 |
| கணவன் அமைவதெல்லாம் | 85.00 |
| காளியின் கண்கள் | 75.00 |
| கைமாறியபோது | 85.00 |
| கோடை மேகங்கள் | 90.00 |
| திரும்பிப் பார்த்தால் | 55.00 |
| நதி மூலம் | 45.00 |
| நாயக்கர் மக்கள் | 150.00 |
| நிற்க நேரமில்லை | 80.00 |
| நியாயங்கள் மாறும்போது | 90.00 |
| நிகழ்ந்த கதைகள் | 95.00 |
| பண்ணையார் மகள் | 115.00 |
| பவளமல்லி | 70.00 |
| பவானி | 50.00 |
| புதைமணல் | 60.00 |
| பெயர் சொல்ல மாட்டேன் | 50.00 |
| பெண்மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | 70.00 |
| மறுபடியுமா? | 85.00 |
| மீண்டும் வசந்தம் | 100.00 |
| மீண்டும் பிறந்தால் | 85.00 |
| மீண்டும் பெண்மனம் | 70.00 |
| மோகத்திரை | 75.00 |
| ராதாவின் திருமணம் | 75.00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 75.00 |
| ஸ்ரீமதி மைதிலி | 135.00 |


# வாழ நினைத்தால்

## 1

விடியற்காலை; இன்பமான உறக்க வேளை. இரவு முழுவதும் அனலை வீசிக் கொண்டிருந்த மின் விசிறியின் காற்று இப்போது சில்லென்று குளிர்ந்து உடலைத் தொட்டது. மனோகரி போர்வையை இழுத்துக் கழுத்து வரை மூடிக்கொண்டாள்.

முன்னறைக் கடிகாரம் ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. பக்கத்தறையில் பெரியப்பா பலமாக இருமிக் கொண்டிருந்தார் எதிர் வீட்டு வேலைக்காரி வாயிலைப் பெருக்கும் சப்தம், அடுத்த வீட்டு சமையலறையில் பிரஷர் குக்கர் எழுப்பிய இரைச்சல், இடையே பேச்சுக் குரல், தெருவில் ஓடிய வாகனங்கள் எழுப்பிய ஓசை எல்லாம் விஸ்வா காலனி விழித்துக் கொண்டுவிட்டதென்பதை உணர்த்தின சூழ்நிலை லேசாகிப் புலனாகிய போதிலும் காலை உறக்க மயக்கம் கண்களை அழுத்தவே எழுந்திருக்க மனமின்றி அவள் புரண்டு படுத்தாள். எண்ணங்களும் கற்பனை உலகில் இன்பமாகப் பவனி வந்து கொண்டிருந்தன. சிமெண்ட் தரை மீது கிடந்த பாயில் தான் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள் உயரம் பற்றாத தலையணை தொய்ந்து கிடந்தது. போர்வையில் பல கிழிசல்கள். அருகே கிடந்த மரக்கட்டிலின் மேல் பஞ்சு மெத்தைமீது ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர் பெரியப்பாவின் செல்வங்களான வனிதாவும், லாவண்யும். "அம்மா பால்!" பால்காரனின் குரல் தொடர முயற்சித்த அரைத் தூக்கத்தைக் கலைத்தது பெரியம்மாவின் முணுமுணுப்பும் தொடர்ந்து வாயிற் கதவு திறக்கப்படும் ஓசையும் கேட்டன. போர்வையை முகத்தின்மீது இழுத்து

விட்டுக்கொண்டு மீண்டும் அவள் புரண்டு படுத்தாள். ஞாயிற்றுக்கிழமை, ஓய்வுநாள் ''இன்னும் சிறிது நேரம் தூங்கினால் என்னவாம்?'' என்ற பிடிவாதம். லேசாகக் கண்களைத் திறந்து இருள் பிரிந்து கொண்டிருந்த புது வெளிச்சத்தில் கட்டிலைப் பார்த்தாள். அவளது ஒன்று விட்ட சகோதரிகள் உலக நினைப்பின்றி ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருந்தனர் 'கொடுத்து வைத்தவர்கள்' நிராசையான பெருமூச்சுடன் மறுபடியும் சோம்பலுடன் புரண்டாள். படால் என்று பெரும் ஓசையுடன் வாயிற்கதவை பெரியம்மா நாகமணி மூடுவது கேட்டது அவளது உறக்கம் பூராவும் இப்போது கலைந்து விட்டது. அடுத்த சில வினாடிகளில் பெரியம்மா அவளை அழைக்கும் அபயக் குரல் எட்டு வீடுகளைத் தொட்டுக் கொண்டு எதிர் ஒலிக்கும் என்பது அவளுக்குத் தெரியும். எனினும் அந்தச் சில வினாடிகளில் சற்றுமுன் அவள் மகிழ்ச்சியுடன் திளைத்த கற்பனை உலகில் மறுபடியும் ஆழ்ந்துகிடக்க ஆசைப்பட்டாள். கண்களைப் மூடிக் கொண்டு, புன்னகை முகத்தில் நிழலாட இன்பத்தில் உள்ளம் பூரிக்க தன் சிந்தனைக்குள்ளே மீண்டும் அவனைக் கொண்டு வந்து நிறுத்தி அழகு பார்த்து மகிழ்ந்தாள்.

அந்த ஒரு வார காலத்தில் அவள் எத்தனை முறை அவனை டெலிபோனில் அழைத்துப் பேசியிருந்தாள். ''மிஸ்டர் அரவிந்த் உங்களுக்குப் போன் வந்திருக்கு. மிஸ்டர் அரவிந்த் உங்களை ஆடிட்டர் போனில் அழைக்கிறார். மிஸ்டர் அரவிந்த் மானேஜர் உங்களுக்காக லையனில் காத்திருக்கிறார்...'' இப்படிப் பலமுறை அவனை அழைத்திருக்கிறாள்.

தாங்க்யூ, அப்படியா என்று அவன் கேட்டு விட்டால் கூட போதும். பட்டுப்போல் அவள் காதுகளைத் தழுவிய அவனது குரல் ஓசை அவளது உணர்வுகளோடு ஒன்று கலந்து கொண்டு விடும். அரவிந்தகுமார் வேலையில் சேர்ந்து சில நாட்கள்கூட ஆகவில்லை கம்பெனியின்



மானேஜருக்கு அவன் பி. ஏ. முன் இருந்த பி ஏ. யைவிட அரவிந்தகுமாரை ஆபீஸ் பையனிலிருந்து மானேஜர்வரை எல்லோருக்கும் பிடித்திருந்தது. மனோகரிக்கு அவனை மிகமிகப் பிடித்து விட்டிருந்தது.

தம்புச்செட்டித் தெருவிலிருந்த முருகன் ரோட்வேஸ் என்ற அதே கம்பெனியில்தான் அவளும் ரிஸப்ஷனிஸ்ட்டாகவும், டெலிபோன் ஆப்பரேட்டராகவும் பணி புரிந்து வந்தாள். பி. யு. ஸியுடன் அவளது படிப்பிற்கு பெரியம்மா முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந்தாள். அவர்கள் பெண்களைப் போல ஒரு பட்டதாரியாக வேண்டும் என்று மனோகரிக்கு கொள்ளை ஆசை கல்விமீது அபார மோகம். ஆனால் வாய்ப்புத்தான் இருக்கவில்லை. பெற்றோர்கள் இல்லாது பெரியப்பாவின் நிழலில் ஒண்டிக் கொண்டு அவர் தயவில் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஐந்து வயதிலிருந்து அவளை வளர்க்கும் பொறுப்பு பெரியப்பா நல்லசிவத்தின் தலைமீது விழுந்துவிட்டது. தம்பி மகள் என்று அவர் தயவு காட்டினார் என்றும் சொல்லிவிட முடியாது தொழிற்சாலை விபத்திலே மாண்டுவிட்ட அவள் தந்தை அவளையும் அவள் தாயையும் நிராதரவாக விட்டுப் போகவில்லை. இன்ஷுரன்ஸ், வொர்க் காம்பன்சேஷன் என்றெல்லாம் சேர்த்து பதினைந்தாயிரம் ரூபாய்களை சொத்தாக விட்டுப் போயிருந்தார். இந்தப் பணத்திலேதான் இந்தப் பதினைஞ்சு வருஷமும் இவள் வளர்ந்து படிச்சு குதிர்போல இப்படி நிற்கிறாள். ''இந்தக் காலத்து விலைவாசிக்கு முன்னால் இந்தப்பணம் கடைவாய்க்குக்கூட காணுமா சொல்லுங்கோ...இந்தப் பணத்தையும் உங்க தம்பி விட்டு போகவேணாம். அந்தப் பாவி மகள், இவள் அம்மா நம்ப வீட்டு கௌரவத்தை மண்ணாக்கிவிட்டுப் போக வேணாம்...'' என்று குடும்ப சண்டைகளின்போது இரைந்து கத்துவாள். பெரியப்பாவுக்கு மனைவியிடம் கொஞ்சம் பயம். ''சரி சரி, ஆனது ஆச்சு, விட்டுத்தள்ளு''

என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டு வெளியே நடையைக் கட்டி விடுவார்.

பி.யு. ஸிக்குப் பின்னர் வீட்டில் தங்கி பெரியம்மாவுக்கு உதவியாக இருக்க அவள் முயற்சித்தாள். எத்தனை கடினமாக வேலை செய்தாலும் நாகமணியை அவளால் திருப்தி செய்ய முடியவில்லை. ''ஒருத்தர் சம்பாதிச்சு வீட்டே உக்கார்ந்து தின்னால் இந்தக் காலத்தில் கட்டுப்படியாகுமா? ஒரு வேலை தேடிக்கத் துப்பில்லை.'' அடிக்கடி ஊசி போல வார்த்தைகளைக் குத்திக் கொண்டிருந்தாள்.

தான் வீட்டிலே தங்கி குடும்பத்திற்குப் பாரமாக இருப்பது சரியல்ல என்ற முடிவின் பேரில்தான் அவள் ஒழிந்த வேளையில் ஷார்ட்ஹாண்ட், டைப்பிங், டெலிஆப்ரேட்டர் பயிற்சி முதலியவற்றை கற்றுத் தேர்ச்சி பெற்றாள். இந்த மூன்றினால் ஏற்பட்ட திறமையைக் கையில் வைத்துக் கொண்டு வேலை தேடப் புறப்பட்டாள். வேலை உடனடியாகக் கிடைத்து விடவில்லை. எத்தனையோ அலைச்சல். ஒரு வருஷ காலம் உருண்டோடி விட்டது. நாகமணியின் பொறுமையும் தேய்ந்து முடிவை எட்டி விட்டது. அது சமயந்தான் பெரியப்பாவின் நண்பர் ஒருத்தர் கொடுத்த பலத்த சிபாரிசுக் கடிதத்தின் உதவியுடன் முருகன் ரோட்வேஸ் என்ற பிரபல லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனிக்கு வேலை தேடிச் சென்றாள்.

''என் சிநேகிதன் கொடுத்த கடிதந்தான் கடைசியிலே உதவியது. அவனது பலத்த சிபாரிசினால்தான் வேலை கிடைத்தது'' அடிக்கடி நல்லசிவம் சொல்வதுண்டு; ஆனால் அவளுக்கு உள்ளூர வேறு ஒரு நினைப்பு

அழிக்க முடியாத பழிச்சொல்லையும் அவமானத்தையும் குடும்பத்தின் மீது சுமத்திவிட்டுப் போயிருந்த அவள் தாய் அவளுக்கு தன் அழகைச் சொத்தாக விட்டுப் போயிருந்தாள். அந்த அழகுதான் வேலைக்குப் பெரிய சிபாரிசாக உதவியது என்ற நம்பிக்கை அவளுக்கு.



விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வேலையைத் தேடி கொண்டு அங்கு அவளுடன் அன்று வந்திருந்த பெண்களின் கூட்டத்தைப் பார்த்து அவள் முதலில் மனம் தளர்ந்து போய்விட்டாள். ''மிஸ் மனோகரி'' ஆபீஸ் பையன் அவள் பெயரைக் கூப்பிட்டதும் உற்சாகமின்றி தள்ளாடிக் கொண்டுதான் மானேஜர் முன்னால் போய் நின்றாள்.

''மிஸ் மனோகரிதானே?'' மூக்குக் கண்ணாடி வழியே மேலும் கீழும் ஒருமுறை வெறித்தார் அவர். நாக்கு உலர்ந்து பயத்தில் தொண்டையடைக்க, தும்பைப்பூ போல் வெளுத்து விட்டிருந்த அவரது தலை முடியைப் பார்த்துக் கொண்டு பிரமிப்புடன் நின்று கொண்டிருந்தாள். ''டெலிபோன் ஆப்பரேடிங் யந்திரம் முன்பக்கம் இருக்கிறது. போய் என்னை அங்கிருந்து கூப்பிடு பார்க்கலாம்.'' உத்தரவிட அவள் அப்படியே செய்தாள். மறுபடியும் மானேஜர் அறையிலிருந்து அழைப்பு வந்தது. என்ன சொல்லப் போகிறாரோ என்ற பயத்தில் கால்கள் நடுங்க உள்ளே வந்து நின்றாள்.

''உனக்குப் பாடத் தெரியுமா? குரல் ரொம்ப இனிமையாக இருக்கிறதே.'' மானேஜர் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது.

''சுமாராகத் தெரியும். வாய்ப்பாட்டைவிட வீணை வாசிக்க நல்லாத் தெரியும்'' பெருமையுடன் சொல்லிக் கொண்டாள்.

ஏனோ சட்டென்று மானேஜரின் பார்வை அவளது பிஞ்சு விரல்களின் மீது தாவின. உடனடியாக அவர் முகத்தில் திருப்தி நிலவி நின்றது.

''உங்கப்பா எங்கே வேலை பார்க்கிறார்.'' அவர் கேட்டார்.

''அப்பா என் சின்ன வயதிலே விபத்திலே போய்விட்டார்.''

அவர் தொடர்ந்து கேட்குமுன் சட்டென்று முந்திக் கொண்டாள். ''எனக்கு அம்மாவும் கிடையாது.'' முடிக்கு

முன் முகமெல்லாம் அவமான உணர்வில் ரத்தமாகச் சிவந்து போயிற்று.

''ஐயோ பாவம் அவங்களும் செத்து விட்டாங்களா'' அனுதாபப்பட்ட மானேஜர் மேஜைமீது இருந்த மணியை அடித்தார்.

இரண்டு தினங்கள் கழித்து அவளுக்கு வேலையில் அமரும்படி உத்திரவு வந்தது. மாதம் முன்னூற்று ஐம்பது ரூபாய் சம்பளம்.

ஒரு நயாபைசாவைக்கூட தொடாது பெரியம்மா கையில் சம்பளம் முழுவதையும் ஒப்படைத்துக் கொண்டிருந்தாள். அப்படியும் நாகமணி திருப்தியடையவில்லை. நாள் முழுவதும் உழைத்துவிட்டு களைத்து வருகிறாளே என்ற கருணையும் அவளிடம் இருக்கவில்லை. இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் வீட்டு வேலை அனைத்தையும் மனோகரிதான் செய்ய வேண்டியிருந்தது. மற்ற இரு பெண்களும் பரீட்சைக்குப் படிக்கிறார்கள் என்ற சாக்கு. நாள் முழுவதும் உழைத்து ஓடாகிவிட்டதாகப் புலம்பிக் கொண்டு நாகமணி சாப்பிட்டதும் படுத்து விடுவாள். ஓய்வு நாட்களில் கூட மனோகரிக்கு நிம்மதி இருந்ததில்லை. வீட்டைக் கழுவி துணிகளைத் துவைத்து நாகமணிக்கு அடுப்பருகில் கை வேலைகள் செய்து கொடுத்து அவள் நிமிர்வதற்குள் பொழுது சாய்ந்துவிடும் சில சமயங்களில் வீட்டைப் பார்த்துக் கொள்ள அவளை வைத்து விட்டு மற்ற எல்லோரும் ஊரைச் சுற்றப் போய்விடுவதும் உண்டு.

வெள்ளிக்கிழமை பகல் ஆபீஸில் உணவு நேரத்தில் அவளுடன் வேலை செய்த மற்ற பெண்கள் எல்லோரும் சாப்பாட்டறையில் கூடியிருந்தார்கள். அவளைத் தவிர மற்றவர்களுக்கு சாப்பாட்டுக் கூடைக்காரன்சாப்பாட்டை சமயத்திற்குச் கொண்டுவந்து மேஜை மீது வைத்துவிட்டு போயிருந்தான்.



''ஏய், எனக்குப் பிடிச்சது அம்மா செஞ்சு அனுப்பியிருக்காங்க. சுடச்சுட இருக்கு...'' டிபன் ஸெட்டை மகிழ்ச்சியுடன் திறந்து பரப்பினாள் சங்கரி. வெங்காயச் சாம்பார் மணம் அறை முழுதும் பரவிக் கொண்டது.

''நான் காலை வெளியே புறப்படுமுன் அம்மாகிட்ட சொல்லி விட்டுத்தான் வந்தேன். அதுபோல எனக்குக் குருமாவும் பிரியாணியும் அனுப்பியிருக்காங்க...'' நாக்கைச் சப்புக் கொட்டினாள் புனிதா. வழக்கம் போல் கையோடு கொண்டு வந்த அலு னிய டப்பாவை திறக்கவும் மனோகரிக்கு கூச்சமாக இருந்தது அவசரத்தில் தானே இரண்டு கரண்டி சோற்றில் புளித்த மோரை ஊற்றி ஊறுகாயுடன் அவள் பகல் சாப்பாட்டைக் கொண்டு வந்திருந்தாள். ''நாள் முழுவதும் வேலை செய்கிறவளுக்கு, வாய்க்கு ருசியாகவும் உடம்புக்குத் தெம்பாகவும் சாப்பாடு இருக்க வேண்டாவான்னு அம்மாவுக்குக் கவலை சப்பாத்தியும் சப்ஜியும் அனுப்பியிருக்காங்க.'' வீணா டிபன் செட்டை திறந்து விட்டு சிநேகிதியின் முகத்தைப் பார்த்தாள்.

'என்னோட சாப்பாட்டை நீயும் கொஞ்சம் எடுத்துக்கோயேன் தினமும் மோர் சாதம் சாப்பிட்டால் உடம்புக்கு தெம்பு எங்கிருந்து வரும்... அனுதாபத்துடன் கிசுகிசுத்தாள் வீணா. அவளது இரக்கம் மனோகரிக்கு வேதனையாக இருந்தது. மற்ற பெண்களுடன் தன்னை ஒப்பிட்டுக் கொண்டதும் அவளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை அவள் உடல் வளர்ச்சியைப் பற்றியோ உள்ளத்து உணர்வுகளைப் பற்றியோ அவளது உணர்வைப்பற்றியோ கவலைப்பட அவளுக்குத்தான் தாய் என்பவள் இல்லையே. பெற்றவள் என்று பெருமையாக நினைக்க முடியாதபடி அவள் பெயரைச் சொன்னதும் உடல் குறுகி உள்ளம்நாணி வேதனையில் அவள் வெந்து துடிக்கும்படி செய்துவிட்டு மறைந்து விட்டாளே அவள் தாய். தன் இழி நிலையை நினைத்துக் குமுறிக் கொண்டு இருந்த அவளுக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது தலையைக் குனிந்து

கொண்டு சமாளித்தாள். 'இது போதும். வேண்டாம்' என்று மறுத்து விட்டாள்.

''வீட்டுக்கு வான்னு எத்தனையோ வாட்டி கூப்பிடுகிறேன் வர மறுக்கிறாயே. போகட்டும் நாளைக்கு நமக்கு அரைநாள்தானே ஆபீஸ்? எல்லோரும் ஜாலியா ஒரு சினிமாவுக்குப் போய்விட்டுப் பின்னர் வீட்டுக்குப் போகலாமே. ஆபீஸ் பையன்கிட்ட கொடுத்து டிக்கெட் வாங்கச் சொல்லட்டுமா''...அவள் தோழி விடவில்லை; தொண தொணத்தாள்.

வீட்டில் பெரியம்மாவிடம் சொல்லாமல் அவள் சினிமாவுக்குப் போய் வந்தால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.

ஓய்வு நாளில் வீட்டு வேலைகள் வேறு இருக்குமே. அவள் எப்படிக் கிளம்ப முடியும்? ஊஹூம்! என்று தலையை அசைத்தாள். ''அவளைப் போய் நீ ஏன் கூப்பிடரே. அவளால் முடியாதே நாள் முழுவதும் அவளுக்கு வீட்டிலே வேலை கிடக்கும், தெரியாதா உனக்கு? அவள் அவுங்க வீட்டிலே ஒரு சின்டரில்லா'' சங்கரி குரும்பாகச் சொல்லிவிட்டு கலீர் என்று சிரித்தாள். மற்றவர்களும் சிரித்தார்கள். ஆனால் மனோகரிக்கு அது வேடிக்கையாகவே இருக்கவில்லை. கூடச் சேர்ந்து சிரிக்க முடியாது துக்கம் தொண்டையை அடைத்தது. ஓவென்று அழுது விடும் அளவிற்கு அவள் ஒரு சின்னப் பிள்ளையுமல்ல. பொங்கி எழுந்த ஆத்திரத்தையும் துயரத்தையும் அடக்கிக் கொண்டாள். ''அப்படித்தான் வச்சுக்கோங்களேன்'' மனத்தாங்கலுடன் சொன்னாள்.

'சின்டெரெல்லா என்பவள் சாதாரணப் பெண் இல்லை; உலகப் புகழ்பெற்ற கதாநாயகி ஞாபகமிருக்கட்டும். யார் கண்டா? அவளுக்கு வாச்சது போல ஒரு அரசகுமாரன் உன்னைத் தேடிக் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை' கேலி செய்தாள் புனிதா. மீண்டும் சிரிப்பு.



மனோகரிக்கு தாளமாட்டாத வேதனை. அவர்களது வேடிக்கைப் பேச்சை ரசிக்க முடியவில்லை. விரைவாக உணவை முடித்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

மறுநாள் பகல் ஆபீஸ் முடிந்ததும் சாப்பாட்டறைக்குள் கூடிய பெண்களிடம் ஏக பரபரப்பு முதல் நாள் திட்டப்படி அவளைத் தவிர அனைவரும் சினிமாவுக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தனர். அவசரமாக முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு புனிதா காம்பாக்ட் கண்ணாடியில் முகத்தைப் பார்த்த வண்ணம் லேசாகப் பவுடரை ஒத்திக் கொண்டிருந்தாள். சங்கரி கூந்தலை வாரி முடித்துக் கொண்டு புடவையை சீராக்கி அணிவதில் முனைந்திருந்தாள். இடையே அவர்களின் பேச்சும் சிரிப்பும் அவர்கள் எழுப்பிய கூச்சலும் அறையை இரண்டுபடுத்திக் கொண்டிருந்தன.

அவர்கள் அனைவரும் ஏறக்குறைய அவள் வயதை ஒத்தவர்கள். அவளைப் போலவே குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன் வந்தவர்கள். ஆனால் அவர்களைப்போல் மனம்விட்டு சிரிக்கவும் ஓய்வு நேரத்தை உல்லாசமாகப் போக்கவும் அவளுக்கு உரிமை இருக்கவில்லை தன் அவல நிலையை எண்ணிய மாத்திரம் வேதனை பாராங்கல்லாக நெஞ்சை அழுத்தவே அவள் அங்கு நிற்க மனமின்றி வெளியே நடந்தாள். வீட்டிற்கு விரைவாகப் போக வேண்டும் என்ற விருப்பமும் அவளுக்கு இருக்கவில்லை. அங்கு மட்டும் அவளுக்கு என்ன இன்பம் காத்திருக்கிறது? சின்னஞ்சிறு வயதிலேயே ஏமாற்றத்தையும் துக்கத்தையும் தந்து விட்ட தன் வாழ்க்கையை எண்ணி வெறுப்பும் துயரமுமாக அவள் மெல்ல பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

பட பட பட்...காதுகளைச் செவிடாக்கிக் கொண்டு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவள் அருகே வந்து நின்றது திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள் அவள். வாகனத்தின் மீது கம்பீரமாக அமர்ந்திருந்த வாலிபனைக்

கண்டதும் அவள் நெஞ்சம் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது. இனம் விளங்கா இன்ப உணர்வில் மெய்பதற அவள் நின்று விட்டாள்.

''ஹலோ மிஸ் மனோகரி! வீட்டுக்குக் கிளம்பி வீட்டீங்களா?''

அரவிந்தகுமார் அவளைக் கண்களால் ஊடுருவிக் கொண்டு புன்னகைத்தான்.

அவளுக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.

சிரித்துக் கொண்டே, அவளை ஆசையுடன் விழுங்கிய—அந்தக் கண்களை நேருக்கு நேர் சந்திக்க அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''ஆமாம்!'' என்றாள் தெருவைப் பார்த்தபடி.

''உங்களை ஏற்கெனவே எங்கேயோ பார்த்தது போல் இருந்தது. எங்கே பார்த்தோம் என்று மண்டையைக் குடைந்து கொண்டிருந்தேன் இப்போதுதான் விளங்கியது. சமீபத்தில் நான் பார்த்த தமிழ் படத்தின் கதாநாயகி உங்களைப் போலத்தான் ஒடிய ஒடிய உயரமாக...'' அவன் முடிக்காது மோகனமாக முறுவலித்தான்.

மனோகரி வெட்கி முகம் சிவந்து நெஞ்சு துடிக்க மெய் சிலிர்த்து விட்டாள். இதுவரை அவளுக்கு நினைவு தெரிந்த வரை எந்த ஆடவனும் அவளிடம் அப்படித் துணிவாகப் பேசியதில்லை. அவனது புகழ்ச்சி தேனாக இனித்தது. தலையைக் குனிந்து கொண்டு அயர்ந்து போய் நின்றாள்.

''கோவிச்சுக்காதீங்க நான் எப்போதும் தமாஷாக ஏதோ மனம்விட்டு பேசுகிறவன். உங்க குரல் டெலிபோனில் ரொம்ப இனிமையாக ஒலிக்கிறது. மானேஜர் அதை உணர்ந்துதான் உங்களை இந்த வேலையில் அமர்த்தியிருக்கிறார்னு சொல்லத்தான் உங்களை நேரில் சந்திக்க நாலு நாளாக முயற்சி பண்ணிகிட்டிருந்தேன்.''

''தாங்க்யூ'' என்றாள் அவள் முடிவில்.



அதற்கு மேல் பேசுவதற்கு அவனுக்கு விஷயம் ஏதும் இருக்கவில்லை. மீண்டும் ஒரு முறை அவளைக் கண்களால் விழுங்கி விட்டு ''திங்கட்கிழமை மறுபடியும் சந்திப்போம்... வரட்டுமா...'' என்று கிளம்பி விட்டான்.

பஸ் பிரயாணத்தின் போதும், வீட்டில் சாப்பிடும் போதும், வேலைகள் நடுவிலும், உறக்கத்திலும் அவளுக்கு அவன் நினைப்பு அடிக்கடி வந்து கொண்டே இருந்தது. களை பொருந்திய அந்த முகத்தை பல முறை மனக் கண்களால் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு அவனை மிகவும் பிடித்து விட்டிருந்தது அவனுக்கு கட்டாயம் பிடித்து விட்டிருக்கும். இல்லா விட்டால் வலிய வந்து பேச முற்படுவானா?

ஆபீஸிலே அரைகுறையாகப் பேசியதும் அவள் காதுகளில் விழத்தான் செய்தன. ''அவனுக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லையாம். மானேஜருக்கு தூரபந்துவாம். வேலையில் கெட்டிக்காரனாம். பெற்றவங்களுக்கு ஒரே பிள்ளையாம்...

''பால்காரன் வந்துகூடப் போய்விட்டான். இன்னமும் நீ எழுந்திருக்கலை. கூப்பிடறது காதில் விழலையா இல்லாட்டி வேணும்னு செய்யற காரியமா? 'நாளைக்கு சித்த முன்னாடியே எழுந்திரு. நிறைய வீட்டு வேலை கிடக்கு. வனிதாவைப் பெண் பார்க்க வரப்போகிறாங்கணு' நேத்தே படிச்சுப் படிச்சுச் சொன்னேன் தரித்திரம் தூங்கறா...மனோ...மனோ எழுந்திரு...'' பெரியம்மா நாகமணி கோபத்துடன் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள்.

## 2

ஞாயிற்றுக்கிழமை பகல் உணவிற்குப் பின்தான் நல்லசிவத்திற்குக் காலைப் பத்திரிகை கிடைக்கும். 'பேப்பர்' என்று கூவிவிட்டு பையன் விசிறி எறிந்து விட்டுப் போகும் பத்திரிகையைக் கழுகுபோல் வனிதா கொத்திக்

கொண்டு ஓடிவிடுவாள். அவள் முதல் பக்கத்திலிருந்து கடைசிவரை படித்துக் கரைத்துக் குடித்த பின்னர்—இளையவள் எடுத்துக் கொள்வாள். லாவணி முக்கியமாக மணமக்கள் தேவை பகுதியை ஒன்றுவிடாமல் படித்துவிட்டு விமரிசனம் செய்யத் தொடங்கி விடுவாள். அவளுக்குப் பின்னர் நாகமணி பத்திரிக்கையுடன் உட்கார்ந்து விடுவாள். சாப்பிட்டதும் கையைக் கழுவிக்கொண்டு மூலையில் அசட்டையாகக் கிடக்கும் பத்திரிக்கையை எடுத்துக் கொண்டு வராந்தாவிற்குப் போய் விடுவார் நல்லசிவம். மூவரின் கைகளில் அகப்பட்டு பத்திரிக்கை இதற்குள் தலைகீழாக மாறி பக்கம் தவறிக் கசங்கிய நிலையில்தான் அவரிடம் வந்திருக்கும். சூடான செய்திகள் அதனின்று பறந்து விட்டன போன்ற ஒரு ஏமாற்றத்துடன்தான் அவர் படிப்பார்.

ஒவ்வொரு நாளும் பையன் கொண்டு வந்து மடிப்புக் கலையாது விசிறி எறியும் பத்திரிக்கையை எடுத்துத் தாமே முதலில் பிரித்துப் படிக்க ஆவலால் துடிப்பார். ஆனால் வெளியே தெரிவித்துக் கொண்டதில்லை. வீட்டில் அவருக்கு அத்தனை சுதந்திரம் இருந்ததில்லை வீட்டில் என்ன? வெளியிலும் கிடையாது. இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே அவருக்கும் சுதந்திர உணர்விற்கும் காததூரம். சின்ன வயதில் அவர் அப்பா கிழித்த கோட்டைத் தாண்டியவர் இல்லை. திருமணத்திற்குப் பின்னர் மனைவி அந்தக் கோட்டைக் கிழித்தாள். ஆபீஸிலும் நமக்குக் கீழ் உள்ளவர்களிடம் கருணை; மேலே இருப்பவரிடம் பயம். எல்லோராலும் நசுக்கப்பட்டு தலைநிமிர பயந்து வாழும் அழுத்தப்பட்ட மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர் அவர்.

வழக்கம்போல் அன்று வாயில் வராந்தாவிலேயே உட்கார்ந்து பத்திரிக்கையைப் புரட்ட முடியவில்லை. காலையில் ஆரம்பித்து ஓயாது கொட்டிய மழை இப்போது 'பிசு பிசு' என்று தூராத மழைத்துளிகளை உதிர்த்துக் கொண்டிருந்தது.



சாரலில் வாயில் வராந்தா முழுவதும் நனைந்து விட்டிருந்தது. பத்திரிகையைத் தூக்கிக் கொண்டு துண்டால் முகத்தைத் துடைத்தபடி முன்னறையில் கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தார். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். திடுக்கிட்டுப் போனார். அவர்கள் வீடு இருந்த தெரு ஒரே வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் தண்ணீர் வடிந்தாக வேண்டும். பெண் பார்க்க வருகிறவர்கள் நீந்திக் கொண்டா வர முடியும்? அட கடவுளே! இன்று பார்த்துத்தான் மழை பெய்து தொலைக்க வேண்டுமா...எரிச்சலுடன் பத்திரிகையைப் புரட்டினார்.

அவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். நாகமணி கேட்கவில்லை. அந்த வருஷந்தான் அவர் வீட்டைக்கட்டி முடித்துவிட்டிருந்தார்.

விஸ்வா நகர் கொஞ்சகாலம்வரை எருமை மாடுகளுக்கும் வரட்டி தட்டி விற்பனை செய்யும் பெண்களுக்கும் அடைக்கலமளித்துக் கொண்டிருந்த பொட்டல் பூமி. அதனுடைய சொந்தக்காரன் திடீரென்று விழித்துக்கொண்டு அதைத் துண்டு போட்டு விற்கத் தொடங்கினான். தமது கையிருப்பு முழுவதையும் போட்டு ஒரு கிரவுண்ட் பூமியை நல்லசிவம் வாங்கிப் போட்டிருந்தார். நாகமணிக்கு சொந்த வீடு வேணும் என்ற ஆசை. அவர் பிறந்த வீட்டில் அண்ணன் தம்பிமார்கள் பங்களா வாசிகள். அவள் உபத்திரவம் தாங்காது தாம் வேலை செய்த கம்பெனியில் கடன் வாங்கி நாகமணியின் நகைகளை விற்று எல்லாவற்றையும் திரட்டி வீட்டைக் கட்டி முடித்திருந்தார். அந்த அயற்சி தீருமுன் மகளுக்குக் கல்யாணம் என்றால் சுலபமாக முடியும் காரியமா? ஆனாலும் அவள் கேட்கவில்லை. அந்த வருஷமே கல்யாணத்தையும் முடிக்க வேண்டும் என்று ஒரே பிடிவாதமாக இருந்தாள்.

பிள்ளை வீட்டவர்கள் பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகித் தொடர்ந்து ஏழு பேருக்குமேல் வந்து போய்விட்

டனர் ஒன்றும் ஒத்து வரவில்லை. படிப்பு, பண விஷயம், அந்தஸ்து, அழகு என்று ஒவ்வொன்றும் அடிபட்டுப் போயின. பெண்ணைப் பார்த்துவிட்டுப் போக அவள் என்ன பொருட்காட்சி சாலையில் வைத்துள்ள அதிசயப் பொருளா? அதனால் எத்தனை செலவு உடல் அயற்சி, மன உளைச்சல். வருஷ ஆரம்பத்திற்குள் மூன்று இடத்திலிருந்து வந்து போயிருந்தார்கள். ஒரு வரனுக்குப் பத்தாயிரம் ரூபாய்களை வரதட்சணையாக கூசாமல் கேட்டார்கள். அதற்குப் பின் கல்யாணச் செலவையும் கணக்குப் பார்த்துவிட்டு அந்த வரனைக் கைநழுவ விட்டார். அடுத்தபடி வந்தவன் பெண் கருப்பு என்று கிளம்பி விட்டான். ஆனால் கூட வந்தவர்கள் கூஜா காப்பியையும், தட்டு பஜ்ஜியையும் காலி பண்ணியதில் குறைவில்லை. இப்போது வரப் போகிறவர்கள் என்ன வெடி குண்டைத் தூக்கிப் போடப் போகிறார்களோ? கவலையுடன் அவர் தாடையைச் சொரிந்து கொண்டு தெருவை வெறித்தார்.

உள்ளேயிருந்து வெங்காயப் பக்கவடா எண்ணெயில் வறுபடும் வாசனை முன்னறையில் வந்து வீசியது. வரப்போகும் பிள்ளை வீட்டவர்களைத் திருப்தி செய்ய நாகமணி அடுப்புடன் போராடிக் கொண்டிருந்தாள்.

'பிஸ்கட்டும் கூல்டிரிங்கும் கொடுத்தால் போதாதா? அவர் சொல்லிப் பார்த்தார். அவள் சண்டைக்கே வந்துவிட்டாள். ''வரப்போகிறவர்கள் பெரிய இடத்தைச் சேர்ந்தவங்க. பையன் பிசினஸ் மேனேஜ்மெண்ட் பட்டம் பெற்றவன் கை நிறைய சம்பாதிக்கிறான் சொந்த வீடு, கார், நல்ல இடம் வெங்காயப்பக்கவாடா, ரவாகேசரி, காப்பின்னு ஏதாவது கொடுக்காட்டி நல்லா இருக்குமா?'' பற்களைக் கடித்தாள் அவள் கோபத்துடன்.

அன்று பகல் ஆபீஸின் உணவு வேளையின்போது கடைத் தெருவுக்கு ஓடி அவள் கேட்டிருந்த சாமான்களை வாங்கிக் கட்டிக் கொண்டு வந்தார்.

கூட வேலை செய்த குமாரசாமிக்கு கூரிய கண்கள். மேஜைமீது ஒரு பக்கம் அவர் வைத்திருந்த சாமான் பொட்



டலத்தைப் பார்த்துவிட்டான். விரலால் காகிதத்தை லேசாகக் கிள்ளி பரிசோதித்துவிட்டான் அதிகப் பிரசங்கி. முந்திரி பருப்பு, பச்சைக் கற்பூரம்...என்னய்யா? யாருக்கு பர்த்டே? ஹி...ஹி... என்று பற்களைக் காட்டினான்.

நல்லசிவம் அப்பாவி மனிதர். சட்டென்று பொய் சொல்லவே தெரியாது. ''பிள்ளைவீட்டவங்க என் மூத்த மகளை இன்னிக்குப் பார்க்க வராங்க'' என்றார்.

உடனே ஆரம்பித்து விட்டான் தொணதொணக்க. ஜாதகம் அது இதெல்லாம் பார்க்கிறோம், ஒரு முக்கிய சங்கதியை நாம் கவனிக்கிறதில்லை. என் சிநேகிதன் மகன் ஒரு டாக்டர். அவன் சொல்கிறான், ஜாதகம் பார்க்கிறதைவிட பிள்ளை பெண் இருவருடைய இரத்தத்தையும் பரிசோதித்துக்கோளாறு ஏதுமில்லைன்னு தெரிஞ்சுக்கிறதுதான் புத்திசாலித்தனம்னு சொல்றான். நல்லசிவன், நீங்க ஆர் எச் பாக்டர் என்பதைப் பத்தி கேள்விப்பட்டிருக்கிறீரா? ஆசாமி மீதிப்பொழுதை அறுத்துத் தீர்த்தான்.

வருஷ ஆரம்பத்தில் பெண் பார்க்க வந்தார்கள் ஒரு பிள்ளை வீட்டார். பேச்சுவாக்கில் பையனுடைய தாயார் காலமாகி விட்டார்கள் என்பதை நல்லசிவம் அறிந்து கொண்டார். வாயை மூடிக்கொண்டு இருந்திருக்கலாம். யோசனை இல்லாமல் கேட்டுவிட்டார்.

''அவங்க என்ன வியாதியிலே இறந்து போனாங்க?''

பையனுக்கு மூக்குமேல் வந்துவிட்டது கோபம்.

''இந்த மாதிரி கேள்விகளுக்குப் பதில் சொல்ல நான் என்ன இன்ஷூரன்ஸ் செய்து கொள்ளவா வந்திருக்கிறேன்'' பட்டென்று கேட்டுவிட்டான்.

பிள்ளை வீட்டவர்கள் மனத்தாங்கலுடன் போய்விட்டனர்.

யதார்த்தமாகக் கேட்ட கேள்விக்கு அப்படி முறைத்துக் கொண்டார்கள். இப்போது வருகிறவனை ரத்த பரிக்ஷை செய்து கொள்வியா? என்று கேட்டால்

என்ன நேரும்? அடிக்க வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

''இந்தாங்க உங்களைத்தானே. குங்குமப் பூவைக் காணோமே? வாங்க மறந்திட்டீங்களா?'' சமையலறையிலிருந்து ஓங்கிக் குரல் கொடுத்தாள் நாகமணி.

நல்லசிவத்திற்கு அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. பீரோவில் தொங்கிக் கொண்டிருந்த கோட்டுப் பையைத் துழாவி அந்தச் சிறு பொட்டலத்தை எடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்தார். ''குங்குமப்பூ இல்லாம கேசரி பண்ணினால் தொண்டையில் இறங்காதா?'' கேட்க வேண்டுமென்ற ஆத்திரம். ஆனால் கேட்கவில்லை. மறுபடியும் அவர் முன்னறைக்குப் போய் தமது கவலைகளுக்குள் மூழ்கினார்.

''ரவா கேசரியைக் கிளறி சில்வர் டப்பாவுக்குள் எடுத்து வைத்தாள். வியர்வை வழிந்த முகத்தை புடவைத் தலைப்பால் துடைத்துகொண்டு நாகமணி திரும்பினாள். காலையிலிருந்து ஒய்வின்றி வீட்டு வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள் மனோகரி. காலையில் குளித்துவிட்டு உடுத்திக் கொண்ட வாயில் புடவை கொஞ்சம்கூட அலங்கவில்லை. அப்போது வாரிப் பின்னவிட்டுக்கொண்ட கூந்தல் சிறிதும் கலையவில்லை. நெற்றியில் பளிச்சிட்ட குங்குமப்பொட்டு—கழுத்திலே பாசிமணி மாலை—காதுகளில் கவரிங்தோடு. கைகளில் பிளாஸ்டிக் வளையல்கள்-அவள் உள்ளே வந்து நின்றதுமே நிலவு பளிச்சிட்டது போன்ற பிரமிப்பு. ஓரகத்தியின் மகளுக்கு இயற்கை வாரி வழங்கி விட்டிருந்த அழகைக் கண்டு அவள் மனம் பற்றி எரிந்தது. அவளுக்கும் இருக்கிறார்களே பெண்கள். அதுவும் மூத்தவள் வனிதா இயற்கையாக அழகில்லை என்றாலும் செயற்கையாக இருப்பதை மிகைப்படுத்திக்கொள்ளத் தெரியாத மூடம் நாகமணி பற்களை ஆத்திரத்துடன் கடித்துக் கொண்டாள்.

நிறம்தான் மட்டமென்றால் ஒரு பாட்டு-திறமை ஏதாவது உண்டா. மீண்டும் அவளது பார்வை தயக்கத்துடன் நின்ற மனோகரிமீது லயித்தது. திடீரென்று பொங்கி எழுந்த கோபம் வார்த்தைகளாய் வெடித்தன.



''இப்பவே சொல்லிட்டேன். அவங்கள்ளாம் வந்திருக்கும்போது நீ அங்கே வந்து முன்னைப் போல நின்னியோ தெரியும் சங்கதி?''

அநியாயமான பழிச்சாட்டலைக் கேட்டுக்கொண்டு இருக்க மனோகரியால் முடியவில்லை.

''போன தடவை நான் வேணுமின்னு வரலை பெரியம்மா வனிதாவுக்குத் தனியாக வீணை வாசிக்க பயமாக இருந்தது. என்னையும்கூட வாசிக்கக் கூப்பிட்டா.''

''ஏதோ ஒரு கதை. அதுபோல இந்தத் தடவை வேண்டாம். நீ சமையலறையிலிருந்துகிட்டு காரியங்களைக் கவனிச்சா போதும்.''

''சரி பெரியம்மா,'' மனோகரி முகம் வாடிப் போயிற்று. அவள் சட்டென்று மற்ற இரு பெண்களும் இருந்த அறைக்குள் புகுந்தாள்.

வனிதா படுக்கை மீது உட்கார்ந்திருந்தாள். லாவணி பீரோவைத் திறந்து புடவைகளை எடுத்து படுக்கை மீது போட்ட வண்ணம் இருந்தாள். அவர்களுக்கு உடுத்திக் கொள்ள எத்தனை புடவைகள் இருந்தன. என்ன புடவை உடுத்திக் கொள்வது. எப்படி அலங்கரித்துக் கொள்வது என்ற ஆராய்ச்சியில் அவர்கள் மூழ்கிக் கிடந்தனர்.

''அக்கா, அவங்க விட்டிலே உன்னைப் பாடச் சொன்னால் என்ன செய்வே? வீணை வாசின்னு கேட்டால்''... பயமுறுத்தினாள் லாவணி.

வனிதாவுக்குத் திறமையற்ற தன்னைப் பற்றிய அவநம்பிக்கையில் எழுந்த ஆத்திரம். அவள் கடுமையாக மனோகரியைப் பார்த்தாள்.

''வீணை வாசிக்க துணைக்கு உன்னைக் கூப்பிடுவேன்னு நினைக்காதே.''

''எனக்கு வீணை வாசிக்கத் தெரியாது-பாடத் தெரியாது-ஆடத்தெரியாதுன்னு பட்பட்னு நேரே அந்த

மாப்பிள்ளையிடமே சொல்லிவிடுவேன். எவக்கொண்ணும் பயமில்லை'' முகத்தை ஆட்டினாள்.

''சமைக்கத் தெரியாதுன்னு மட்டும் சொல்லிடாதே அக்கா. அவன் ஓட்டம் பிடிச்சுடுவான். ஆடலும் பாடலும் இல்லாட்டி போகட்டும். மனுஷனுக்குச் சோறு முக்கிய மாச்சே...''

களுக்கென்று லாவணி சிரித்தாள். மனோகரியும் கூடச் சேர்ந்து சிரித்துவிட்டாள்.

முத்துக்கள் போன்ற அவளது வரிசைப் பற்களையும், சிரிப்பில் கன்னம் குழிந்த அழகையும் கண்டு வனிதா உள்ளுக்குள் வெகுண்டாள். இந்த சாகசக்காரியால் தானே முன் வந்த ஒரு நல்ல வரன் நழுவிப் போய் விட்டது? அந்த நினைவில் அவள் நெஞ்சம் பதைத்தது.

சில மாதங்களுக்கு முன்னர் அவளைப் பெண் பார்க்க ஒரு பிள்ளை வீட்டவர்கள் வந்திருந்தனர். வழக்கம்போல் அம்மா சுறுசுறுப்பாக பலகாரங்களைத் தயாரித்து வைத்திருந்தாள் வாழைக்காய் பஜ்ஜியையும் காசி அல்வாவையும் ஒரு கை பார்த்த பின்னர் எல்லோரும் முன்னறையில் அமர்ந்தனர் அப்பொழுதுதான் மாப்பிள்ளையை வனிதா நன்கு பார்க்க முடிந்தது. நல்ல சிவப்பு சுருண்ட முடி சிரிப்பு நிழலாடிய கண்கள். அம்பத்தூரில் ஏதோ ஒரு பெரிய ஸ்தாபனத்தில் வேலை பார்க்கிறான். நாலு இலக்கத்திற்குள் அடங்கிய சம்பளம் என்று பேசிக் கொண்டனர் அவளுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

''பெண்ணுக்குப் பாடத் தெரியுமா?'' வந்த பெண்களில் ஒருத்தி கேட்டாள்.

வனிதா நடுநடுங்கிப் போனாள்.

''தெரியும். ஆனால் ரெண்டு நாளா அவளுக்குத் தொண்டை கட்டிக் கொண்டிருக்கு'' நாகமணி சமாளித்தாள்.

''வாத்யம் ஏதாவது-வீணை கிணை வாசிக்கத் தெரியுமா?'' வந்தவள் விடவில்லை. தொடர்ந்து கேட்டு விட்டாள்.



மூலையில் தூங்கிக் கொண்டிருந்த வீணைப் பெட்டியைத் திறந்து வீணையைத் தூக்கிக்கொண்டு வந்து நல்ல சிவம் ஜமக்காளத்தின் மீது வைத்து விட்டார். பயத்தில் வனிதாவுக்கு வியர்த்து விட்டது.

''உன் வீணையையும் எடுத்துக் கொண்டு வந்து வச்சு, என்னோட கூட வாசி. எனக்குப் பயமாக இருக்கு' மனோகரியின் கரத்தைப் பிடித்து கொண்டு கெஞ்சினாள்.

சுருதி கூட்டி இருவரும் வாசிக்கத் தொடங்கினார்கள்.

''வெண்ணிலாவும் வானும் போல-வீரனும் வாளும் போல'' என்ற பாடலை அற்புதமாக இசைத்தாள் மனோகரி.

வியப்புடன் அவள் மீது படிந்த மாப்பிள்ளையின் கண்கள் வேறு எப்புறமும் திரும்பவில்லை. விடைபெற்றுக் கொண்டு அவர்கள் கிளம்பினார்கள். இரண்டு தினங்களுக்குப் பின்னர் பிள்ளையின் தந்தையிடமிருந்து சுருக்கமாக ஒரு கடிதம் வந்தது.

''உங்களுடன் சம்மந்தம் செய்துகொள்வது பற்றி எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி வீணை வாசித்த உங்கள் இளையமகள்-சிவப்புச் சேலை உடுத்தியிருந்த அந்தப் பெண்ணைத்தான் என் மகனுக்குப் பிடிக்கிறதாம். எங்களுக்கும் அவளைத்தான் பிடித்திருக்கிறது. உங்களுக்குச் சம்மதம் என்றால் மேலே பேச்சுவார்த்தைகளைத்தொடரலாம்...''

அன்று அவர்கள் வீட்டில் ஒரு பூகம்பம் ''புத்தியில்லாத பெண்ணே! இவளை அழைச்சிட்டுப் போய் நிக்காதேன்னு ஜாடையாகச சொன்னேனே, கேட்டியா. இப்பப் பாரு என்ன நடந்தது? நாகமணி கர்ஜித்தாள்; ஓலமிட்டாள்.

''தன்னைப் பார்க்க வந்தவன் இப்படி மனம்மாறி அவள் பக்கம் தாவிவிட்டானே?'' என்று வனிதாவுக்கு பொறாமை; ஆத்திரம்

அவள் கூப்பிட்டா உனக்கு எங்கேடி புத்தி போச்சு? வீணையைத் தூக்கிட்டு வந்து வாசிச்சு வந்நவளை பயக்க

கிளம்பிட்டியே சனியன். எங்கே போகும் ஆத்தாளின் கெட்ட புத்தி? நல்லதுக்கு நரி முட்டையிடலை-இவ நம்ப குடும்பத்தைக் கெடுக்க வந்த கொள்ளிவாப் பிசாசு...சே! அப்பால் போ. இங்கே நிக்காதே''...நாகமணி சினத்தைக் கட்டுபடுத்த முடியாது ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டாள்.

அப்பப்பா! அதன் வலியால் துடித்துப்போன மனோகரி கைகளால் காதுகளை மூடிக்கொண்டு அறைக்குள்ளே போய் சுருண்டு விழுந்து விட்டாள். வெகுநேரம் அவள் தனியே விம்மி அழுது கொண்டிருந்தாள்.

ஒரு தடவை ஏற்பட்ட அனுபவம் அவளுக்குப் போதியதாக இருந்தது. அன்று மாலை மழையையும் பொருட்படுத்தாது கிளம்பிவிட்ட மாப்பிள்ளை வீட்டவர்கள் முன்னறையில் குவிந்தனர். சமையலறையில் மறைவாக இருந்தபடி மரத்தட்டில் காப்பி பலகாரங்களை ஏற்றி மனோகரி தங்கை லாவணியிடம் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

முன்னறையில் பேச்சும் சிரிப்பும் காதைப் பிளந்தன. முன்பு ஒரு பொங்கலுக்கு வாங்கியிருந்த ஆரஞ்சு வண்ண பனாரஸ் சேலையை உடுத்திக் கொண்டு அம்மாவின் நெக்லசைப் பூட்டிக் கொண்டு அறையை விட்டுப் புறப்பட்டாள் வனிதா. இனம் விளங்கா ஒரு உணர்வில் மனோகரியின் நெஞ்சம் படபடத்தது. முகத்திலே அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டு மெல்ல வெளி வந்து முன்னறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

நாகமணி செய்த ஆர்ப்பாட்டத்திற்கு மாப்பிள்ளை அத்தனை பெரிய அழகனல்ல புது நிறம். நீண்ட முகம்; சற்று முன் தூக்கிய பற்கள். மனோகரி அசட்டையாகத் தோள்களைக் குலுக்கினாள். ஏனோ அதுசமயம் அவள் மனத்தில் அரவிந்தகுமாரின் நினைப்பு எழுந்தது. அந்தச் சுருண்ட முடி, இருதா அரும்புமீசை மயக்கும் சிரிப்பு எல்லாம் தொடர்ந்து நினைவில் எழவே இன்பச்சிலிர்ப்பில் தன்னை மறந்து நின்றாள். நாகமணி எதற்காகவோ முன்



னறையை விட்டு திரும்புவதைக் கண்டு சட்டென்று சமையலறைக்குள் ஓடி வந்து மறைந்து கொண்டாள்.

பாடுபட்டு நாகமணி செய்திருந்த பலகாரங்கள் வீணாகவில்லை. அதிகப்படியாக வாங்கியிருந்த பால் பொட்டலங்களும் மிஞ்சவில்லை. வெகு நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டுத்தான் பிள்ளை வீட்டவர்கள் நிதானமாகக் கிளம்பினார்கள் எல்லோர் முகத்திலும் திருப்தி நிலவி நின்றது. ''இந்த வரன் முடிந்து விட்டால்...'' மனத்திற்குள் நாகமணி பிரார்த்தித்துக் கொண்டாள்.

சில தினங்களுக்குப் பின்னர் ஒரு கடிதம் வந்தது. கணவன் வரும்வரை நாகமணி பொறுமையாகக் காத்திருந்தாள். ஆபீஸிலிருந்து நல்லசிவம் வந்தார்; சிறிது பொழுதில் மனோகரியும் வந்தாள். காப்பியுடன் பகல் வந்த கடிதத்தையும் கணவனிடம் கொடுத்தாள் நாகமணி. படித்தவர் முகம் சுருங்கியது.

''பிள்ளையைப் பெற்றவனுட்டா என்ன வேணுமானாலும் எழுதலாம் என்கிற திமிர் சிலருக்கு''—கோபத்துடன் அந்தக் கடிதத்தை வீசி எறிந்தார்.

நாகமணி எடுத்துப் படித்தாள்.

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் நடத்தலாம்னு சொல்வார்கள். ஆனால் நீங்க இப்படி முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் ஆசாமின்னு நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கு பணம், அந்தஸ்து அழகு இதெல்லாம் இரண்டாம் பக்ஷம். பெண் நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேணும் என்பதுதான் குறிக்கோள். இதுபற்றி ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தேன். இளம் விதவையான உங்கள் தம்பி மனைவி யாருடனோ வீட்டைவிட்டு ஓடிவிட்ட செய்தியை மறைத்து உங்கள் பெண்ணை எங்கள் குடும்பத்தில் சேர்க்கப் பார்த்தீரே, நீர் நல்ல மனிதர்? உங்களைச் சந்திக்க நேர்ந்தது பற்றி நான் மிகவும் வெட்கப்படுகிறேன் நாங்கள் ஒரு கண்டத்திலிருந்து தப்பினோம். இனியாவது

வரப்போகும் மாப்பிள்ளையிடம் உண்மையைச் சொல்லி விஷயத்தை ஆரம்பியுங்கள்.''

''திமிறு பிடிச்சவன் கன்னா பின்னான்னு எழுதியிருக்கிறான்.'' முன்னும் பின்னுமாக ஆத்திரத்துடன் நல்லசிவம் உலாவினார்

நாகமணிக்குக் கோபம் ஒரு பெரும் ஆவேசமாகவே வந்துவிட்டது. பக்கத்திலே நின்று கொண்டிருந்த மனோகரியைப் பலமாகப் பிடித்து அப்பால் தள்ளினாள்.

''போனவாட்டி உன்னாலே அந்த வரன் போச்சு. இப்ப உன் அம்மா புண்ணியத்திலே இந்த வரன் போச்சு. நாக்கை பிடுங்கிக்கிறாப் போல அவன் பல கேள்விகள் வேறே கேட்டெழுதியிருக்கான். இந்த வெட்கக் கேட்டை எங்கேபோய் சொல்றது? தாயும் மகளும் எங்கள் குடும்பத்தை வேறோடு அறுக்க பூதமா புறப்பட்டிருக்கீங்க. போடி நிக்காதே. வேடிக்கை பாக்கறியா? வெட்கம் கெட்டவளே; உன் நிலையில் நான் இருந்தால் இப்படி ஒரு தாயை படைச்சதுக்கு எங்கேயாவது குளம் குட்டையிலே விழுந்து உசிரை விட்டிருப்பேன்-'' உரத்த குரலில் கத்தினாள்.

சுவரின் மீது இடித்துக் கொண்டு நின்ற மனோகரிக்குப் பேசவே முடியவில்லை. அவமானம், துக்கம் வேதனை எல்லாம் ஒருசேர ஆட்டிப் படைக்க புயலில் அகப்பட்ட சிறகாய் துடித்துக் கொண்டு நின்றாள். 'அம்மா'...என்று அலறி அழவேண்டும் போன்ற துக்கம்-அது தொண்டையை அடைத்துக் கொண்டு நின்றது.

## 3

அன்று இரவு மனோகரி வெகுநேரம் உறக்கமின்றி அழுது கொண்டிருந்தாள். இடை இடையே பெரியதாக எழுந்து உடலைக் குலுக்கிய விம்மலை அடக்கிக் கொண்டு அவள் சப்தமிடாது கண்ணீர் உகுத்தாள். தலையணை முழுவதும் நனைந்து விட்டது. தலை பாரமாகக் கனத்தது.



நெஞ்சு வேதனை தாளாது வெடித்து விடும்போல இறுகியது. அவளது பெரியம்மா சொன்னபடி இந்தக் கேவலமான வாழ்வு அவளுக்குத் தேவைதானா!

மீண்டும் பொல பொலவென்று கண்ணீர் கொட்டியது மூக்கை நீர் அடைத்துக் கொள்ளவே, மூச்சுவிட முடியாது அவள் எழுந்து உட்கார்ந்தாள். அருகே உறங்கிக் கொண்டிருந்த வனிதாவுக்குத் தெரிந்துவிட்டால் கோபிப்பாள் என்ற பயம். அன்று இரவு சாப்பாட்டின்போது அவள் பரிமாறுகையில் எரித்து விடுகிறவள் போல பலமுறை வனிதா அவளைப் பார்த்தாள்.

''என் வாழ்க்கைக்கு நீ பெரிய இடையூறாக இருக்கிறியே? எங்கேயாவது நீ ஒழிந்து போகக் கூடாதா?'' பேசாமல் பேசியது அவள் கடும் பார்வை.

லாவணிக்கு எப்பொழுதுமே எல்லாமே வேடிக்கை விளையாட்டு பொறுப்பற்ற வயது.

"எல்லோரும் உன்னைப் போட்டு சதாய்க்கிறாங்க இல்லையா? என்ன செய்கிறது, பெத்தவங்க செய்த பாவம் பிள்ளைகள் தலையிலேன்னு சொல்லலை கேள்விப்பட்டிருக்கே இல்லையா? ஏன் அழறே என்னைக் கேட்டா ஒரு யோசனை சொல்வேன். பேசாம முதல்ல வந்த வரனுக்கு கழுத்தை நீட்டிவிட்டு புறப்படு பிறகு எங்கள் வாழ்க்கையில் பிரச்னையே இருக்காது.'' அவள் வேடிக்கையாகச் சிரித்தாள். மனோகரியின் கன்னத்தை லேசாகத் தட்டிவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

நல்லசிவத்திற்கு அன்று இரவு சாப்பிடவே மனமில்லை. அனாதையாகித் தம்மிடம் அடைக்கலமாகவிருக்கும் அந்தப் பெண்ணை உள்ளம் நோக மனைவி பேசியது அவருக்குப் பிடிக்கவில்லை. அழுது ஊதிப் போன முகத்தையும், சிவந்து விட்டிருந்த கண்களையும் பார்த்து அவர் தவித்துப் போனார். அவள் தாய் செய்த பிசகிற்கு இந்தக் குழந்தை என்ன செய்யும்? உள்ளூர வேதனைப்பட்டார். பரிதாப்பட்டார்.

"போம்மா கண்ணைத் துடைச்சிட்டு போய் சாப்
பிடு" கனிவாகச் சமாதானம் சொல்ல விழைந்தார். காளி
ரூபத்தில் வளைய வந்து கொண்டிருந்த மனைவியின்
வாய்க்குப் பயந்து மௌனமாக எழுந்து விட்டார்;

தூக்கமின்றி, மனோகரி படுக்கையில் புரண்டாள்.
அழுது ஓய்ந்துவிட்ட கண்களில் எரிச்சல் ஓடி மறைந்து
விட்ட தாய்மீது உள்ளத்தில் எரிச்சல். அவள் சிந்தனை
எங்கேயோ ஓடிச் சென்றது.

அவளுக்கு அவள் தாயின் முகம் நன்றாக நினைவில்
இருந்தது. அவள் தாய் சுமதி வீட்டை விட்டு மறைந்த
பொழுது மனோகரிக்கு வயது பனிரெண்டு. பக்கத்திலி
ருந்த பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். சுமதி
கொஞ்சம் தொலைவிலிருந்த சங்கீதப் பள்ளி ஒன்றில்
வீணை போதிக்கும் ஆசிரியையாக வேலை பார்த்து வந்
தாள் அவளிடம்தான் மனோகரியும் மற்ற சகோதரிகளும்
வீணை வாசிக்கப் பயின்றார்கள். மற்ற இருவருக்கும்
சங்கீதத்தில் ஈடுபாடு இருக்கவில்லை. ஆனால் மனோகரிக்கு
சங்கீத அறிவு இரத்தத்திலேயே கலந்து நின்றதொரு
சௌபாக்யமாக அமைந்திருந்தது சுமதிக்கு இனிய குரல்.
சங்கீதத்தில் ஆழ்ந்த அறிவு. சந்தர்ப்பம் சரியாக அமைந்து
விட்டிருந்தால் அவள் பெரிய பாடகியாகியிருக்கக் கூடும்.
அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவள் தாய்
வெள்ளைப்புடவைதான் அணிந்து கொண்டிருந்தாள்
நெற்றியில் திருநீறு வெறிச்சென்ற கழுத்து, கைகள்,
ஆனாலும் பளிச்சென்ற அழகான தோற்றம். இடை
வரைத் தொங்கிய கூந்தலை அவள் அள்ளி முடிந்து கொண்
டிருப்பாள் அதுவே அவள் முகத்திற்குப் பெரிய அலங்கார
மாக இருக்கும். நாகமணி போல் அநாகரீகமாக கத்திக்
கூச்சலிட மாட்டாள். பதட்டமாகப் பேசமாட்டாள்.
இரைந்து கத்தமாட்டாள். மென்மையான சுபாவம். வீட்டு
வேலைகளை அயற்சியின்றி சுறுசுறுப்பாகவும் சுத்தமாக
வும் செய்வாள்; யாரிடமும் அதிகம் பேசவே மாட்டாள்.



இன்று நடந்ததுபோல் அந்த நிகழ்ச்சிகள் எல்லாம்
மனோகரியின் நினைவில் நீர்வீழ்ச்சி வேகத்தில் வந்து
நின்றன. அப்பொழுது பெரியப்பா நல்லசிவம் மிகவும்
சாதாரண நிலையில் இருந்தார். திருவல்லிக்கேணியில்
நல்லப்பன் சந்தில் மிகவும் கிறியதொரு வீட்டில் அவர்கள்
வசித்துக் கொண்டிருந்தனர். அன்று தினம் அவள் தாயை
யும் அவளையும் தவிர மற்ற எல்லோரும் நகரத்தில்
நடந்த கண்காட்சி ஒன்றைக் காணச் சென்றிருந்தனர்.
வழக்கம்போல இல்லாது அவன்தாய் மிகவும் முகம் வாடி
சோர்ந்து காணப்பட்டாள். தட்டிலே சோற்றைப்
போட்டு குழம்பை ஊற்றிவிட்டு சுமதி அவள் அருகில்
தரையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். சோற்றைப்
பிசைந்து அள்ளி வ்ாயில் போட்டுக் கொள்ள நிமிர்ந்த
போதுதான் மனோகரி பார்த்தாள். அவள் தாய் அழுது
கொண்டிருந்தாள்.

"அம்மா? உங்களுக்கென்னம்மா? ஏம்மா அழுகி
றீங்க?" பதறிப் போனாள் அவள்.

பதிலளிக்க முடியாது விசும்பிய சுமதி மகளை இறுக்க
அணைத்துக் கொண்டாள். மனோகரிக்கும் அழுகை
வந்தது. ஏன் எதற்காக என்று புரியாமல் அவளும் கூட
விசித்து அழுதாள்: சுமதி அவள் முதுகைத் தடவிச் சமா
தானப்படுத்தி விட்டு, தன் கண்களைத் துடைத்துக்
கொண்டாள்.

"மகளே! நீ நல்லா படிச்சு முன்னுக்கு வர முயற்சிக்
கணும் நல்ல பெண்ணாகவும் இருக்கணும. பெரியப்பா
பெரியம்மாகிட்ட மரியாதையா நடந்துக்கணும் தெரிஞ்
சுதா."

'ஏம்மா இப்படி பேசுகிறீங்க..."

"பேசவேண்டிய காலம் வந்தது பேசறேன். உங்கப்பா
ஒரு நாளைக்கு வேலைக்குப் போனார். திரும்பியே வரலை.
அதுபோல எனக்கு..."

மனோகரிக்கு மனம் குழப்பியது., துக்கத்திலே அவள்
திணறினாள்.

''அம்மா உங்களுக்கு ஒண்ணும் நேராது. நிதக்கும் நான் உங்களை நல்லா வச்சிருக்கணும்னு கடவுளை வேண்டிக்கிறேம்மா-என்னம்மா அப்படி பார்க்கிறீங்க. எனக்கு பயம்மா இருக்கு'' குழறினாள்.

சுமதி பதில் பேசவில்லை; வரட்சியாகச் சிரித்தாள்

அன்று இரவு உறங்கும்போது மனோகரி பலமுறை தன் தாயின் கழுத்தை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். என்னவோ நடக்கப் போகிறது என்று புரியக் கூடாத ஒரு திகில். அவளது பிஞ்சு மனம் தவியாகத் தவித்தது.

இரண்டு தினங்கள் சென்றன. பள்ளிக்கூடத்தினின்று திரும்பிய மனோகரி தன் தாயின் வரவிற்காக பலமுறை வாயிலில் போய் எட்டிப்பார்த்தாள். மாலை மூன்று மணியிலிருந்து ஏழுவரைதான் சுமதிக்கு பள்ளியில் வேலை. அங்கிருந்து வீட்டிற்கு வருவதற்கு அரைமணியாகும், அன்று மணி எட்டு, ஒன்பது-பத்து என்று நேரம் வேகமாக ஓடியது. அவளது தாயைக் காணவில்லை.

நல்லசிவம் குறுக்கும் நெடுக்குமாகக் கூடத்தில் அமைதியின்றி நடந்துகொண்டிருந்தார் தலையில் கையை வைத்துக் கொண்டு நாகமணி சுவற்றின்மீது சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போய்பார்த்தேன்; வாச்மேன் மட்டும் வாசலில் இருந்தான். கேட்டேன். அவங்க அப்பவே போயிட்டாங்களேன்னான்..." தனக்குள் அவர் பேசிக் கொண்டார். உற்றுக் கேட்டபடி நடையில் நின்று கொண்டு இருந்தாள் மனோகரி அவள் இதயம் பயத்தில் திக்திக் என்று அடித்துக் கொண்டது

''ஒரு சமயம் சொல்லாம கொள்ளாம சினிமாவுக்கு போயிருப்பாளோ?' மனைவியிடம் கேட்டார்.

''நான் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும். அவள் ஒண்ணும் சினிமாவுக்கு போகலை திட்டமிட்டு சதி பண்ணி விட்டு போயிருக்கா. நீங்க ஒருத்தர் உலகம் தெரியாத மனுஷர்''...சீறினாள் நாகமணி.



''உரத்துப் பேசாதே! அக்கம் பக்கத்தவங்க காதிலே படப்போகுது. உண்மை தெரியாம அபாண்டமா சொன்னால் மகாபாவம்'' மனைவியை லேசாகக் கண்டித்தார்.

சில தினங்கள் சென்றன. நாகமணியின் சகோதரர்கள் மற்ற நெருங்கிய உறவினர்கள் பலர் வந்து போய்க்கொண்டிருந்தனர். போலீஸ், ஆஸ்பத்திரி என்ற பல சொற்கள் அவர்களிடையே அடிபட்டன உரத்த குரலில் தாக்கித் தார்கள் ஆனால் மனோகரியைக் கண்டதும் குரலைத் தாழ்த்திக் கொண்டு தங்களுக்குள் ரகசியம் பேசிக் கொண்டனர். தன் தாயைப் பற்றித்தான் அவர்கள் எல்லோரும் பேசுகிறார்கள் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது. ஆனால் அவள் தாய் எங்கே மறைந்து போனாள் என்பது மட்டும் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருந்தது. அச்சம், துயரம், ஏக்கம் என்ற உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவள் வளர்ந்து கொண்டு வந்தாள்.

வருஷங்கள் ஓடிச் சென்றன. கனவுகள் நிறைந்த கற்பனை உலகில் திளைத்து வரும் இளம் பெண்ணாக அவள் வளர்ந்து நின்றாள். அரை குறையாக அவள் காதுகளில் பட்ட செய்தி இப்போது அவளுக்கு உண்மை நிலையை விளக்கிவிட்டது.

அவளது விதவைத் தாய்-பெற்ற மகளை விட்டுவிட்டு காதலன் ஒருத்தனோடு வீட்டை விட்டு மறைந்து விட்டாள் என்ற பயங்கர உண்மை புலனாகியது. அப்பப்பா! அதை நினைத்து நினைத்து அவள் பட்ட வேதனை, துக்கம், அவமானம்...விவரிக்க இயலாது

யாராவது அவள் காதுபட அவளின் தாயைப் பற்றிப் பேசிவிட்டால் போதும். மனோகரி நெருப்பை மிதித்து விட்டவள் போல் நெஞ்சு பதறி, வெட்கத்தில் குறுகி, உணர்வுகள் தொய்ந்து துன்பக் கேணிக்குள் அமிழ்ந்து போய் விடுவாள். எத்தனை இரவுகள் சுமதியைப் பற்றிய சிந்தனைகள்-கண்ணீர் பெருமூச்சுகள். வெளியே சொல்

விக் கொள்ள முடியாது தாயைப் பற்றிய ரகசியத்தை உள்ளத்தில் புதைத்து வைத்துக் கொண்டு அவள் மருகினாள்-உருகினாள்-வேதனைப் பட்டாள்.

''அம்மா! ஏனம்மா இப்படி செஞ்சீங்க? என்னை பத்திக் கூட உங்களுக்கு நினைப்பு இல்லையா? இப்போ எங்கம்மா இருக்கீங்க?''-அவளது உள்ளம் ஓயாது ஓலமிட்டது.

இந்த ஒரு காரணம் அவளது இளமையின் உத்வேகத்தையே குடித்துவிட்டது. சுமதியைப் பற்றி யாராவது விசாரித்து விடுவார்களோ என்ற பயம் நிரந்தரமாக அவள் அடி மனதிலே குடிகொண்டு விட்டது. அவள் யாரிடமும் நெருங்கிப் பழக முயற்சிக்கவேயில்லை. கூடப் படித்த பெண்களுடன் பட்டும் படாததுமாகத்தான் பழகினாள். யாராவது தனியே நின்று பேசிக் கொண்டிருந்தால் தன் தாயைப் பற்றித்தான் பேசுகிறார்கள் என்ற நினைப்பில் அவள் வேதனைப்பட்டாள். தலை நிமிர்ந்து சிட்டுக் குருவி போல் உல்லாசமாகப் பறந்து திரிய வேண்டிய இளமைப் பருவத்திலே-தன்னம்பிக்கை குலைந்து தன் மனப் போராட்டங்களைப் பகிர்ந்து கொள்ளத் தோழிகள் இன்றி தனிமையிலே தவித்தாள்.

அன்பு காட்டி இரண்டு வார்த்தைகள் ஆறுதல் சொல்ல வீட்டில் யாரும் கிடையாது. வெளியே உள்ளத்துப் போராட்டங்களையும், வேதனையையும் பகிர்ந்து கொள்ள சிநேகிதி என்று ஒருத்திகூட கிடையாது. வேலைக்குப் போவது-உழைப்பது-வீட்டிற்கு வருவது-உழைப்பது இடையே பெரியம்மாவின் சுடு சொற்களைக் கேட்பது-சகோதரிகளின் கேலி மொழிகளில் மனம் புண்ணாவது சே! இதுவும் ஒரு வாழ்க்கையா? பெரியம்மா சொன்னது போல்-ஆற்றிலோ-குளத்திலோ...மேலே அவளால் சிந்திக்கவே முடியவில்லை. தூங்கவும் முடியாது புரண்டு புரண்டு படுத்தாள்.

மறுநாள் காலை அவள் வழக்கம் யோல் தனது இருக்கையில் உட்கார்ந்தாள். டெலிபோன் மணி கிணு கிணுத்தது.



''குட்மார்னிங்-முருகன் ரோட்வேஸ்.''

''காலையில் வேலை ஆரம்பிக்குமுன் உன் குரலைக் கேட்க ரொம்ப சுகமா இருக்கு தெரியுமா?'' மறுபக்கத்திலே மயக்கும் சிரிப்பு அவள் மனத்தை மெல்ல அணைத்துக் கொண்டது.

''யாரது? மிஸ்டர் அரவிந்த்குமாரா?'' கேட்குமுன் நெஞ்சு இன்பத் துடிப்பின் வேகம் கூடியது.

''இடைவெளி ஒருநாள். அதற்குள்ளே மறந்திட்டியே. ஆனால் நான் மறக்கலை'' உல்லாசமாக மறுபுறத்தில் அவன் சிரித்தான்.

முகம் சிவந்து உள்ளங்கைகள் வியர்த்து-ஒரு கணம் பதிலளிக்க முடியாது அவள் மௌனமானாள்.

இரவு முழுவதும் அவள் பட்ட வேதனை, துயரம் எல்லாம் இப்போது மாயமாக மறைந்துவிட்டதே! மென்மையாக அவள் உணர்வுகளைத் தீண்டிய அந்தக் குரல் புண்பட்ட மனத்திற்கு மருந்து போலல்லவா சுகமாக இருந்தது. அந்த இன்பத்தில் அவள் மனக் கண் முன் புதியதொரு உலகம் திறந்து கொண்டு அவளை வரவேற்கக் காத்திருப்பது போன்ற ஒரு வியப்பு. மேனி சிலிர்த்துப் போனாள் அவள்.

''நான் எதிர்பார்க்கலை— அதனால் குரலைக் கண்டு பிடிக்க முடியலை...'' பொங்கிப் புறப்பட்ட புத்துணர்ச்சியின் வேகத்திலே அவள் குரல் தடுமாறியது.

''இன்று மாலை ஆபீஸிற்கு வெளியே சந்திக்க முடியுமா? மறக்கக் கூடாது'' கொஞ்சினான் மறுபுறத்தில்

இதுவரை யாரும் அவளிடம் அத்தனை அன்பாக நேச உறவோடு பேசியதே இல்லை. ஏனோ அவள் மனம் அது சமயம் அவனது நட்பையும், நெருக்கமான உறவையும் மிக மிக நாடியது! ''ஓ கே! சந்திக்கிறேன்'' போனைக் கீழே வைத்துவிட்டு கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

முன்பின் பழக்கமில்லாதவன் அரவிந்த்குமார்.
போனிலே அவன் குரலுடன் சில நாட்கள் பழகியிருந்
தாள். ஒரே ஒரு தடவை சாலையிலே சந்தித்து இரண்டு
வார்த்தைகள் பேசிவிட்டுப் போனவன், 'என்னுடன் டிபன்
சாப்பிட ஹோட்டலுக்கு வருகிறாயா' என்று அழைத்த
போது புறப்பட்டு விட்டாள். திடீரென்று அப்படி அவ
ளுக்கு ஒரு துணிச்சல். ஆபீஸ் அருகே மோட்டார் சைக்
கிளை வைத்து விட்டு இருவரும் நடந்து அருகிலிருந்த
பெரிய ஹோட்டலுக்குள் சென்றனர்

ஜன்னல் ஓரயாக இருந்த மேஜையருகே அவளை
அழைத்துச் சென்றான். நாற்காலியை நகர்த்தி, 'உட்கார்!'
என்று அன்புடன் உபசரித்தான். எதிரே இன்னொரு நாற்
காலியில் உட்கார்ந்து கொண்டு கண்களால் அவளை
மென்மையாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்
தான். இந்த அனுபவம் மனோகரிக்கு மிகவும் புதியது.
அவனது கூரிய பார்வையை அவளால் தாங்கிக் கொள்ள
முடியவில்லை. கழுத்து, காதுகள், முகம் எல்லாம் சூடாகிப்
போயின. மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டு
மேஜை மீது விரல்களால் கோலமிட்டுக் கொண்டிருந்
தாள்.

'மனோ...!' அன்புடன் அழைத்தான்.

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. மெய் சிலிர்த்துப்
போனாள். அந்தக் குரலுக்கு அப்படி ஒரு காந்தசக்தி.

"என்ன சாப்பிடரே சொல்லு...முகத்தைப் பார்த்தா
பட்டினி போலிருக்கே. உண்மையைச் சொல்லு. இன்
னிக்கு நீ லஞ்ச்கூட சாப்பிடலை இல்லையா?..." கொஞ்ச
லாகக் கேட்டான்.

"இல்லை—" தலையசைத்தாள் அவள்.

"டயட்டா? உனக்குத் தேவையேயில்லையே!" சிரித்த
படி அவன் கண்கள் அவளது பொன் உருவத்தின்மீது
மேலும் கீழும் ஓடியது. வெட்கத்துடன் மறுபடி அவள்
தலையைக் குனிந்து கொண்டாள். நெஞ்சு வேகமாக



அடித்துக் கொண்டது. அவனது பேச்சு, பார்வை எல்லாம் இனித்தன.

"பஸ்ஸுக்கு நேரமாயிடுச்சு டிபன் கட்டிக் கொண்டு வரலை..." மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

"அப்போ நீ நிறைய சாப்பிடணும். மறுக்கக் கூடாது. பையா!" அவன் சர்வரை அழைத்தான்.

"பாதாம் கேக்— மசாலா தோசை, மெதுவடை, பூரி உருளைக்கிழங்கு காப்பி..." அவன் அடுக்கிக் கொண்டே போனான்.

சிறிது பொழுதில் சர்வர் தட்டுகளைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டுப் போனான்.

"நமது நட்பு தொடர்ந்து இனிதாக வளர-முதலில் ஸ்வீட்டை சாப்பிடு-" அவளது கண்களுக்குள்ளே சிரித்தான் அவன்.

பாதாம் கேக்கை ஸ்பூனால் வெட்டி சிறிது அளவு எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். அதன் இனிப்பு தொண்டை வரை பரவியது. அவனது காந்தப் பார்வை தந்த இன்பம் உடல் முழுவதும் பரவி இனித்தது.

"அன்னிக்கு ஆபீஸிலே அவங்க எல்லோரும் சினிமாவுக்கு போனாங்களே-நீயேன் போகலை. சினிமா பார்க்கப் பிடிக்காதா?" அனுதாபத்துடன் கேட்டான்.

தலையைக் குனிந்து கொண்டாள் அவள். திடீரென்று மறுபடியும் அந்தத் துன்ப உணர்வு அவளைக் கவ்விக் கொண்டது.

"எனக்கு ஆபீஸில் நெருங்கிய சிநேகிதிகள் யாரும் கிடையாது. நான் யாருடனுமே பேச்சு வச்சுக்கிறதில்லை-எங்க வீட்டிலே பெரியப்பாவுக்கு இதெல்லாம் பிடிக்காது." அவள் நிறுத்தினாள் தயக்கத்துடன்.

"உங்கப்பா ஒண்ணும் சொல்ல மாட்டாரா?..."

"எனக்கு அப்பா அம்மா யாரும் கிடையாது நான் ஒரு அனாதை. பெரியப்பா தயவிலே வாழ்கிறேன்..."

சொல்லி முடிப்பதற்குள் துக்கம் தொண்டையை இறுக்கியது, கண்கள் பனித்தன.

''மன்னிச்சுக்கோ மனோ! தெரியாம கேட்டுட்டேன். நான் இருக்கும்வரை இனிமேல் நீ அனாதையில்லை...'' உணர்ச்சி பொங்கிய அவன் குரல் அவளை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

''தாச்க்யூ!'' என்றாள் அவள் நன்றிப் பெருக்குடன்.

''நீ துயரமாக இருக்கும்போதுகூட எத்தனை அழகாக இருக்கிறே தெரியுமா...உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு.''

மேஜை மீது நீட்டி அவளது கரத்தைப் பற்றினான். அவளுக்கும் அவனை மிகவும் பிடித்து விட்டிருந்தது. தன்னை மறந்து மயங்கிய நிலையில்-கையை விடுவித்துக் கொள்ள நினைப்பு இன்றி அவள் உட்கார்ந்தாள்.

## 4

இரும்புப் பீரோவின் கதவில் படுத்திருந்த நீண்ட கண்ணாடி முன் அவள் நின்று கொண்டிருந்தாள். அன்று ஆபீஸ் விடுமுறை நாள் விடியற் காலையிலேயே குளித்து விட்டு உடுத்திக் கொண்டு விட்டிருந்தாள். கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டு சமையலறைக்குள் புகவேண்டிய கட்டம். அவளுக்கு இப்போது வீட்டு வேலைகள் மீது நாட்டமிருக்கவில்லை. உடலை வருத்திக் கொண்டு உழல மனமில்லை. இன்னும் சில தினங்கள் தான். அதற்குப்பின் அந்த வீட்டினின்று-கடினமான உழைப்புகளினின்று, பெரியம்மாவின் சுடு சொற்களினின்று-விடுதலை கிடைக்கப் போகிறது என்று எண்ணி எண்ணி அவள் இரவு முழுவதும் மகிழ்ச்சியில் உறங்கவேயில்லை. நெஞ்சிலே பொங்கிய இன்பச் சுமையை தாளாது அவள் லேசாகப் பெருமூச்செறிந்தாள்.

கண்ணாடி பிரதிபலித்த தனது அழகு உருவத்தை ஆராய்ந்த வண்ணம் மயங்கி நின்றாள்.



அரவிந்த்குமார் வேலையில் அமர்ந்து ஆறு மாதங்கள் விரைந்து சென்று விட்டன அந்தச். சில மாதங்களில் அவர்களுக்கிடையே ஏற்பட்ட நட்பு வளர்ந்து நெருக்கமான நிலைக்கு வந்து விட்டிருந்தது. அந்தக் குறுகிய காலத்திற்குள் அவர்களிடையே எத்தனையோ சந்திப்புகள். கடற்கரை-கடை வீதி-பஸ், மார்க்கெட் என்று சந்திக்க எத்தனையோ இடங்கள். பேசிய பேச்சுக்களோ எண்ணற்றவை -அதன் விளைவாக எழுந்த இன்ப நினைப்புகளோ ஏராளம்.

மயில் தோகைபோல் பின் முதுகில் படர்ந்து கிடந்த கூந்தலை சீப்பினால் மெல்ல வாரிக் கொண்டு அவள் மெய் மறந்து நின்றாள்.

அரவிந்த்குமார் வேலையில் கெட்டிக்காரன். அது போலவே பேச்சிலும் கெட்டிக்காரன். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான் கேட்டவரை சிந்திக்கும்படி திறமையாகவும் பேசுவான். பல சந்திப்புகளின் முடிவில் அவனைப் பற்றி அவள் ஓரளவு தெரிந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் தஞ்சாவூர் வாசிகள். தந்தைக்குப் பெரிய இரும்புக் கடை இருக்கிறது. தஞ்சாவூரில் அவர் பெரிய வியாபாரி. பரம்பரை பணக்காரர். அவன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. மானேஜர் ஒரு வழியில் அவனுக்கு மாமன் உறவு. அவரிடம் தொழிற் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளத்தான் தந்தை அவனை சென்னைக்கு அனுப்பி இருந்தார்.

தாயாருக்கு இந்த யோசனை அத்தனை பிடித்தமாக இருக்கவில்லை. சொந்த வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டு தங்களுடன் கூடவே மகன் இருக்க வேண்டுமென்ற விருப்பம். ஊருக்குத் திரும்பும்படி கடிதங்கள் மூலம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவனைப் பற்றி அதிகம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பிய மனோகரி தன்னைப் பற்றி மேலெழுந்த வாரியாகத்தான் சொல்லியிருந்தாள். தன் தாயைப் பற்றிய சங்கதியை அவனிடம் கூட அவள் பேசவேயில்லை.

ஆனால் அன்று முதல் நாள் மாலை மனம் விட்டுத் தன் தாயைப் பற்றிய ரகஸியத்தை அவனிடம் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.

முதல் நாள் மாலை உணவு நேரத்தின் போது அவள் மட்டும் தனியே இருக்கையில் உட்கார்ந்திருந்தாள். மாடிப் படிகளில் லேசாக எழுந்த அந்தப் பழக்கப்பட்ட காலடி ஓசை அவளைப் பரவசத்தில் ஆழ்த்தியது. ஏதோ வேலையாக இருப்பதுபோல் அவள் பைல் ஒன்றைப் புரட்டிக் கொண்டு குனிந்தபடி இருந்தாள். கம்மென்று முகத்தில் வந்து மோதிய ஷேவிங்லோஷன் வாசனை அவனது அருகாமையை உணர்த்தியது. கட்டுக்குள் அடங்கவில்லை மனம். நெஞ்சு துடிக்க அவள் நிமிர்ந்தாள்.

அரவிந்த்குமார் சாய்ந்த வாக்கில் மேஜையின் துணி மீது சுவாதீனமாக ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''ஓவர் டைம் வேலை செய்ய உன்னை யார் நிர்பந்திக்கிறாங்க'' பரிகாசமாகக் கேட்டுக் கொண்டு அந்த பைலை அப்பால் நகர்த்தி வைத்தான். அன்பு நிறைந்த அவனது பார்வையில் எத்தனையோ கதைகள். சுற்றுமுற்றும் கவனித்துவிட்டு மெல்ல அருகில் குனிந்து காதருகே சொன்னான்.

''மையுண்ட கண்களால் மருள மருளப் பார்த்து என் மனதைச் சுருள சுருள வாரிக் கொண்டு விட்டாயே அதைப் பற்றி விவரமாகப் பேச இன்னிக்கு கடற்கரையிலே சந்திக்கலாமா'' —கேலியும் நம்பிக்கையும் கலந்த குரலில் குழைந்தான்.

வெட்க மிகுதியில் அவள் பேசத் தடுமாறினாள். ''ஆகட்டும்'' எனத் தலையை அசைத்தாள். மேஜைமீது படிந்து கிடந்த அவளது வலது கரத்தை மெல்ல அமுக்கினான். 'ஓகே' என்று கூவி விட்டு அவசரமாக விரைந்தான்.

மானேஜர் மாமாவை உத்தேசித்து அவனும், பெரியப்பா நல்லசிவத்தை உத்தேசித்து அவளும், கூடியவரை



தங்கள் அன்பையும், நெருக்கமான நேசத்தையும் ஆபீஸில் உள்ளவர்கள் அறியாவண்ணம் கட்டிக் காத்து வந்தனர்.

நடுமுதுகு வரை முடியைப் பின்னலிட்டுக் கொண்டு அதை வண்ண நூலால் கட்டி விட்டு மீதியைப் பரவலாக சீவி விட்டுக் கொண்டாள் அவள் புடவைத் தலைப்பை உதறி, மடிப்புகளை சீர்படுத்தி அணிந்து கொண்டாள். மறுபடியும் தன் உருவத்தைக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டு நின்றாள்.

சில தினங்களுக்கு முன்னர், பெரியம்மா நாகமணி தன் கணவரிடம் சொன்னது அவள் காதுகளில் கேட்கத்தான் செய்தது.

''இந்தப் பொண்ணு ரொம்ப மாறிக்கிட்டு வரா கவனுச்சிங்களா.''

உண்மையில் அவள் தோற்றம் இப்போது மிகவும் மாறித்தான் விட்டிருந்தது. உள்ளடங்கிய கன்னங்கள் லேசாக உப்பியிருந்தன. உடல் பூசினார்போல் தடித்து தங்க மெருகிட்டது போன்ற பளபளப்பில் பொலிந்தது. மகிழ்ச்சியின் ஒளி கண்களில் பொங்க அவள் முன்னைவிட இப்பொழுது மிகவும் அழகாக இருந்தாள்

கண்ணாடி காட்டிய தன் அழகு உருவத்தை விட்டுப் போக மனமில்லாதவள் போல் ,அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

பெரியம்மாவின் பெருங்குரல் குளியலறை கதவிடுக்கின் வழியே கிரீச்சென்று அலறியது.

''பெரியப்பாவை தேடிக்கிட்டு இன்னிக்கு யாராச்சும் வருவாங்க. முன்னறையை சுத்தப்படுத்திவை. அடுப்பிலே காப்பிக்கு தண்ணிபோடு–பாலைக் காய்ச்சி இறக்கி வை. போ. மசமசன்னு நின்னுகிட்டிருக்காதே...'' உத்தரவுகள் பறந்தன.

அசட்டையாகத் தோள்களைக் குலுக்கிவிட்டு மிகவும் சாவதானமாக அவள் முன்னறைக்கு வந்தாள்.

ஆகட்டும், இன்னும் சில தினங்கள்தானே. அதற்குப் பின் பெரியம்மாவின் அதிகாரம்–உருட்டல் மிரட்டல்

எல்லாம்-பலிக்காது. அறையைப் பெருக்கி சுத்தப்படுத்தி நாற்காலிகளை நகர்த்தி ஒழுங்கு செய்து கொண்டு அவள் உறைய வந்து கொண்டிருந்தாள். ஆனால் நினைவு முழுவதும் அரவிந்த் குமாரனைச் சுற்றி சூழ்ந்து கொண்டிருந்தது

அன்று மாலை அவள் வேலைக்குப்பின் அவனைச் சந்திக்கப் புறப்பட்டாள். வழக்கம்போல் சந்திக்கும் இடத்தில் அவன் தயாராகக் காத்துக்கொண்டு இருந்தான். மௌனமாக இருவரும் நடந்து மணல்மீது சென்று அமர்ந்து கொண்டனர். சிறிது நேரம் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். என்ன சொல்லப் போகிறானோ என்ற ஆவலில் அவள் மணலை விரல்களால் துழாவிக்கொண்டு காத்திருந்தாள்.

திடீரென்று அவன் பேச ஆரம்பித்தான். "முக்கியமானதொன்று உங்கிட்ட பேசணும்னு சொன்னேன். இல்லையா? ஆனால் அதை எப்படி ஆரம்பிக்கிறதுன்னு தெரியாம குழம்பறேன். உனக்கு என்னைப் பற்றி கொஞ்சம் ஏற்கனவே தெரியும். எங்கம்மாவுக்கு என் மேலே உசிருன்னு சொல்லியிருக்கேன். என் பிரிவை அவங்களால் தாங்க முடியலை. ஊருக்கு திரும்பிவான்னு தொந்தரவு செய்யரா; அத்தனை பெரிய வீட்டை அவங்களாலே நிர்வகிக்க முடியலையாம் உதவிக்கு விரைவாக மருமகள் வேணுமாம்" நிறுத்திவிட்டு அர்த்த பாவத்துடன் அவளைப் பார்த்தான்.

குபீரென்று மனோகரி முகம் சிவந்து போனாள். தலையைக் குனிந்து கொண்டாள்.

"உனக்கு இத்தனை பெரிய அதிர்ஷ்டமா?" அவள் உள்ளம் உற்சாகத்துடன் கூக்குரலிடுவது போன்ற பிரமை. நெஞ்சு படபடப்பைத் தாளாது அவளுக்கு மூச்சு முட்டியது.

மணலுக்குள் புதைந்து கிடந்த அவளது கை விரல்களோடு தன் கை விரல்களைச் சேர்த்து இறுக்கிக் கொண்டான் அவன்.



"அத்தனை பெரிய வீட்டில் ஒரு விளக்கை ஏத்தி வைக்கவும். எங்கம்மாவுக்கு உதவியாக குடும்பத்தை நிர்வகிக்கவும்— ஒரு மருமகள் அவங்களுடைய ஒரே பிள்ளையான இந்த அரவிந்தனுக்கு மனைவியாக எங்கள் வீட்டுக்கு வர முடியுமான்னு கேட்கத்தான் வரச் சொன்னேன்." பரபரப்பாக—பரவசமாகச் சொல்லி முடித்தான்.

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிட்ட அவளால் பேசவே முடியவில்லை. 'ஊஉம்' என்று தலையை அசைத்தாள்.

"ஜாதி மல்லி, முப்பது பைசா- மல்லி- மல்லி கதம்பம், செவ்வந்திப்பூ..." கூவிக் கொண்டு அருகில் வந்தாள் பூக்கூடையுடன் ஒரு பெண்.

அவளை அழைத்து நான்கு முழம் ஜாதி மல்லிகை வாங்கினான் அவன். "கொஞ்சம் திரும்பு! என் கையாலேயே உன் தலையில் வைக்கிறேன்." பரிவோடு சொல்லிக் கொண்டு அருகே வந்தான்.

மனோகரி திடுக்கிட்டு நகர்ந்து கொண்டாள். "வேண்டாம் நமக்குக் கல்யாணம் ஆனபிறகுதான் உங்களுக்கு அந்த உரிமை உண்டு. யாராவது பார்த்தா அசிங்கமா இருக்கும்."

"பெரிய பத்தாம் பசலியாக இருக்கியே. நல்ல சோஷியலா பழகுவேன்னு நினைச்சுதான் இந்தச் சந்தோஷத்தைக் கொண்டாட நாளைக்கு நாமிருவரும் மஹாபலிபுரத்துக்குப் 'பிக்னிக்' போக ஒரு காருக்குக் கூட ஏற்பாடு பண்ணியிருக்கிறேனே!" ஆச்சர்யத்துடன் கேட்டான் அவன்.

மீண்டும் அவள் திடுக்கிட்டுப் போனாள். "என்னைக் கேட்காம நீங்க ஏற்பாடு பண்ணினது தப்பு. உங்களை சந்திச்சிட்டு நான் தினமும் நேரங்கழிச்சு வீட்டுக்குப் போகும் போது பெரியம்மாகிட்ட எத்தனையோ பொய் சொல்ல வேண்டியிருக்கு. மஹாபலிபுரத்துக்கு விடுமுறை நாளின் போது உங்களோட நான் எப்படி வர முடியும்.

நமக்குக் கல்யாணமாகும்வரை அவ்வளவு நெருக்கமாகப்
பழக எனக்கு மனசு ஒப்பாது...''

திடீரென்று அவளுக்கு சுமதியின் நினைப்பு வந்தது.
ஒழுக்கம் கெட்ட தாயின் மகள் என்ற ஒரு அவல நிலை
அவளுக்குப் போதாதா. அதைத் தன் வாழ்க்கையிலிருந்து
களைந்து எறிய அவள் மனம் எத்தனை பாடுபடுகிறது.
அவளை மனைவியாக அடைய விரும்பும் அரவிந்தன் உள்
ளத்தில் அவள் என்றும் நல்லவளாக நேர்மையானவளாக
இருக்க வேண்டாமா?

''ஊருக்குப் போய் அம்மா அப்பா ரெண்டு பேருடைய
சம்மதம் வாங்கிகிட்டு, எங்க பெரியப்பாகிட்ட வந்து
கேளுங்க. எல்லாம் முறைப்படி செய்வோம். மஹாபலி
புரம் எங்கே ஓடிப் போச்சு.''

அரவிந்த்குமார் அவளது கரத்தைக் கெட்டியாகப்
பற்றிக் குலுக்கினான்.

''உன் வைராக்கியத்தை நான் ரொம்பப் பாராட்டு
கிறேன் ஒழுக்கமான வாழ்க்கையிலே உனக்கு இருக்கிற
ஈடுபாட்டை உணர்ந்து நான் ரொம்ப பெருமைப் பட
றேன். பணம் எங்களுக்கு பெரிசல்ல. பண்பு நிறைஞ்ச
குடும்பத்திலிருந்து வந்திருக்கிறேன்னு அம்மா புரிஞ்சுக்
கொண்டா ரொம்ப மகிழ்ந்து போய் விடுவாங்க. அவங்
களுக்கு உன்னைக் கட்டாயம் பிடிக்கும்'' என்றான்
உணர்ச்சி பொங்கிய குரலில்.

அது சமயந்தான் அவளுக்கு அந்த எண்ணமும் துணி
வும் ஏற்பட்டது.

''அரவிந்த்—உங்களைப்பத்தி நீங்க ஒளிவு மறைவு
இல்லாம எல்லாம் சொல்லியிருக்கீங்க. ஆனால் என்னைப்
பற்றி விவரமா உங்களுக்கு ஒன்றுமே தெரியாதே!''

''ஏன் தெரியாது? நல்லசிவம்னு பேர் உடைய ஒரு
பெரியப்பா இருக்கிறார். பெண் கேட்க வந்தால் பொல்
லாத சிவமாகி விடுவாரோன்னு பயந்துகிட்டு இருக்கி
றேன்...'' கேலியாக அவன் சிரித்தான். மோகனமாக
அவளைப் பார்த்தான்.



கபடமற்ற அவனது பேச்சு அவள் நெஞ்சை நெகிழச்
செய்தது.

இனியும் அவள் அவளது தாயைப் பற்றிய செய்தியை
அவனிடம் சொல்லாமல் மறைத்து வைப்பது முறையல்ல—
சொன்னால் அதை எப்படி ஏற்பான்? தனக்குள்ளே எண்ணி
ஒரு கணம் குமைந்தாள்.

''பெரியம்மா பெரிய புலியா- பாய்ந்து சண்டைக்கு
வந்து விடுவாங்களா?'' குறும்புத்தனமாகக் கேட்டு விட்டு
மீண்டும் அவன் சிரித்தான்.

''நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு அந்த வீட்டை
விட்டு நகர்ந்தால் அவங்களுக்குக் கொஞ்சம் பாரம்
குறையும். அதனாலே கொஞ்ச மன நிம்மதியும் ஏற்படும்.
பெண் கேட்டா மறுப்பு சொல்ல மாட்டாங்க. என் தாய்
பற்றின கதையைக் கேட்டாத் தான் நீங்க என்ன சொல்
வீங்களோன்னு கலங்கிக் கொண்டிருக்கிறேன்.'' அவளுக்குத்
துக்கம் தொண்டையை அடைத்தது. ''என்னுடைய சின்ன
வயசிலே— என்னைத் தவிக்க விட்டுட்டு எங்கம்மா வேறு
ஒருத்தனோட புறப்பட்டு போயிட்டாங்க...அதனாலே...''
அடக்க முடியாது அவள் விம்மினாள்.

''பூ! இவ்வளவுதானே. நான் என்னவோ ஏதோன்னு
ஒரு நிமிஷம் அசந்துபோய் விட்டேன்.''

''சின்ன வயசு விதவை. இயற்கையோடு ஒத்து வாழ
அவங்க மறுவாழ்வு தேடிக் கொண்டாங்க. இந்தக் காலத்
திலே இது மாதிரி சங்கதிகள் பத்தி எத்தனையோ கேள்விப்
படுகிறோம்—மேலும் உன் தாய் செஞ்ச தவறுக்கு உன்னை
எப்படி பொறுப்பாக்க முடியும்? உன்னை உனக்காக
விரும்பி மணக்க நான் முன் வந்திருக்கிறேன் நீ ஏன்—
கடந்து போன சங்கதியை நினைச்சு மனம் கஷ்டப்படறே
சே! சே! அழாதே. கண்களைத் துடைச்சுக்கோ. எனக்கு
வேண்டியது நீ – உன்னைச் சுற்றியுள்ள இந்தக் கதை
யில்லை புரிஞ்சுக்கோ...'' ஆதரவாகப் பேசினான்.

''தாங்க்யூ'' என்றாள் நன்றி உணர்வில்.

அதற்குப் பின்னர்—வெகு நேரம் இருட்டியதுகூட மறந்து அவர்கள் வருங்காலத்தைப் பற்றிப் பல பல பேசிக் கொண்டிருந்தனர். கற்பனை செய்தனர். கனவுகளை எழுப்பினர்.

முன்னறையில் வேலையை முடித்துவிட்டு அவள் திரும்பினாள். குளித்துமுடித்த பின்னர் தலையைச் சீவிக் கொண்டு பின் வராந்தாவில் நின்ற நாகமணி கணவனுடன் காரமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

தன் பெயர் பேச்சில் அடிபடுவதைக் கேட்ட மனோகரி தயங்கிக் கொண்டு உற்றுக் கேட்டாள்.

''நான் சொல்கிறதைக் கேளுங்க. அந்தப் பொண்ணு கொஞ்ச நாளாகவே ஒரு மாதிரி இருக்கா. தினமும் ஒரு நாளைப் போல இருட்டின பிறகுதான் வீட்டுக்கு வரா. கேட்டா என்னவோ கதையெல்லாம் சொல்ரா. மத்த நாள் எல்லாம் விட நேத்தைக்கு நல்லா இருட்டின பிறகு தான் வந்தா. கண்ணும் மூஞ்சியும் பளபளன்னு ஒரு மாதிரி இருந்திச்சு. அதைப் பார்த்து என் மனசுக்கு ஒரு கவலை வந்திடுச்சு. எனக்கென்னமோ அவ போக்கு பிடிக் கலை. சந்தேகமாக இருக்கு. இதை முளையிலேயே கிள்ளி யெறியணும். விபரீத மாயிட்டா தலை குனிஞ்சு நிக்க வேண்டி வரும்.''

''என்னை என்ன செய்யச் சொல்ரே?'' சீறினார் நல்ல சிவம்.

''நான்தான் நாலு நாளாகக் கரடியாகக் கத்திக் கிட்டி ருக்கேன் என் அண்ணியோட ஓரகத்தி வந்து சொன்னாங் களே ஒரு இடம், பார்த்து பேசி அதை இவளுக்கு முடிச்சு விடுங்கோ. இவளுக்கு கல்யாணமாகி வீட்டைவிட்டு கிளம் பினாத்தான் எனக்கு நிம்மதி. நிதக்கும் இப்படி வயித்திலே நெருப்பைக் கட்டிட்டு என்னாலே வாழ முடியாது-''

''சரி; சத்தம் போடாதே. இது விஷயமா நான் அவங் களைப் பார்க்கிறேன்.

''இப்படி ஒரு ஏற்பாடு நடக்கிறதா?'' மனோகரியின் நெஞ்சு பதை பதைத்தது. அந்தக்கணமே அரவிந்தகுமாரை பார்க்க வேண்டும் என்று அவள் துடியாகத் துடித்தாள்.

# 5

சில வருஷங்களுக்கு முன்னர் சிந்தாதரிப் பேட்டையில் ஒரு சந்திற்குள் மிகவும் சிறியதாக இருந்த அச்சகம் அது. 'மக்கள் தீர்ப்பு' என்ற மாலை பத்திரிகையை அது வெளி யிட்டுக் கொண்டிருந்தது. அதற்குத் திடீரென்று ஒரு யோகம். மக்கள் தீர்ப்பு மக்களின் ஓகோ என்ற ஆதரவைப் பெற்றதும்-சிந்தாதரிப்பேட்டையிலிருந்து அச்சகம் கிளம்பி திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலிருந்த பெரிய கட்டடத் திற்குள் வந்து அமர்ந்து கொண்டது. முதல் மாடியில் ஏ சி. அறையில் மேஜைக்குப்பின் சுழல் நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை இறுக்க மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான் அதன் ஆசிரியரும் அதிபருமான பார்த்திபன். தொடர்கதை மன்னன் என்ற புகழின் கீழ் சுந்தரவேலன் என்ற அவனது சொந்த பெயர் அமுங்கி விட்டிருந்தது. அக்கா காமாக்ஷி ஒருத்தி தான் அவனை வாய் குளிர ''சுந்தரவேல்'' என்று அழைப்பாள். மற்ற எல்லோருக்கும் அவன் பார்த்திபன்.

மக்கள் தீர்ப்பு ஒவ்வொரு மாலையும் வெளிவரும் பத்திரிக்கை. ஞாயிறு அன்று அத்துடன் மக்களுக்காக ஒரு மலர் கொத்து கூடவே வெளிவருவது வழக்கமாகி விட்டி ருந்தது. அந்த விசேஷ இதழில்தான் பார்த்திபனின் தொடர்கதை, கேள்வி பதில், சினிமா விமரிசனம் போன்ற பல்சுவை எழுத்துக்கள் பரிணமிப்பது வழக்கம். விஷயங் களைத் திரட்டி அதை ஒவ்வொரு வாரமும் வெற்றிகரமாக வெளியிடுவதற்குள் அவன் ஒரு கூஜா எலுமிச்சை பழரசம் குடித்துவிட்டு-பேனாவின் நுனியைப் பிடித்துக் கொண்டு சுழல் நாற்காலியில் பலமுறை சுழன்று-எழுந்து அறைக் குள்ளே நடந்து-உட்கார்ந்து இப்படி பலவித சித்திர வதைக்கு உள்ளாவதும் வழக்கமாகி விட்டிருந்தது. பத்தி ரிகை அச்சில் ஏறி, யந்திரங்கள் தாள கோஷத்துடன் உரு ளத் தொடங்கியதுந்தான்-நிம்மதியானதொரு மூச்சு அவ னிடம் எழும்.

அதற்குப் பின்னர் நாற்பத்தெட்டு மணி நேரம் அவ னுக்கு விடுதலை. வேலை அழுத்தத்தினால் வெடித்துவிடும்

போல் கனத்த தலை இப்போது லேசாகி மனதும் அத்து டன் லேசாகி உற்சாகமாக வீட்டுக்குக் கிளம்புவான்.

நாற்பத்தெட்டு மணி நேரம் சென்ற பின்னர்-மீண்டும் அந்தப் பரபரப்பு எரிச்சல்-அவசரம்-பேனாவைக் கடித்தல் இத்யாதி, அவனது வாழ்க்கை இப்படி வெறிபிடித்த பந்தயக் குதிரைபோல் ஓட்டமும் நடையுமாக ஓடிக் கொண்டிருந்தது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த பையன் அப்பொழுதுதான் அச்சிலிருந்து வெளியான மக்களின் தீர்ப்பு ஞாயிறு ஏட்டைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டுப் போனான். பெற்ற பிள்ளையை ஆசையு டன் தூக்கி அணைத்துக் கொள்ளும் தாயின் பாசத்தோடு பத்திரிக்கையை அவன் மெல்லப் பிரித்து பக்கம் விடாது-வரி தவறாது கவனமாகப் படித்து முடித்தான். முடிவில் திருப்தியுடன் பெருமூச்சு விட்டான்.

மறுபடியும் கண்ணாடி டம்ளரில் கொஞ்சம் எலுமிச் சம் பழ ரசத்தை ஊற்றிக் குடித்தான்.

மூன்று நாட்களாக முதுகைப் பிளந்து கொண்டிருந்தது முதுகுவலி. ஏ சி. அறையில் வெகு நேரம் உட்கார்ந்து எழு தியதனால் குளிர் பிடித்துக் கொண்டிருக்கும்-ஆனால் அக் காவிடம் கேட்டா வேறு என்ன வெல்லாமோ சொல்லு வாங்க-போகும் போது டாக்டர் கோபால்கிட்ட 'செக்கப்' செய்து கொண்டு போய்நல்லா வெந்நீரில் குளித்துவிட்டு... அவனது சிந்தனையை அவனே அறுத்துக் கொண்டு டெலி போனில் எண்களைச் சுழற்றினான்.

மறுபுறம் காமாக்ஷி பேசினாள். தளர்ச்சியும்அயர்ச்சியும் தொனித்த குரல், எரிச்சலோடு பேசுவது கேட்டது.

''சொல்றதை நீ கேட்கமாட்டே. நேரத்துக்கு சாப் பிட்டு தூங்கினாத்தானே. முதுகு வலி அப்படித்தான் இருக்கும். மிளகு ரசம் வச்சு, பத்தியமா பொன்னுசாமி சமைச்சிருக்கான். இன்னிக்காவது சீக்கிரம் வந்து-குளிச்சு சாப்பிட்டு கொஞ்சம் ஓய்வா இரு''-டக்கென போனை வைத்து விட்டாள்.



பார்த்திபன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். மூன்று நாட்களாக புத்தகங்களும், பைல்களுமாக பரப்பிக் கிடந்த மேஜையைப் பார்க்க முடியவில்லை, அருகிலிருந்த மணியை அடித்தான். பையன் ஓடி வந்து முன்னால் நின் றான்.

''மேஜையை ஒழுங்கு படுத்திட்டு-அறையையும் சுத்தம் பண்ணிட்டுப் போ. அப்படியே சங்கர் ஐயாவை நான் பார்க்கணும்னு சொல்லு''-உத்திரவிட்டான்.

சிறிது பொழுதில் தலைமைக் கணக்கர் சங்கர் உள்ளே வந்தார். வெகு காலமாக அவர் அவனது அச்சகத்திலே பணி புரிந்து கொண்டிருந்தார். அந்த உரிமையிலே கொஞ் சம் நெருக்கமான உணர்வு-சுவாதீனமாகப் பேசுவார்.

''இந்த வாரம் மலர்க் கொத்து-பிரமாதமாக அமைஞ் சுடுத்து. உங்க தொடர் கதையிலே உள்ள சஸ்பென்ஸ் ரொம்ப எக்கசக்கம். கடிதங்கள் வந்து குவியப் போகிறது பாருங்க'' புகழ்ந்தார் அவர்.

மகிழ்ச்சிப் புன்னகையில் அவன் முகம் மலர்ந்தது.

சங்கரன் தமக்குள்ளேயே எண்ணிக் கொண்டார், ''சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டா, மனுஷனுடைய முன்கோபம்-முரட்டுக் குணம் எல்லாம் குறையும். இப்படி நாளை ஓட்டிண்டு பத்திரிக்கையே பெண்டாட்டின்னு கிடந்தா...''

''விஷ் யூ எ ஹாப்பி வீக் எண்ட். குட் நைட்...'' சங்கர னும் கிளம்பினார்.

காரை அவன் தானே ஓட்டிக் கொண்டு வந்தான். நுங் கம்பாக்கத்தில் கோல்ட் சிரசன்டில் அவனது பங்களா! காரின் ஹாரன் ஒலி கேட்டதும் பையன் ஓடி வந்து கேட் டைத் திறந்தான். நடைபாதைமீது விரைவாகக் காரைச் செலுத்தி காரேஜிற்குள் கொண்டு வந்து நிறுத்தி விட்டு இறங்கினான். ஆபீஸ் பையை எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டிவிட்டு உள்ளே செல்லத் திரும்பினான்.

காமாக்ஷி வாசலில் வந்து நின்று கொண்டிருந்தாள். சிரித்த முகத்துடன் அவன் உள்ளே வந்தான். கையில்

பிடித்திருந்த பத்திரிக்கையை அவளிடம் நீட்டினான்."ஊர் மக்கள் படிக்குமுன்-உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அச்சிலிருந்து சுடச்சுட இப்போதுதான் வெளிவந்தது'' வேடிக்கையாகப் பேசிக் கொண்டு அவன் மாடிப் பக்கம் விரைந்தான்.

காமாக்ஷி பேசவில்லை. நேரில் அவனைப் பார்த்தவுடன் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது காலையில் புறப்படுமுன் அக்காவும் தம்பிக்குமிடையே ஆரம்பித்த பெருத்த விவாதம்-சண்டையிலே முடிந்து விட்டிருந்தது.

'போதும் இந்தப் பேச்சு, இனி வேண்டாம்'' என்று கத்திவிட்டு அவன் அச்சகத்திற்குக் கிளம்பியிருந்தான்.

''நானும் பல தடவை சொல்லியாச்சு. நீ கேக்கிர வழியா இல்லை. காசு கொடுத்து சில விஷயங்களைத்தான் வாங்க முடியும். நேரத்தையும்-வாலிபத்தையும் வாங்க முடியுமா? நீ பெரிய எழுத்தாளன். உன்கிட்டே போய் நான் பேசறேன்...எனக்கு புத்தியிருந்தாத்தானே...'' பதிலுக்கு இரைந்துவிட்டு அவள் உள்ளே சென்றுவிட்டாள்

சூடான தண்ணீரில்நன்றாகக் குளித்து மகிழ்ந்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு வந்தான்.

சாப்பாட்டறையில் காமாக்ஷி தயாராக நின்று கொண்டிருந்தாள் சமையலுக்குப் பொன்னுசாமி இருந்தான். ஆனாலும் தம்பிக்கு அவள் உணவு பரிமாறினால்தான் அவளுக்குத் திருப்தி. அதுவும் கலா இறந்த பின்னர் அந்தப் பணியைக் கடமை உணர்வோடு ஏற்றுக் கொண்டிருந்தாள். போனில் அவன் சொல்லியபடி; பத்தியமான சமையல் மௌனமாக அவன் சாப்பிட்டான்.

உணவுக்குப் பினைர் இருவரும் முன்னறையில் வந்து உட்கார்ந்து கொண்டனர் காமாக்ஷி பத்திரிக்கையைப் பிரித்து அவனது தொடர் கதையைத்தான் முதலில் வாசிக்கத் தொடங்கினாள் தம்பியின் எழுத்து வன்மையிலே அவளுக்கு அத்தனை பெருமை. ஓரக் கண்ணால் அவள் முகத்தை அவன் கவனித்தான். சில நாட்களாக அவள்



மிகவும் தளர்ச்சியுற்று காணப்பட்டாள். சின்ன வயதில் விதவையாகி குடும்பத்திற்கே உழைத்து ஓடாகி விட்டவள் தள்ளாமையும் தனிமையும் அதிகமாகி விட்டதால் இப்போதெல்லாம் சட்டென்று கோபமும் எரிச்சலும் வந்து விடுகிறது. போன வருஷம் லேசாக நரைத்த கூந்தல் இப்போது பட்டை பட்டையாக வெளுத்து விட்டிருந்தது. வயோதிகம் அவளை வேகமாக அண்டிக் கொண்டிருந்ததை உணர்ந்து அவன் துணுக்குற்றான். அப்பொழுது தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. வழியில் டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொண்டு வந்திருந்தான். எழுந்து மேஜை மேலிருந்த ஆபீஸ் பையைத் திறந்து டாக்டர் கொடுத்து அனுப்பிய மாத்திரை பாட்டில்களை எடுத்து வந்தான்

காலையில் அவளிடம் கடுமையாகப் பேசியது மனத்தை உறுத்தியது ரத்த அழுத்தத்தில் அவதிப்படுகிறவளிடம் கோபப்படும்படி பேசியது தவறு என்று நொந்து கொண்டான். இரக்க உணர்வின் வசப்பட்டு உள்ளம் நெகிழ்ந்து 'அக்கா' தணிவான குரலில் கூப்பிட்டான். பத்திரிக்கையைத் தாழ்த்திக்கொண்டு கண்ணாடியை மூக்கின் மேல் நழுவவிட்டு, தம்பியை உற்றுப் பார்த்தாள் அவள்.

''டாக்டர்! உங்களுக்கு மருந்து கொடுத்தனுப்பியிருக்கிறார். மறக்காம எடுத்து வந்திருக்கிறேன்.''

''அதெல்லாம் எனக்குத் தேவைதானா?'' பட்டும் படாமலும் பேசினாள்.

''தேவைதான் உங்க உடம்பை கவனிச்சுகிட்டு நீங்க நெடுநாளைக்கு சுகமாக இருக்கணும்.''

''இந்த உடம்பைக் கல்லால் சட்டி சாந்தால் பூசியிருக்கா? எத்தனை நாளைக்கு இருக்க முடியும். உனக்குன்னு ஒருத்தியைத் தேடிக்கோன்னா கோபம் வராதே உனக்கு?

''உங்களுக்கு மட்டும் கொஞ்சமாவா கோபம் வருது?''

இரண்டுபேரும் குபீரென்று சிரித்துவிட்டனர்.

''அது சரி, என்னவோ போட்டோன்னீங்களே! அதைப் பார்க்க இப்ப ரெடியா இருக்கேன். யோசித்துப் பார்த்தேன். நீங்க சொல்றதிலே நியாயம் இருக்கிறாப்பல பட்டுது.''

''யோசுச்சுண்டே இருக்காதே. சட்டுனு முடிவுக்கு வா. ராத்திரி பகலா உழைக்கிறே. சரியான சாப்பாடு கூடக் கிடையாது. ஓடிஓடி யாருக்குச் சம்பாதிக்கிறே. காலாகாலத்திலே கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒரு குழந்தை குட்டி இருந்தாத்தானே உழைச்சத்துக்கு ஒரு பலன் இருக்கும். அந்தப் பொண்ணு படத்தை எடுத்திண்டு வரேன்''...அவள் எழுந்து உள்ளே சென்றாள்.

கூடவே எழுந்து உள்ளே நடந்தான் பார்த்திபன். சாப்பாட்டறையைத் தாண்டியிருந்த பெரிய ஹாலில் சுவரின் மீது தொங்கிய கலாவின் போட்டோ மீது அவன் பார்வை சென்றது.

கலா அவனது மனைவி; கல்லூரியில் அவனுடன் ஒன்றாகப் படித்தவள். காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் நீண்ட காலம் கூட இருந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை.

படத்தின்மீது மல்லிகை மலர்ச்சரம் தொங்கிக் கொண்டிருந்தது. கட்டவிழ்த்துக் கொண்ட மலரின் மணம் அறை முழுவதும் பரவிக் கிடந்தது. அவனது உள்ளத்திலே வேதனையான நினைவுகள் நிழலாடின.

அப்பொழுது அவன் மிகவும் சாதாரண நிலையில்தான் இருந்தான். மக்கள் தீர்ப்பு...பலவிதப் பிரச்சனைகளில் தவித்துக் கொண்டிருந்த சமயம். பங்களா-கார் என்ற வசதிகள் இல்லாத காலம்.

இரண்டு வருஷ மண வாழ்க்கை-அதற்குப் பின்வரக் கூடாத நோய் அவளுக்கு வந்துவிட்டது.



மார்பிலே புற்று நோய்-டாக்டர் உண்மையைச் சொன்னபோது அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, வேதனை, துக்கம் விவரிக்கவே முடியாது.

கலா மிகவும் பொறுமையானவள். தன் துன்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாது முடிவுவரை புன்னகைத்துக் கொண்டு அவள் போய் விட்டாள். அந்த நாட்களை நினைவினின்று உதற விரும்புகிறவன் போல் அவன் அங்கிருந்து மீண்டும் முன்னறைக்கு வந்து சோபாவில் சாய்ந்து கொண்டான்.

கையில் கொண்டு வந்த காகித உறையை அவனிடம் கொடுத்து விட்டு காமாக்ஷி எதிரே அமர்ந்து கொண்டாள் அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆவல் அவளுக்கு.

உறையினின்று படத்தை எடுத்து உற்றுப் பார்த்தான் பார்த்திபன்.

பெண்ணுக்கு இருபது வயது இருக்கும். களை பொருந்திய முகம். எங்கேயோ பார்த்த நினைவு. அவனுக்கும் பிடித்துவிட்டிருந்தது. ''போட்டோவில் நன்றாக இருக்கிறாள். நேரில் பார்த்தால் எப்படியோ?'' விளையாட்டாகக் கேட்டான்.

''நேரேயும் பார்த்து விட்டேன். நம்ம அமிர்தா தான் இந்த இடத்தைப் பற்றி என்கிட்டே சொன்னாள் அவங்க வீட்டுக்குப் போய் விசாரிக்கிறதுக்கு முந்தி நேரில் பார்க்கணும்னு சொன்னேன். அதுக்கென்ன சுலபம், அவள் வேலைக்குப் போற பெண்-கடைக்குப் போகிறாப் போல நாம் பஸ் ஸ்டாண்டில் போய்நின்னா பார்த்துவிட முடியும்னா அப்படியா போனோம். பார்த்தோம்...''

''அப்புறம் ... ஸஸ்பென்ஸ் வேண்டாம். சொல்லுங்கோ'' அவன் பரிகாசமாகக் கேட்டான்.

''பொண்ணு பார்க்க நல்ல அழகு. நல்ல நிறம் விசாரித்தேன். வீணை கூட நல்லா வாசிப்பாளாம். பாடவும் தெரியுமாம். ராத்திரி முழுதும் நீயே டைப் அடிச்சிக் கொண்டு திண்டாடறியே. அவளுக்கு ஷார்ட் ஹாண்ட்.

டைப் எல்லாம் தெரியும், ரொம்ப உதவியாக இருப்பா. எல்லாத்தையும்விட அவளுக்கு நல்லா சமைக்கத் தெரியு மாம்.''

''சரிதான், உங்களுக்கு இடம் பிடிச்சுப் போச்சுன்னு சொல்லுங்க''

''எனக்குப் பிடிச்சா போதுமா? நீயும் நேரில் பார்த்துடு. பின்னாலே என் தலையை உருட்டக் கூடாது பார். அதுக் கும் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். அமிர்தா பேரனுக்குப் பிறந்த நாள் கொண்டாடுராங்க. நமக்கும் அழைப்பு வந்திருக்கு. அவங்க வீட்டிற்கும் அனுப்பியிருக்காங்க. உனக்கு அன்னிக்கு ஓய்வுநாள். மறுப்பு சொல்லாம கிளம்பு அங்கே ஜாடையாக அந்தப் பொண்ணை பார்த்துக்கோ, பிடிச்சா நேரே போய் பேசுவோம்''

''ஆல்ரைட் நான் ரெடி. இப்ப சந்தோஷமா?'' அவன் ஒப்புக்கொண்டான்.

பிறந்தநாள் கொண்டாட்டத்திலே கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. ஆண்கள் பக்கத்திலே அமர்ந்திருந்த தம்பியிடம் வேகமாக காமாக்ஷி வந்தாள். அது சமயம் ஒரு ஆணும் சில பெண்களும் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

''அந்தப் பச்சை சேலை பார்த்துக்கோ'' எச்சரித்தாள் காமாக்ஷி.

பச்சை வண்ண சேலையில் கொடிபோல் அசைந்து கொண்டு உள்ளே வந்த அந்தப் பெண்ணை வியப்புடன் பார்த்தான் பார்த்திபன். சில வருஷங்களாகப் பெண்கள் என்ற பெயரின்மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு வைராக்கியம் எல்லாம் ஒரே கணத்தில் தவிடு பொடியாகி விட்டன.

வீட்டிற்கு வந்ததும் காமாக்ஷி கேட்டாள். ''பெண் எப்படி?''

''பெண்ணை எனக்குப் பிடித்திருக்கிறது. அவளுக்கு என்னைப் பிடிக்க வேண்டாமா?'' கேட்டான் அவன்.



''அதுக்கும் ஏற்பாடு செய்துட்டேன். வர வெள்ளிக் கிழமை சாயங்காலம் நல்லசிவத்து வீட்டுக்கு அந்தப்பெண் மனோகரியை உனக்குப் பேசி முடிக்க நாம் எல்லோரும் போகிறோம். நினைப்பு வச்சிக்கோ. ஆபிஸிலேயே மறந்து போய் உட்கார்ந்திருக்காதே.''

''நீங்க விடுவீங்களா? போன் மேலே போன் அடிச்சு என்னைத் தொலைச்சுடுவீங்களே.'' பல நாட்களுக்குப் பின்னர் மனம் விட்டு மகிழ்ச்சியுடன் அவன் சிரித்தான்.

## 6

அன்று வெள்ளிக்கிழமை. நல்லசிவம் ஆபீஸிற்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே தங்கி விட்டிருந்தார். மாலை ஐந்து மணிக்கு பார்த்திபன் வீட்டிலிருந்து மனோகரியைப் பெண் பார்க்க வருவதாக ஏற்பாடாகிவிட்டிருந்தது. எப்படியாவது அந்த இடத்தில் தமது தம்பி மகளுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைந்துவிடவேண்டும் என்ற துடிப்பு அவருக்கு. அதுவும் இரண்டு தினங்களுக்கு முன்னர் அந்தக் காக்ஷியைக் கண்ட பின்னர் அந்தத் துடிப்புப் பன்மடங் காகி விட்டிருந்தது.

நாகமணி எதையும் மிகைப்படுத்திச் சொல்கிறவள் என்பது உண்மை; அதனால் மனோகரிமீது அவள் சுமத்திய கதைகளை அவர் காதுகளில் வாங்கிக் கொள்ள வேயில்லை. அன்று மாலை வேலைக்குப் பின்னர் நேரே வீட்டிற்குத் திரும்பாது அவர் நோயாகப் படுத்திருந்த தமது நண்பர் ஒருத்தரைப் பார்த்துவர திருவல்லிக்கேணிக் குப் புறப்பட்டு இருந்தார். நண்பரைக் கண்டு நலம் விசாரித்துவிட்டு நிதானமாக நடந்து கடற்கரை சாலைக்கு வந்தார் காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. அதை அனுபவித்தபடி தீவிரமான சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தார். சில தினங்களாக அவரது மண்டையை அழுத்திய பொறுப்பு உணர்ச்சி கொஞ்சம் லேசாகி விட்

டதைப்போன்ற ஒரு நினைப்பு இப்போது ஏற்பட்டிருந்தது. நாகமணி சொன்ன அந்த வரனைப் பற்றி அவர் உடனடியாக விசாரித்து விட்டிருந்தார். கேள்விப்பட்டவையெல்லாம் அவரது மனதிற்கு மிகவும் திருப்தியாக விருந்தன. பிள்ளை வீட்டவர்கள் பெண்ணைப் பார்க்க அந்த வெள்ளிக்கிழமை வரலாம் என்று ஒப்புதலும் தெரிவித்திருந்தார். அதைப் பற்றிய சிந்தனையில் தம்மை மறந்து சென்று கொண்டிருந்த அவருக்குத் திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. காற்று வாக்கில் காதில் வந்து மோதிய அந்தப் பழக்கப்பட்ட குரல் அவரைத் திடுக்கிடச் செய்தது திரும்பிப் பார்த்தார்.

மனோகரி யாரோ ஒரு வாலிபனுடன் ஜோடியாக நடந்துகொண்டு பேசிச் சிரித்தபடி மணற்பரப்பை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்!

அதிர்ச்சி தாளாது செயலற்று நின்று விட்டார் நல்லசிவம் சூழ்நிலையைக்கூடக் கவனிக்காது அவர்களிருவரும் மணல்மீது நெருக்கமாக உட்கார்ந்து கொண்டதைக் கவனித்ததும் அவருக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

''என்ன துணிச்சல், இந்தப் பெண்ணுக்கு. பெரியப்பன் ஒருத்தன் உயிரோடு இருக்கச்சே இப்படி ஒரு ஆட்டமா?'' தமக்குள்ளே எண்ணி வெகுண்டார். ஓடிச்சென்று அவளை உலுக்கி எழுப்பி நிறுத்தி கன்னத்தில் ஓங்கி அறைந்து-கழுத்தைப் பிடித்து நெருக்கி...அவளை அப்படியே கண்டந்துண்டமாக வெட்டி கூறுபோட்டு-இப்படிப் பல கோரமான தண்டனைகளை மனம் கணப்பொழுதில் வழங்கிக் குவிந்துவிட்டது. திடீரென்று இடையே ஏற்பட்ட ஒரு அச்சம் அவரைக் குழப்பிவிட்டது.

ஆத்திரப்பட்டுக்கொண்டு இப்போது அவர் அவளைத் தண்டிக்கப் புறப்பட்டால்-கூட்டம் கூடிவிடும். கதை ஊர் முழுவதும் பரவிவிடும். வெண்ணை திரளும் சமயம் சட்டியை உடைத்தால்-நல்ல இடத்கிலிருந்து பெண்கேட்க வரப்போகிறார்கள். இது சமயம் இந்த விஷயததைப் பெரிசு பண்ணுவது சரியில்லையே...வினாடியில் பலவும் எண்ணி அவர் தவித்துப்போனார். சிரமப்பட்டு தமது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு மறுபடியும் அந்தத் திக்கைப் பார்க்கப் பிடிக்காதவராக அவர் விரைவாக வீட்டையடைந்தார்.



அன்று வழக்கம்போல் மனோகரி இருட்டிய பின்பே வீட்டிற்கு வந்தாள்.

''இப்ப நீங்களே நேரே பாத்திட்டீங்க இல்லையா? இப்போ நேரம் என்ன? கூப்பிட்டு விசாரியுங்கோ...'' நாகமணி முன்னறையில் விசனமாக உட்கார்ந்திருந்த கணவனிடம் ஓடிவந்து இரைந்தாள்.

மனைவியை அடக்கிவிட்டு முன்னறைக்குள் அவர் சஞ்சலத்துடன் உலாவத் தொடங்கினார்.

சங்கடமானதொரு நிலையில் தாம் சிக்குண்டு தவிப்பதை அவர் உணர்ந்தார். மனோகரியைப் பற்றிய பிரச்னை முள் புதர்மேல்விழுந்துவிட்ட சேலையைப்போல் சிக்கலாக இருந்தது. இளவயசுப் பெண்; அதிகமாகக் கண்டிக்கவும் முடியாது-கண்டிக்காமலிருக்கவும் கூடாது. முள்ளில் புடவை கிழியாது லாவகமாக எடுப்பதுபோல் நிலைமையை அவர் இப்போது சமாளித்தாக வேண்டும்...

''மனோகரி! இங்கே வாம்மா-'' பெரியப்பா தணிவான குரலில் அழைத்தார்!

குற்ற உணர்வுடன் மிரண்டு கொண்டு அவள் அவர் எதிரே வந்து நின்றாள். என்னென்னவோ பேச வேண்டும். எப்படியெல்லாம் கண்டிக்க வேண்டும் என்று நல்லசிவம் முன்கூட்டியே யோசித்து வைத்திருந்தார். ஏனோ அந்தப் பெண்ணின் சோகம் நிறைந்த முகத்தைக் கண்டதும் அவருக்கு எதுவுமே கேட்கத் தோன்றவில்லை.

''நாளை வெள்ளிக்கிழமை. நீ ஆபீஸிற்கு லீவுபோட்டு விட்டு வீட்டிலேயே இரும்மா. உன்னைப் பெண் பார்க்க ஒரு இடத்திலிருந்து மனுஷா வராங்க...'' மெல்லிய குரலில் உத்திரவிட்டு அவர் உள்ளே சென்றுவிட்டார்.

அந்த வெள்ளிக்கிழமை வந்து விட்டது நேரமும் நெருங்கி விட்டது அவரது பரபரப்பும் அதிகரித்தது. அமைதியின்றி வராந்தாவிற்கு வந்து அடிக்கொரு தடவை தெருவை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டில் அன்று லாவணியைத் தவிர மற்ற எவருக்கும் அமைதி இருக்கவில்லை. இரண்டாம் தாரந்தானே என்று நாகமணி ஆரம்பத்தில் அசட்டையாகத்தானிருந்து விட்டாள்.

கணவன் விசாரித்து வந்த விஷயங்களைக் கேள்விப் பட்டதும் அவளுக்கு மிக்க வியப்பு.

''இந்த அனாதைப் பெண்ணிற்கு அப்படி ஒரு நல்ல இடமா?''

ஆத்திரமும் பொறாமையும் தாளமுடியாது அவள் குமுறிக் கொண்டிருந்தாள். பிள்ளை வீட்டவர்களை சிறப்பாக வரவேற்க வேண்டுமென்ற எண்ணம் துளியும் அவளிடம் இருக்கவில்லை. ஆனால் வரனை அறிமுகப் படுத்தியவள் அவளது அண்ணியின் ஓரகத்தி அமிர்தம் அவளும் கூடவே அவர்களோடு வருவாள். அவள் முன்னிலையில் தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்க முடியுமா?

காலையில் எழுந்ததிலிருந்து அதுவரை மனோகரி மீது எரிந்து விழுந்தபடியே அவள் அரை மனத்துடன் பிள்ளை வீட்டவர்களை வரவேற்கும் வைபவத்திற்குப் பலகாரங்கள் தயாரித்து முடித்திருந்தாள். முன்னறைக் கடிகாரம் ஐந்து மணி அடித்து ஓய்ந்தது வாசலில் சொல்லி வைத்தது போல் பிள்ளை வீட்டவர் கார் வந்து நின்றது.

ஆவலைக் கட்டுப்படுத்த முடியாது நாகமணி மெல்ல வெளியே வந்து பார்த்தாள். காரை நிறுத்திவிட்டு இறங்கிய மனிதனை வைத்த கண் வாங்காது விழித்தாள். ''அவனா பார்த்திபன்'' இரண்டாம் தாரம் என்றதும் வயதானவனையல்லவா அவள் எதிர்பார்த்தாள். செக்கச் செவேலென்று வாட்ட சாட்டமாகப் பார்க்க லக்ஷணமாக -இள வயதுடையவனாக-மாப்பிள்ளை இருப்பான் என்று



அவள் சிறிதும் எண்ணிப் பார்க்கவேயில்லை. அந்த அதிர்ச்சியில் ஏற்பட்ட ஆத்திரத்தைத் தாளமுடியாது அவள் உள்ளே விரைந்து சென்றாள் வேலையெல்லாம் முடித்து விட்டு அப்பொழுதுதான் மனோகரிக்கு அலங்கரித்துக் கொள்ளக் கொஞ்ச நேரம் கிடைத்தது. குளியலறையிலிருந்து வெளிப்பட்ட அவளைக் கண்டதும் நாகமணி சீறினாள்.

''நீ சீவி சிங்காரித்துக் கொள்ரதுக்குள்ளே பட்டணம் பறிபோகிவிடும். போ, சனியனே. உங்கம்மா புடவை ஒண்ணு பெட்டியிலே கிடக்கு. அதை எடுத்து உடுத்திக் கிட்டு சட்டுனு தயாராக இரு.அவங்கள்லாம் வந்தாச்சு...'' அரைக் குரலில் அதட்டினாள்.

வனிதாவுக்கு சல்லடை போட்டுத் தேடியும் கிட்டாத ஒரு வாழ்க்கை இவளுக்கு வலிவில்லவா வந்து அமைந்து கொண்டுவிட்டது.

''இத்தனை அதிஷ்டமா?''-பற்களைக் கடித்துக் கொண்டாள் நாகமணி.

அவளுக்கு மனதில் சிறிதும் அமைதியே இல்லை முன்னறையில் வந்து கூடிவிட்ட அவர்களை வரவேற்கப்போலியான தொரு புன்னகையுடன் அவள் விரைந்தாள்.

மனோகரியைப் பெண் பார்க்க வருகிறார்கள் என பதைக் கேட்டதும் வனிதாவுக்கும் மன உளைச்சல். எத்தனை முயற்சித்தும் அவளை அறியாது ஒரு பொறாமை -வேதனை

அவளுக்கு முன்னால் மனோகரிக்குக் கல்யாணம் நடந்து விடக்கூடும் என்பது பற்றிய பொறாமை. அந்த வைபவத்திற்காக அவள் தன்னை அலங்கரித்துக்கொண்டு அமைதியற்றவளாக அறைக்குள் உட்கார்ந்திருந்தாள்.

லாவணிக்குக்கூடச் சிறிதளவு பொறாமை என்றாலும் அவளது விளையாட்டுப் போக்கிலே அது அடிபட்டு விட்டிருந்தது.

கார் வந்து நின்றதும் வெளியே சென்று வந்தவர்களை நோட்டம் பார்த்துவிட்டு அவள் பரபரப்பாக ஓடி வந்தாள் அவசரமாகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்த மனோகரியின் கன்னத்தை மெள்ளக் கிள்ளினாள்.

''உனக்கென்ன குறைச்சல் இனி. கார், பங்களா, நகைகள். கல்யாணமானதும் எங்களையெல்லாம் லக்ஷயம் பண்ணுவியோ மாட்டியோ. உனக்கு வேண்டாம் என்றால் சொல்லிவிடு. நான் கழுத்தை அவருக்கு நீட்டி விடுகிறேன்'' கேலியும் சிரிப்புமாக ஆர்ப்பரித்தாள்.

வனிதாவுக்கு எரிச்சல் "போதும் நிறுத்து உளறாதே...'' தங்கையை அதட்டினாள். லாவணி சட்டென்று ஓய்ந்துவிடுகிறவளாகத் தென்படவில்லை.

''மாப்பிள்ளையைவிட அந்தம்மாள் அதுதான் வரப் போகிற உன் நாத்தனார்...அவர்களைப் பார்த்ததுமே நீ மயங்கி விடுவே. நம்ம அம்மாவைவிடக் கொஞ்சம் பெரியவங்களாக இருப்பாங்க. ஆனால் பளபளன்னு முகத்திலே பணக்காரக் களை சொட்டுகிறது. மனோகரி! உன் கல்யாணத்துக்கு உன் மாப்பிள்ளையிடம் சொல்லி எனக்கு ஒரு அழகான சேலை எடுத்துத் தரணும் தெரியுமா...?'' கொஞ்சிக் கொண்டு அவள் விளையாடினாள்.''

வனிதாவுக்குக் கோபத்தை அடக்க முடியவில்லை. வாயை மூடுடி லாவணி. இரண்டாந்தாரக்காரனைப் புகழ வந்துவிட்டா. போதும் உன் பேச்சு...''

மனோகரிக்குப் பேசமுடியாது கழுத்துவரை துக்கம். காலையிலிருந்து பெரியம்மா அவளை வார்த்தைகளால் வதைத்துக் கொண்டிருந்தாள். இப்போது வனிதா விஷமமாக வேண்டுமென்றே பேசி அவள் மனத்தைப் புண் படுத்துகிறாள்.

இதெல்லாம் விட அவள் வேண்டாத— விரும்பாத ஒரு திருமணத்தில் ஈடுபடுத்த பெரியப்பா தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்.



மனோகரியால் எத்தனை நாள் பொறுத்துக் கொள்ள முடியும்? கட்டுப்படுத்த இயலாது வழிந்த கண்ணீர் அவளது கன்னங்களில் வழிந்தோடிய...

லாவணி அருகில் ஓடி வந்தாள். ''ரெண்டாந்தாரம் என்றதும் வயதான கிழவன்னு பயந்துதானே கண் கலங்கிறே —சே! கண்களைத் துடைச்சுக்கோ. நான் மாப்பிள்ளையை நல்லா பார்த்துட்டேன். எப்படி இருக்கார் தெரியுமா? ஹை...'' என்று மெல்லியதாக சீட்டியடித்தாள். ''ரொம்ப ஸ்மார்ட்கை. நீ பார்த்தா அங்கேயே உட்கார்ந்திடுவே. ஆள் அத்தனை ஜோர்... வேண்டாம்னா சொல்லு. நான் கொத்திக் கொண்டு போய் விடுகிறேன்'' சிரித்தாள் வேடிக்கையாக.

வனிதாவிற்குத் தங்கை மீது எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

''ரெண்டாந்தாரம்னா மனசு அப்படித்தான் கலங்கும். என்னதான் பணமும் காசும் இருந்தால் கூட இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்படனும்னா சின்னப் பெண்களான நம் மனசிலே ஒரு நெருடல் இருக்கத்தானிருக்கும். முதல் தாரமாக வாழ்க்கைப்பட போகிற உற்சாகமும் சந்தோஷமும் இருக்கவே இருக்காது. பணம் பங்களா எல்லாத்தையும் என் காலடியில் வச்சுக் கும்பிட்டா கூட நான் இரண்டாந்தாரமாக மாலையிட ஒப்புக் கொள்ளமாட்டேன்'' அடித்துப் பேசினாள் அவள்.

"எனக்கு இந்த வரன் வேண்டாம். முதல்தாரமாகக் கொண்டு வந்தால்கூட வேண்டாம். என் மனசை வேறு ஒருத்தருக்குக் கொடுத்து விட்டேன்' என்று உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற ஆவேசம் மனோகரிக்கு. இந்த மாதிரி சமயத்தில் ஒரு பெண்ணுக்கு வேண்டியது தாயின் அருகாமை. மனத்தில் உள்ளதை உள்ளபடி துணிவுடன் அவள் ஒருத்தியிடம்தான் சொல்ல முடியும். அவள் ஒருத்தி தான் நன்கு புரிந்து கொள்வாள். ஆனால் மனோகரிக்குத் தான் அந்தப் பாக்யம் இல்லையே!

நெஞ்சை அடைத்த துக்கத்தை விழுங்கிக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள். அலங்காரத்தை விரைவாக முடித்துக் கொண்டு அவள் தயாராக நின்றாள். அதற்குள் பெரியம்மா நாகமணி கடுமையான முகத்துடன் அங்கு வந்து விட்டாள்.

''அவங்கல்லாம் உன்னைப் பார்க்கணும்கிறாங்க இப்படி என் பின்னாடி வா...''

பலிபீடத்திற்குச்செல்லும் ஆடுபோல் அவள் பதை பதைப்புடன் முன்னறைக்குச் சென்றாள்.

அதற்குப் பின்னர் எல்லாம் கனவில் நடப்பன போல் அவளுக்குப் பிரமிப்பாக இருந்தன.

"வீணை வாசிக்கத் தெரியுமா? கொஞ்சம் வாசிக்கச் சொல்லுங்க'' சிறிது பருமனாக-சிவப்பாக இருந்த பெண் மணி-மாப்பிள்ளையின் சகோதரி கேட்டாள். குரல் கிணற்றிலிருந்து ஒலித்தது போல மனோகரிக்குக் கேட்டது.

தன்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபனை மெல்ல ஒரு முறை அவளும் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னை வற்புறுத்தி மணந்து கொள்ள முயற்சிக்காதீங்க'' என்று கெஞ்சிய அந்த விழிகளில் நிறைந்து நின்ற வேண்டுகோளை அவன் புரிந்து கொண்டானோ என்னவோ அவளுக்குத் தெரியாது. விரல்கள் மீட்டிய வீணையின் நாதத்திற்கு எதிரொலியாக அவளது உள்ளம் ஊமையாக அழுது கொண்டிருந்தது.

கண்களைத் திரையிட்ட நீரைச் சமாளித்துக்கொண்டு அவள் வீணை வாசித்து முடித்தாள். பின்னர் எல்லோரையும் வணங்கிவிட்டு வேகமாக அறைக்குள் சென்று படுக்கைமீது சாய்ந்துகொண்டு விசித்து விசித்து அழுதாள்.

அவர்கள் எல்லோரும் புறப்பட்டு சென்றுவிட்டனர்.

வெகு நேரம் சென்ற பின் நல்லசிவம் அறைக்குள்ளே தலையை நீட்டி மெல்லிய குரலில் அவளை அழைத்தார்.



எழுந்து வந்த மனோகரியைப் பார்த்து அவர் நெஞ்சம் துணுக்குற்றது

அவள் முகம் வீங்க, கண்கள் சிவந்து சோகத்தின் வடிவமாகக் காணப்பட்டாள். அவளது துயரத்தின் காரணத்தை அவரால் ஊகிக்கவும் முடிந்தது ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்காம்மா? அவங்களுக்கு உன்னைப் பிடிச்சு விட்டதாம் நீ சரின்னா விரைவாக முகூர்த்தத்தை வச்சுக்கலாம்னு சொல்லிட்டுப் போனாங்க...'' மேலே பேச முடியாது அவர் அவளைக் கனிவாகப் பார்த்தார்.

''யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் கொடுங்க பெரியப்பா...'' திணறினாள் அவள் துக்கத்துடன்.

அதற்குக் காரணம் இல்லாது போகவில்லை. பெற்றோர்களைக் கண்டு தன் கல்யாண விஷயமாகப் பேசி உத்திரவு வாங்கிவர அரவிந்த்குமார் தஞ்சைக்குப் போயிருந்தான் இரண்டு தினங்களில் திரும்பிவிடுவதாக அவன் வாக்களித்திருந்தான். அவன் வந்துவிடுவான். அவளது துயரத்திற்கெல்லாம் ஒரு முடிவும் ஏற்பட்டு விடும் என்று ஆவலுடன் அவள் காத்திருந்தாள்.

திங்கள்கிழமை காலை—''ஹலோ மனோகரி!'' அவன் டெலிபோனில் அழைத்தான். தாங்கமுடியாத மகிழ்ச்சி அவளுக்கு.

''அரவிந்த்! உங்களை நான் மாலை கட்டாயம் சந்திக்கணும். ரொம்ப முக்கியமான விஷயம்'' பதட்டமாகச் சொன்னாள் அவள்.

''நானும் உன்னை முக்கியமாகச் சந்திக்கணும்-அதே இடத்தில்-சாயங்காலம் பார்ப்போமா''-போனை வைத்துவிட்டான் அவன்.

கடற்கரை மணல்மீது வழக்கமாகச் சந்திக்கும் அதே இடத்தில் அவர்கள் அன்று மாலை சந்தித்தனர்.

சுற்றி வளைக்காது மனோகரி சொல்லிவிட்டாள்.

''ஏற்கனவே உங்ககிட்ட சொல்லியிருந்தேனே-அந்த வீட்டிலிருந்து பெண் பார்க்க வந்தாங்க. என்னைப் பிடிச்சு விட்டதாம். சீக்கிரம் கல்யாணத்தை வச்சுக்க ணும்னு பெரியப்பா அவசரப்படுகிறார். அரவிந்த்! நீங்க இந்தச் சமயம் அருகில் இல்லையேன்னு நான் ரெண்டு நாளா தவிச்சுப் போயிட்டேன்...'' துக்கத்துடன் திணறி னாள் அவள்.

அரவிந்த்குமார் சட்டென்று பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பின்னர் தொண்டை யைக் கனைத்துக்கொண்டு 'மனோ' என்று மெல்ல அழைத்தான். ''உன்னைப்பத்தி விவரமா நான் என் பெற்றோர்கிட்ட சொன்னேன்; நீ ஏழைப்பெண் என்ப தைப்பத்தி அவங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை ஆனால்...''

''ஆனால்?'' மனோகரி திகைப்புடன் அவன் முகத் தைப் பார்த்தாள்

''உன் தாயாரைப் பத்தின சங்கதியைச் சொன்னேன். அதைக் கேட்டதும் என் பெற்றோர்கள் ஒரே பிடியாக இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க முடியாதுன்னு மறுத் துட்டாங்க. அவங்களை மீறி உன்னைக் கல்யாணம் செய்துகொண்டா அவங்க மனசு உடைஞ்சு போயிடும். வயசு காலத்திலே அவங்களுக்கு நான் கஷ்டம் கொடுக் கிறது நியாயமா சொல்லு-''

அண்ட சராசரங்கள் எல்லாம் கணப்பொழுதில் இடிந்து தலைமீது விழுந்துவிட்ட அதிர்ச்சி, மனோகரிக்கு. இதயமே வெடித்துவிடும் போன்ற துக்கம் நெஞ்சை அடைக்க அவள் பேச முடியாது தடுமாறினாள்.

''அப்படின்னா என் கதி?'' கண்ணீருடன் திக்கிக் கொண்டு கேட்டாள்.

''கல்யாணம்னு நமக்குள் நடக்காது போனால் என்ன; நாம் நெருக்கமான சிநேகிதங்களாக இருப்பதை யாரும் தடுக்க முடியாதே. அதுக்கு எந்த விதமான ஆபத்தும்



இல்லையே. என் மனசில் உள்ள அன்பு கடுகளவும் குறை யாது. கவலைப்படாதே...'' என்றான்.

புடவைமீது படிந்துகிடந்த மணலை உதறிக்கொண்டு வெடுக்கென்று எழுந்தாள்:

''அரவிந்த் மன்னிச்சுக்கோங்க, எனக்கு வேண்டியது கௌரவமான வாழ்க்கை. நீங்க சொல்கிற சிநேகிதம் ஒத்துவராத விஷயம். இத்தோட நாம் பிரியரது புத்தி சாலித்தனமாகும். குட்பை-தாங்யூ பார் எவ்வரிதிங்...'' அவன் பேசியதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவள் விம்மிக்கொண்டே நடந்தாள்.

மலையாக அவள் அவனை நம்பிக்கொண்டிருந்தாள். இத்தனை விரைவில் அவளது கற்பனைக் கோட்டைகள்-நம்பிக்கைகள்-கனவுகள் எல்லாம் அஸ்தமித்துவிடும் என அவள் எதிர்பார்க்கவேயில்லை. எத்தனைப் பெரிய ஏமாற் றம்—'மனோகரி! நீ இன்னமும் வாழவா ஆசைப்படுகி றாய்? இந்தப் பூமி பிளந்து உன்னை விழுங்கினால் என்ன? கடல் பொங்கி நீ அதற்குள் மறைந்துவிடக் கூடாதா-துர்அதிர்ஷ்டம் பிடித்தவளே-நீ வாழவா வேண் டும்...' அழுதுகொண்டே அவள் கால் போன போக்கில் நடந்தாள்.

# 7

மனோகரியின் திருமணம் எளிய முறையில் வடபழனி ஆண்டவர் சந்நிதியில் இனிதே நடந்தேறியது. விடியற் காலை கல்யாணம். பின்னர் நுங்கம்பாக்கத்திலிருந்த தனது பங்களாவில் விருந்து-உடனடியாகத் தேன்நிலவுக்கு மண மக்கள் மோட்டாரில் பயணம் என்று பார்த்திபன் திட்ட மிட்டிருந்தான்.

வரதக்ஷிணை, சீர் ஒன்றையும் எதிர்பார்க்காது கல்யா ணச் செலவையும் தானே அவன் ஏற்றுக்கொண்டு விட்ட தைப் பற்றி நல்லசிவத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. தலை மீது இதுவரை அவர் சுமந்து கொண்டிருந்த பெரிய பாரம்

இறங்கிவிட்டது போன்று, அவர் மனம் லேசாகி விட்டிருந்தது. திருமண வீட்டவர்கள் இருசாரரும் நண்பர்களும் பார்த்திபன் வீட்டில் குவிந்துவிட்டனர். மணமக்கள் காரில் வந்து இறங்குவதைக் கவனித்த நல்லசிவம் உற்சாகத்துடன் முன்புற தோட்டத்திற்கு ஓடி வந்தார். சில்க் ஜிப்பாமீது நழுவிச் சரிந்த அங்கவஸ்திரத்தை அள்ளித் தோளில் போட்டுக்கொண்டு கெட்டி மேளம்...ஆரத்தி எங்கே...வலதுகாலை எடுத்து வச்சு உள்ளே போம்மா... என்று உரத்த குரலில் கத்திக்கொண்டு இங்குமங்கும் ஓடினார்.

மணமக்கள் பின்னால் தொடர்ந்த மற்றொரு காரில் தன் பெண்களுடன் வந்த நாகமணிக்கு கணவனது ஆர்பாட்டங்கள் எரிச்சலைக் கொடுத்தது, காரினின்று இறங்கி தோட்டத்தையும் வீட்டையும் பார்த்து பிரமித்துப் போனாள். ''இந்த அனாதைப் பெண் மனோகரிக்கு இப்படி ஒரு யோகமா?'' பொறாமைத் தீயிலே அவள் நெஞ்சு பற்றி எரிந்தது. ''கீழே இறங்குங்கோ சீக்கிரம். உங்கப்பாதான் தேன் குடிச்ச மந்தி மாதிரி அங்கே ஆடுறார்ன்னா, நீங்க ரெண்டுபேரும் காணாததைக் கண்டது போல ஏன் அப்படி பராக்கு பாக்கிறீங்க...உள்ளே போங்க...'' தன் மக்கள் இருவரையும் ஆத்திரம் தீர அதட்டிககொண்டு அவள் விரைந்தாள்.

மாலையும் கழுத்துமாகத் தன்னை வணங்கி நின்ற மணமக்களைக் கண்டு மகிழ்ச்சியில் பொங்கிப் போனாள காமாக்ஷி. மார்புடன் மனோகரியைத் தழுவிக்கொண்டு ஆனந்தத்தில் பனித்துவிட்ட தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா நீங்கள்தான் இவங்களைக் கூட்டிக்கொண்டு பூஜையறைக்குப் போய் பெண் கையால் இந்த வீட்டு விளககை ஏற்றச் சொல்லுங்க...'' உணர்ச்சி வசத்தில் தடுமாறியபடி நாகமணியிடம் கேட்டுக்கொண்டாள்.

அநத நிகழ்ச்சியை வேடிக்கை பார்க்க பெண்கள் அனைவரும் பூஜையறைக்குப் படையெடுத்துவிட்டனர்.



கணவன் அருகில் நின்றுகொண்டிருந்தாள் மனோகரி. பளபளவென்று தேய்த்து, தட்டின்மீது வைத்து, மஞ்சள் குங்குமப பொட்டிட்டு, பூச்சூட்டி அழகாகச் சலவைககல் மேடைமீது பராசக்தியின் திருவுருவத்தருகே வைக்கப்பட்டிருந்தது வீட்டின் திருவிளக்கு. அதை ஏற்றகக் குனிந்தாள் மனோகரி. அவளது உள்ளமும் கைகளும் நடுங்கின. திடீரென்று அவளையும் மீறி பொங்கிக் கொண்டு வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. கண்கள் கலங்கி கண்ணீர் கன்னங்களை நனைத்தது.

அரவிந்த்குமார் வீட்டின் விளக்கை ஏற்ற எத்தனையோ ஆசைக் கனவுகள் கண்டு கொண்டிருந்த அவளை விதி எங்கே கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

சதா சர்வகாலமும் அந்தப் பெண்ணை விரட்டி அதிகாரம் செய்து—கடிந்துகொண்டு பழக்கப்பட்டிருந்த நாகமணியால் நாவையடக்க முடியவில்லை.

''நல்ல நாளும் அதுவுமாக துக்கிரியாட்டமா என்னத்துக்கு அழுகிறே'' இரைந்து கடுமையான குரலில் அதட்டிவிட்டு மனோகரியின் தோளைப் பிடித்து கோபமாகக் குலுக்கினாள்.

காமாக்ஷிக்கு அதைக் காணப் பொறுக்கவில்லை.

''இந்தாங்க! இனி அவள் எங்க வீட்டுப் பெண் அவளைக் கோபிக்கவோ ஏசவோ யாருக்கும் இனி அதிகாரம் கிடையாது...சின்னப்பெண்தானே அவள். புதிய இடம். இதுமாதிரி சமயங்களில் பெரியவங்க நமக்கே மனசை என்னவோ பண்ணுது—கண்ணிலே தண்ணி வந்துடுது...'' எனறு பரிந்து பேசிக்கொண்டு மனோகரியை கட்டி அணைத்துத் தேற்றியபடி தன்னுடன் உள்ளே அழைத்துச் செனறு விட்டாள்.

நாகமணி முகம் சிறுத்துப் போனாள். அதற்குப்பின் அவளிடம் கொஞ்சநஞ்சமிருந்த உற்சாகமும் ஒளிந்து

கொண்டுவிட்டது. எப்பொழுது வீட்டிற்குப் போகலாம் என்றதொரு பரபரப்பும் சலிப்பும் ஏற்பட்டுவிட்டன.

விருந்து மிகவும் சுவையாகத்தான் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அவளால் உணவைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. வனிதாவும் லாவணியும் தாயருகே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். வனிதாவும் தாயைப்போல் பொறாமை உணர்வில் குமைந்து கொண்டிருந்தாள். மனோகரிக்கு வாய்த்தது போல் அவளுக்கு ஒரு நல்ல இடம் கிட்டுமா என்ற ஏக்கம். அதில் அவள் மௌனமாகி விட்டிருந்தாள். வந்ததும் முதல் காரியமாக வீட்டைச் சுற்றிப் பார்வையிட்டு விட்டிருந்த லாவணிக்கு ஒரே வியப்பு அங்கு நடந்ததையெல்லாம் ஊன்றிப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த அவளால் வாயை மூடிக் கொண்டிருக்க முடியவில்லை. இலையில் கிடந்த ஜிலேபியை எடுத்து கடித்துச் சுவைத்தபடி அவள் தன் சகோதரியின் பக்கம் திரும்பினாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்திலே மாப்பிள்ளையும் பெண்ணும் தேன்நிலவுக்கு ஊட்டிக்குக் கிளம்பப் போறாங்களாம் அந்த காமாக்ஷியம்மாள் காரில் சாமான்களை ஏற்றும்படி ஆட்களுக்கு உத்தரவு போட்டுக் கொண்டிருந்தாங்க உனக்குத் தெரியுமா சங்கதி? பார்த்திபன் அத்தான் இந்த கல்யாணத்திற்காகத் தமது பழைய காரை விற்றுவிட்டு போனவாரந்தான் இந்தப் புதுக்காரை வாங்கினாராம்..." வீட்டைச் சுற்றித் தான் சேகரித்த வம்புகளை சகோதரியிடம் அளக்கத் தொடங்கினாள்.

வனிதாவுக்குக் கேட்கப் பிடிக்கவில்லை. "அம்மா! இங்கே பாருங்க இவளை, நிம்மதியா சாப்பிடவிடாம தொண தொணக்கிறாள்..." சீறினாள் அவள்.

"அம்மா, நான் பார்த்ததைச் சொன்னேன்—இவளுக்குப் பொறாமை, கேட்க எரிச்சல்..." சிரித்தாள் லாவணி.

நாகமணிக்கு மானம் பறிபோய்விடும்போல் மிகவும் வெட்கமாக இருந்தது. தங்கள் வீடு என்ற நினைப்பில்



அவர்களிருவரும் வந்த இடத்தை மறந்து சண்டை போடத் துவங்கி விடுவார்களோ என்ற அச்சம்.

"வனிதா! இலையைப் பார்த்து சாப்பிடு. நேரமாச்சு நாமும் கிளம்பணும்" என்று கடிந்துகொண்டாள். லாவணியைக் கோபமாக உறுத்துப் பார்த்தாள். "உனக்கு வயசாகிறதே ஒழிய விவேகமே கிடையாது. வீட்டுக்குவா சொல்றேன்..." பற்களைக் கடித்துக்கொண்டு நிமிர்ந்தாள். அதுசமயம் நல்லசிவம் பல்லை இளித்துக்கொண்டு அங்கே வந்தார்.

"வடை பாயசம் எல்லாம் இந்தப் பக்கம் வந்ததா? எல்லாம் நல்லா சாப்பிட்டீங்களா? என்று விசாரித்தபடி அருகில் வந்து நின்றவரை நாகமணி சுட்டுவிடுவதுபோல் விழித்தாள்.

"அவங்க எடுத்து செய்கிற கல்யாணம்—வந்தவங்களை உபசரிக்க உங்களை யாரும் அழைக்கலை. ஏடாகூடமாக ஏதாச்சும் செய்துவிட்டு மானத்தை வாங்காதீங்க. கிடைச்ச இடத்திலே போய் உட்கார்ந்து சாப்பிட்டுட்டு வீட்டுக்குக் கிளம்பத் தயாராகுங்க கொண்டான் வீட்டிலே ராத்திரி சாப்பாட்டுக்கும் காம்ப் போட்டுவிடாதீங்க...வெட்கக்கேடு..." அடிக்குரலில் காரமாகக் கணவனைக் கடிந்துகொண்டாள்.

"ஒருவழியாக விருந்து ஓய்ந்து எல்லோரும் புறப்பட்டனர். பார்த்திபன் புதுமனைவியுடன் ஊட்டிக்குக் காரில் பயணமானான்.

விழுப்புரம் செல்லும் நெடுஞ்சாலையில் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றான் அவன். இருட்டு முன்பு சேலத்தை அடைந்துவிட வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு. அன்றிரவு அங்கேயே ஒரு ஹோட்டலில் தங்கி இளைப்பாறிவிட்டுப் பின்னர் மறுநாட்காலை பயணத்தைத் தொடங்குவது என்று அவன் ஏற்பாடு. காலையில் மிகவும் கடுமையாக வீசத் தொடங்கியிருந்த வெய்யில் இப்போது தணிந்துவிட்டிருந்தது காரின் ஜன்னல் வழியே உள்ளே வீசிய காற்று மனோகரியின் கூந்தலைப் புரட்டிக்

கொண்டிருந்தது சாலைமீது கவனமாக இருந்த பார்த்தி
பன் ஓரக் கண்ணால் மனைவியின் பக்கம் பார்த்தான்.
திடுக்கிட்டுப் போனான். மனோகரி கண்ணீர் வடித்துக்
கொண்டிருந்தாள்

அன்று காலை திருமணத்தின்போது—பெண்ணைப்
பந்தலுக்கு அவர்கள் அழைத்து வந்தசமயம் அவன் மெள்
ளத் திரும்பிப் பார்த்தான். சிவப்பு வண்ண காஞ்சிபுரச்
சேலையுடுத்தி திருமணக் கோலத்தில் அவள் அழகின் உரு
வமாக நகர்ந்து வந்து மெல்ல அவன் அருகே மனையில்
அமர்ந்தாள். அப்போது அவனுக்கு ஏற்பட்ட உள்ளக்
களிப்பை விவரிக்கவே இயலாது. சிறிது.பின்னர் திருமணச்
சடங்கின் இடையே கவனித்தான். பட்டுப் பூச்சியின் சிறகு
கள் போல் படபடத்த அவளது கண் இமைகள் கண்ணீரில்
நனைந்திருப்பதைக் கண்டு ஒரு கணம் நெஞ்சம் துணுக்
குற்றான். ஹோமப் புகை பட்டு கண்ணீர் கசிகின்றது
போலும் என்று தனக்குள்ளே சமாதானம் செய்துகொண்
டான். யாரும் கவனிக்காத சமயம் தன் கைக்குட்டையை
அவள் கரத்தில் மெல்ல வைத்தான். ''கண்களைத்
துடைச்சிக்கோ'' என்று குனிந்தபடியே மெல்ல அவள்
காதருகில் பரிவுடன் சொன்னான் பின்னர் அவன் வீட்டில்
விளக்கை ஏற்றும்போது அவள் கண்களில் கண்ணீர் கரை
புரண்டதைக் கண்டு அவன் திகைப்படைந்து போனான்.

அவன் சகோதரி கூறியதுபோல் இளவயதுப் பெண்—
சூழ்நிலை மாற்றத்தில் ஏற்பட்ட குழப்பமான உணர்ச்சி
களின் விளைவு கண்ணீர் என்று தன்னைத்தானே மறுபடி
யும் சமாதானப் செய்துகொண்டான். ஆனால் இப்போது
எதற்காக அவள் அழுகிறாள்?

சாலை ஓரமாகச் சிறிது தூரத்தில் ஒரு மரத்தடியில்
வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான். டிக்கியை திறந்து
காமாக்ஷி கருத்துடன் ஏற்றி அனுப்பியிருந்த தண்ணீர்
கூஜாவை எடுத்துக்கொண்டு வந்தான்.

''மனோ! முகத்தைக் கழுவித் துடைச்சுக்கோ. பிறகு
அக்கா கட்டிக்கொடுத்த இட்லியும் காப்பியும் சாப்பிட்டு



விட்டுக் கிளம்பலாம். சேலம் போகிறதுக்குள் நீ ரொம்ப
களைச்சும் போய்டுவே...''கனிவாகச் சொன்னான்.

வண்டியினின்று மனோகரி இறங்கினாள்! பயணத்
திற்காக அவள் உடுத்தியிருந்த நீலவண்ண வாயில் சேலை
அலங்கிவிட்டிருந்தது. காற்றிலே கலைந்து நெற்றிமீது
புரண்ட கூந்தலும் கண்ணீர் கறைபடிந்த கண்களுமாக
அவள் மிரட்சியுடன் நின்றபோது—குற்றம் புரிந்துவிட்டு
தண்டனைக்கஞ்சி நிற்கும் பச்சைக் குழந்தையின் நினைப்
புத்தான் அவனுக்கேற்பட்டது. நெஞ்சம் நெகிழ்ந்துபோய்
விட்டான் அவன். அவளது கூந்தலை மெல்ல ஒதுக்கிவிட
அருகில் அவன் நெருங்கியபோது அவள் சிணுங்கிக்
கொண்டு நகர்ந்து நின்றாள். தானே பரபரப்புடன் கூந்
தலைத் தள்ளிக்கொண்டாள். தண்ணீர் கூஜாவை வாங்கி
முகத்தைக் கழுவிக்கொண்டாள். அவசரமாகப் புடவைத்
தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். காரின்
முன் ஆசனத்தில் விட்டு வைத்திருந்த தனது கைப்பையை
எடுத்து சீப்பினால் கூந்தலை வாரி சீராக்கிக்கொண்டாள்.
நெற்றியில் குங்குமப் பொட்டொன்றை வைத்துக்கொண்
டாள். இதற்குள் பார்த்திபன் மரத்தடியில் ஜமக்காளம்
ஒன்றை விரித்துப் போட்டு டிபன் பாக்ஸைத் திறந்து
இட்லிகளையும். இனிப்பு வகைகளையும் தட்டுகளில்
பரிமாறி வைத்தான். பிளாஸ்க்கிலிருந்த காப்பியை டம்ள
ரில் ஊற்றி வைத்துவிட்டு ''மனோ வா—இப்படி உட்கார்
சாப்பிடலாம்...'' உபசரித்தான்.

வேண்டா வெறுப்பாக மனோகரி ஜமக்காளத்தின்மீது
வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சோகம் படிந்த அவள் முகத்தைப் பார்த்துவிட்டு
பார்த்திபன் மிகவும் மனம் கலங்கிப்போனான். பெரியப்பா
வீட்டிலே-அனாதையான நிலையில் அவள் மிகவும் துன்பப்
பட்டவள் என்று சகோதரி விவரித்தபோது அவன் மனம்
மிகவும் கரைந்துவிட்டிருந்தது. தன் மனைவி என்று அவள்
வீட்டிற்கு வந்ததும்-எந்த விதமான துன்பமும் அணுகாமல்
அவள் கண் கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது

தன் கடமை என்று என்னென்னவோ...எண்ணிக் கொண்டிருந்தான். எத்தனையோ இன்பக் கதைகள்...குனிந்தபடி உட்கார்ந்திருந்த அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தி ''நமது மணவாழ்க்கை இனிதாக ஆரம்பிக்க முதல் முதலாக என் கையால் இந்த இனிப்பைக் கொடுக்கிறேன் சாப்பிடு...'' மைசூர்பாகு துண்டொன்றை அவள் முன் நீட்டி உபசரித்தான்.

மனோகரிக்குத் துக்கம் தாளமுடியவில்லை. அதைக் கையில் வாங்கிக் கொண்ட அவள் கட்டுப்படுத்த முடியாத துயரத்திலே விசித்து விசித்து அழத் தொடங்கினாள்.

பார்த்திபனுக்கு மெத்த அதிர்ச்சி. இனியும் அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

''மனோ, என்னத்திற்கு அழுகிறாய்? காரணம் எனக்குத் தெரியவேணும்'' முதலில் கனிவாகவும் பின்னர் அதட்டலாகவும் கேட்டான். அவன் நெஞ்சு படபடவென்று துடித்தது. குப்பென்று முகம் முழுவதும் வியர்த்துவிட்டது.

பதிலளிக்காமல் அவள் அழுதுகொண்டிருந்தாள்.

''நான் கேட்கிறேன்-நீ அழுது கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?''

கொஞ்சம் கோபத்துடன் கேட்டுவிட்டு முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

அவன் உள்ளத்திலே அது சமயம் எழுந்த ஒரு சந்தேகம். அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள கொஞ்சம் வெட்கமாகவும் துன்பமாகவுமிருந்தது. துணிவுடன் முடிவில் கேட்டுவிட்டான்.

''மனோ! உனக்கு இந்தக் கல்யாணம் பிடித்தமாக இருக்கவில்லையா?'' முடிக்குமுன் மூச்சு நின்றுவிடும் போன்ற ஒரு பயங்கர உணர்வு அவனுக்கு.

மெல்ல தலையை நிமிர்த்தி விழிகளில் பெருகிய கண்ணீரிடையே அவனைப் பார்த்தாள்.

''என்னை பெரியப்பா வற்புறுத்தினார்.'' விம்மினாள் அவள்.



''நீ மறுத்திருக்கலாமே...என் ஒப்புக்கொண்டே...'' காரமாகக் கேட்டான் அவன்.

''இந்தக் கல்யாணத்துக்கு நான் ஒப்புக்கொள்ளாட்டி அவர் தூக்குப் போட்டுக்கொண்டு விடுவதாகப் பயமுறுத்தினார்...'' அவள் தொடர்ந்து விக்கினாள்

உலகமே இருண்டு எங்கேயோ பாதாளத்திற்குள் மறைந்துவிட்ட ஒரு பயங்கர அதிர்ச்சியில் கல்லாகச் சமைந்து போய்விட்டான் பார்த்திபன்

''உட புத்திசாலி! இவ்வளவு நாள்வரை வைராக்யமாகத் தனியாக வாழ்ந்திருந்துவிட்டு இப்படி ஒரு பிசகைச் செய்வாயா?'' அவன் உள்ளம் சாட்டை கொண்டு சாடியது. அதன் வேதனையைத் தாளாது முகத்தைக் கடுத்துக் கொண்டான். முகமும் உடலும் அனலாக அவமானத்தில் எரிந்தது.

''நீ இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்ததாக உன் பெரியப்பா சொன்னதை நம்பிட்டேன்...'' எரிச்சலோடு சொன்னான்.

மனோகரி கண்களைத் துடைத்துக்கொண்டு துணிவுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்னைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை கேட்டீங்களா?''

அவன் மனத்தை சுருக்கென்று தைத்தது அந்தக் கேள்வி-உண்மைதான். அவன் அவளை நேரிடையாக கேட்கவில்லையே?

''உங்கள் முதல் கல்யாணத்தையும் இப்படித்தான் பெண்ணைக் கேட்காமலே செய்து கொண்டீங்களோ?...'' ஏளனமாக அவளது கேள்வி அவனை மீண்டும் திகைக்க வைத்தது.

''இல்லை. நானும் கலாவும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டோம். அதைப்பற்றி இப்போது விமரிசனம் தேவையா?''

''இல்லை. அவ்வளவு ரசனை தெரிந்தவர், பெண்ணைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் அல்லவா?''

''மனோ! தப்பு-பெரிய தப்பைச் செய்துவிட்டேன். அதற்கு இப்போ என்ன செய்யச் சொல்றே?''

''என் வாழ்வு பாழாகிப் போனது. இனி என்ன செய்கிறது?'' மீண்டும் பொல பொலவென்று கண்ணீர் வடித்தாள்.

''என் வாழ்வும் பாழாகிப்போனதை நீ புரிந்துகொள்ளவில்லை. போகட்டும் உனக்கு என்னோடு வாழப் பிரியம் இல்லைனா நான் வற்புறுத்த மாட்டேன் உன் வீட்டுக்குத் திரும்பிப் போகணும்னு விரும்பினால் இப்பவே கொண்டு அங்கே விட்டுடறேன்...''

மனோகரி திடுக்கிட்டுப் போனாள். 'வேண்டாம், அங்கே நான் போகமாட்டேன், அதைவிட ஒரு கிணற்றிலோ-குளத்திலோ விழுந்து...'' அவள் மறுபடியும் விம்மினாள்.

''என்னுடன் மனைவியாக வாழ்வது அவைகளைவிட பயங்கரமாகவா இருக்கிறது...'' வேதனையுடன் அவன் சிரித்தான்.

''இந்த மாதிரி ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது பற்றி அக்காவுக்குத் தெரிஞ்சா ரொம்ப மனக்கஷ்டப்படு வாங்க. என்னைப் பத்தியும் நீ கொஞ்சம் சிந்திக்கணும். பத்திரிக்கை உலகிலே எனக்கு ஓரளவு கௌரவம் இருக்கு. இந்த விஷயம் நாலுபேர் காதில் பட்டால் என் கதி-என் வருங்காலம்-எனக்கு ஏற்படப்போகும் அவமானம், இதெல்லாம் பத்தி நீ கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தாயா?'' சிறிது கோபத்துடன் கேட்டான்.

அவள் மௌனமாக இருந்தாள்.

''ஏன் உனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்க வில்லைனு காரணம் கேட்க நான் விரும்பலை. அந்த ஒரு அவமானம் எனக்குத் தேவையில்லை நான் ஒரு எழுத்தாளன். காரணத்தை பல தினுசாக ஊகிக்க முடியும். உன் வாயால் சொல்லக் கேட்டு வாழ்நாள் முழுவதும் என்னையே நான் சித்திரவதை செய்து கொள்ள விரும்பலை, உனக்குச் சரின்னு பட்டால் ஒரு யோசனை சொல்கிறேன்...'' என்றான்.



அவள் மறுபடியும் மவுனமாக இருந்தாள்.

''சேலத்தில் என் நண்பர் வீட்டில் உன்னைக்கொண்டு தங்கவிடுகிறேன். ஒரு வார கால கோயம்புத்தூர், ஊட்டி —இங்கெல்லாம் பத்திரிக்கை சம்பந்தமாக ஒரு சுற்றுப் பயணம் செய்துவிட்டு உன்னைத் திரும்ப வந்து அழைத்துக் கொள்கிறேன்.

''உன் பெரியப்பா வீட்டிற்கு நீ திரும்பிப் போகவேண்டும்னு நான் வற்புறுத்தலை. என் வீட்டில் அதாவது உன் வீட்டில் நீ தாராளமாக வசிக்கலாம் எனக்கு ஆக்ஷேபணை இல்லை. மனைவி என்ற நிலையில் எல்லா வசதிகளும் உனக்கு அங்கே கிடைக்கும். ஆனால் கணவன் என்கிற உரிமையுடன் உன்னிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டேன். நிச்சயம் - கவலைப்படாதே - எழுந்திரு, போகலாம்...'' படபடவென்று பேசிவிட்டு எழுந்திருந்தான்.

சிறிது நேரத்தில் சூரியன் மறைந்து இருள் பரவத் தொடங்கியது. பார்த்திபன், மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றான். குளுமையான காற்று வேகமாக ஜன்னல் வழியே புகுந்து அவன் முகத்தை சுகமாகத் தழுவியது-ஆனால் அவன் மனம் ''சுகம் எங்கே-இனி எனக்கு சுகம் எங்கே'' என்று புலம்பிக் கொண்டிருந்தது.

## 8

ஆறு மாத காலம் விரைந்தோடி மறைந்தது. போலியாகக் கணவன் மனைவி என்ற வாழ்க்கையிலே பார்த்திபன் அனுபவித்த வேதனைகள் கணக்கில் அடங்காதவை

ஒரே ஒரு வார்த்தை பெண்ணை நேரிலே அழைத்து உனக்கு என்னை பிடிக்கிறதா? என்று கேட்காமல் போனது எத்தனை மடத்தனம். கலா இறந்து சில ஆண்டுகள் வரை திருமணம் என்பதை நினைக்காது தன் பத்திரிக்கையை வளர்ப்பதில் மூழ்கிவிட்டிருந்தவனுக்கு ஏன் -இந்த மூட புத்தி. இப்படிப் பலபல எண்ணி அவன் குமுறிக் கொண்டி

ருந்தான். விபரீதமான தன் இல்வாழ்க்கையின் உண்மை
பிறர் கண்களில் பட்டுவிடாதபடி காப்பாற்றித் தன்
கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள அவன் பட்டபாடு
கொஞ்சமல்ல. திருமணம் அவனைப் பொருத்தவரை
பெரும் தண்டனையாக மாறிவிட்டிருந்தது.

ஊட்டியினின்று திரும்பியதும் அவன் அவசரமாகத்
தன் அச்சகத்திற்கு விரைந்து விட்டான். தன் வாழ்க்கை
யிலே ஏற்பட்டுவிட்டிருந்த அவமானத்தை-வேதனையை-
வேலைக்குள் புகுந்து மறந்துவிட முயற்சித்தான். அன்று
அவன் வெகுநேரம் சென்ற பின்னரே தயக்கத்துடன் வீட்
டிற்கு வந்திருந்தான். குளித்து முடித்த பின்னர் வழக்கம்
போல சாப்பிட மேஜையருகே உட்கார்ந்தான். தட்டிலே
உணவைப் பரிமாறிய கைகளில் சலசலத்த வளையல் ஓசை
அவனைத் திடுக்கிட்டு நிமிரச்செய்தது. மனோகரி அவ
னுக்கு உணவு பரிமாறிக்கொண்டு அருகே நின்றுகொண்டி
ருந்தாள். வியப்பை அடக்கிக்கொண்டு ''அக்கா'' என்று
உரத்த குரலில் சகோதரியைக் கூப்பிட்டான்.

முன்னறையில் புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்
டிருந்த காமாக்ஷி விரைந்து வந்தாள்.

''எங்கே உங்களைக் காணுமேன்னு பார்த்தேன் -நீங்க
பரிமாறி சாப்பிட்டு பழக்கமாகி விட்டதாலே...'' என்ன
பேசுவதென்று புரியாமல் இழுத்தான்.

காமாக்ஷி பக்கென்று சிரித்து விட்டாள்.

''இனிமேல்கூட நான் இதெல்லாம் செய்யணும்னு எதிர்
பார்க்கிறியா? கோவில் குளம்னு இனிமேல் நான் கிளம்பிட
தீர்மானிச்சிட்டேன். மனோகாரி கையில் எல்லாத்தையும்
காலையிலேயே ஒப்படைச்சுவிட்டேன் அவள் புத்திசாலி.
நல்லா கவனிச்சுக்குவா... இப்படி தினம் நேரம் கழிச்சு
வீட்டுக்கு வர பழக்கத்தை தொடர்ந்து வச்சுக்காதே...''
வேடிக்கையாகக் கூறிவிட்டு அப்பால் நகர்ந்துவிட்டாள்.

மறுபடி தலை நிமிர்ந்து மனைவியின் முகத்தைப்பார்க்
கக்கூட அவனுக்குச் சிறிது அச்சமாக இருந்தது.



''இன்னும் கொஞ்சம் சாம்பார்... பொரியல் கொஞ்
சம் போடு'' என்று எதுவும் கேட்கப் பிடிக்காதவனாக
அவன் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.
ஆனால் அவன் எதையும் கேட்கத் தேவையிருக்கவில்லை.
மனோகரியும் மௌனமாக அவனுக்குத் தேவையானவை
களைத் தெரிந்தவள்போல் பறிமாறிக் கொண்டிருந்தாள்.
வேலைக்குப் போய் வந்த பெண்—என்று அவன் கேள்விப்
பட்டிருந்தான். வீட்டையும் பொறுமையாகக் கவனிப்பாள்
போலிருக்கிறதே! அவள் வந்த முதல் நாளே அவளைப்
பற்றி அவனுக்கு பெருத்த வியப்பு.. அவனது ஆச்சர்யம்
தொடர்ந்து கொண்டுதான் போயிற்று

மனோகரி அந்த வீட்டிற்கு வந்த பின்னர்-வெளியில்
செல்லத்தேவையான ஆடைகளைத் தேடிக்கொண்டு அவன்
பீரோவை எரிச்சலுடன் ஆராயத் தேவை இருக்கவில்லை.
குளியலறையிலிருந்து அவன் வெளிப்படுமுன் உடுக்கவேண்
டிய உடைகளைத் தயாராக மேஜைமீது அவள் வைத்து
விட்டுப் போயிருப்பாள். வேலைக்குப் புறப்படுமுன் தன்னு
டைய பையைக்கொண்டு காரில் வை என்று தினசரிவேலை
யாளிடம் கத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை; அதைக்
கொண்டு காரில் வைக்கச் சொல்லிவிட்டு காப்பி பலகாரத்
துடன் அவன் வரவிற்காகச் சாப்பாட்டறையில் மனோகரி
காத்திருப்பாள். இரவு வேளையில் வெகுநேரம் அவன்
எழுதிக் கொண்டு உட்கார்ந்திருக்கையில் சப்தமிடாது
வந்து பால் டம்ப்ளரை மேஜைமீது வைத்துவிட்டுப்
போவாள். அவனது தேவைகள் எல்லாவற்றையும் கவனித்
துக்கொண்டு காமாக்ஷிக்கும்-உதவியபடி அவள் வீட்டிலே
மெல்ல வளைய வந்து கொண்டிருந்தாள். அவளது வாழ்க்
கையிலே நிழலாகிவிட்ட அவள் மட்டும் அவனை நேசிக்கத்
தெரிந்து கொண்டாள். எத்தனையோ முறை அவன்
அதைப்பற்றி எண்ணித் தவித்துப் போனான். உறக்கம்
வராது படுக்கையில் அமைதியின்றிப் புரண்டான்.

ஊட்டி பயணத்தின்போது வழியில் அவள் வாயால்
கேட்டுத் தெரிந்து கொண்டபோது ஏற்பட்ட மன

அயர்ச்சியில்-அதில் கொந்தளித்துப் போன அவனுக்கு ஆரம்பத்தில் அவள்மீது கட்டுக்கடங்காத கோபம் ஏற்ப டத்தான் செய்தது. ஒரு சின்ன பெண்- அவனது ஆண்மை யைக் குலைக்க இப்படியா சதி செய்து தொலைக்க வேண் டும்? பெரியப்பா தூக்கு போட்டுக் கொள்வார் என்ற பயத் தில்-அவனுக்கு மரண தண்டனை விதித்து விட்டாளே... என்ற ஆத்திரம்.

காரணமற்ற சிறு தவறுகளுக்கெல்லாம் அவன் எரிந்து விழுந்து கொண்டிருந்தான். நாளடைவில் அதிலும் அவ னுக்குப் பெரும் தோல்வி- அவனது பொறுமையற்ற வார்த்தைகளையும்-கோபத்தையும் அவள் மௌனமாக ஏற்றுக் கொண்டாள். எதிர்த்து ஒரு வார்த்தைகூட பேசவேயில்லை நாளடைவில் அவனது கோபம் தானே தணிந்து போனது.

இந்தத் திருமணத்தால் அவன் மட்டும் ஏமாற்றமடைய வில்லை அவளும் ஏமாந்தவளாகத்தான் வாழ்ந்து கொண் டிருந்தாள். உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த உணர்ச்சி களைக் காட்டிக் கொள்ளாது எத்தனை பொறுமையுடன் இந்த போலி வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண் டிருக்கிறாள் என்று எண்ணிய போது அவள்மீது அவ னுக்கு இன்னும் மரியாதை ஏற்பட்டுவிட்டிருந்தது.

தம்பிக்கு ஒரு பெண்ணைக் கட்டி வைத்ததுடன் கட மைகள் தீர்ந்துவிட்டன என்று நினைத்த காமாக்ஷியின் மனதில் சிறு உறுத்தல்-ஒரு சந்தேகம். சொந்த மகனைப் போல் அவள் தம்பியை எடுத்து வளர்த்தவள்; அவன் குணங்கள் முழுவதும் அவளுக்குத் தெரிந்தவை. வேடிக்கை யும் விளையாட்டுமாகப் பேசும் சுபாவம் கொண்டவன் பார்த்திபன். சகோதரி மனஸ்தாபப்பட்டுக் கொண்டு சிறிது முகத்தைச் சுளித்தால் கூட பார்க்கப் பொறுக்காத வன்-ஏதாவது கதைகள் சொல்லி அவளைச் சிரிக்கவைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்.

கலா உயிருடன் இருக்கையில் கலகலப்பாக விளங்கி யது அவர்கள் வீடு. இப்போது ஏன் திடீரென்று மாறிவிட்



டிருக்கிறான்! புது மருமகள் வீட்டில் வந்து குடித்தனம் செய்யும் களை, துளியளவும் ஏன் இருக்கவில்லை... ஆறு மாத காலமாகியும், ஒருநாள் கூட அவன் மனோகரியிடம் சிரித்துப் பேசியதை காமாக்ஷி கண்டதேயில்லை. காரணம் என்னவாக இருக்கும்? பலவும் எண்ணி அவள் தனக்குள்ளே வருந்தினாள். அவர்களது மண வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஏதோ ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்ற வரைக்கும் அவளுக்குச் சந்தேகம்

அன்று நேரே அவள் பார்த்தது சந்தேகத்தை வலுப் படுத்தியது. சிநேகிதி ஒருத்தி சொன்னதைக் கேட்ட பின் னர் அது உறுதியாகி விட்டது. தம்பிக்குத் திருமணம் ஆன பின்னர் காமாக்ஷி வீட்டின் மாடிப் பகுதிக்குப் போவதை நிறுத்திக் கொண்டிருந்தாள். அங்குதான் பார்த்திபனது படுக்கை அறையும் அவன் உட்கார்ந்து எழுதும் பெரிய ஹாலும் இருந்தன.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை அவள் சாமான் அறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள். ஊறுகாய் ஜாடியை வெய்யிலில் வைக்கவேண்டும்என்று தோன்றியது. அதைச் சுமந்துகொண்டு மெல்ல படியேறி மேலே வந்தாள் வழக்கத்தைவிட அன்று பார்த்திபன் வெகுநேரம் தூங்கு வான் என்பது அவள் அறிந்த விஷயம் எனவே சப்தமி டாது மெல்ல நடந்து வராந்தாவிற்கு வந்தவள் திடுக்கிட்டு நின்றுவிட்டாள். மாடியின் திறந்த பகுதியை ஒட்டியிருந்த வராந்தாவிலே விரிந்து கிடந்த படுக்கைமீது பார்த்திபன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். இரவு வெகுநேரம் கண் விழித்துக் கொண்டு அவன் அங்கே உட்கார்ந்து எழு திக் கொண்டிருந்ததின் அறிகுறியாகக் கட்டுகாகிதமும் பேனாவும்-தண்ணீர்ச் கூஜாவும் மேஜைமேல் இருந்தன.

சிறிது பொழுதில் கீழேயிறங்கி வந்த மனோகரியிடம் இதுபற்றி அவள் பேசாமலிருக்க முடியவில்லை

"அச்சகத்திலே ஏசி ரூம்லே உட்கார்ந்து தப்பிச்சு ஏற்கனவே முதுகிலே குளிர் பிடிச்சுக்கொண்டு வலியிலே கஷ்டப்பட்டான், ஊதக் காத்திலே விடிய விடிய வராந்தா

விலே உட்கார்ந்து எழுதிட்டு அப்படியே அங்கேயே தூங்கியிருக்கானே...நீ தடுத்திருக்கணும்...'' என்றாள் சிறிது கடுமையான குரலில்.

''அவர் யோசனையோடு எழுதிக் கொண்டிருக்கையிலே குறுக்கே பேச எனக்கு பயமா இருக்கு அக்கா...'' மெல்லிய குரலில் பதிலளித்துவிட்டு மனோகரி வேகமாக அப்பால் நகர்ந்துவிட்டாள். தினமும் அவன் வராந்தாவிலேதான் உறங்குகிறான் என்ற உண்மையைச் சொல்ல அவளுக்கு மிகவும் அச்சமாக இருந்தது.

இன்னொரு நாள். காமாக்ஷியைத் தேடிக் கொண்டு ஒரு சிநேகிதி வீட்டிற்கு வந்திருந்தாள்.

''நேத்து கச்சேரி பிரமாதம். நான்கூட சபாவில் உன் மருமகளைப் பார்த்தேன்...'' என்றாள்.

''தம்பிகூட வந்திருந்தானே.'' கேட்டு விட்டாள் காமாக்ஷி.

''மனோகரிதான் தனியா உட்கார்ந்திருந்தாள். கச்சேரி முடியும் சமயம் தம்பி வந்து அழைத்துக் கொண்டு போனதைப் பார்த்தேன்...'' விளக்கமாகச் சொன்னாள் அவள்.

பார்த்திபனுக்கு கர்நாடக சங்கீதத்திலே ஈடுபாடு
அதுவும் அன்று கச்சேரி செய்த பாடகர்மீது அபார மதிப்பு
—அவன் ஏன் கச்சேரிக்குப் போகவில்லை? அப்படியென்
றால் இதுவரை மனைவியுடன் நேரடியாக நடனம் கச்சேரி
இவைகளுக்குப் புறப்பட்டுப் போனதெல்லாம் அக்காவை
சந்தோஷப்படுத்த அவன் நடித்த நாடகமா? மனத்தில் ஏற்
பட்ட உறுத்தல் நாள் முழுவதும் வேதனை செய்து கொண்
டிருந்தது. தம்பியின் மணவாழ்க்கையில் ஏதோ ஒரு தவறு-
சொல்லிக் கொள்ள முடியாத பிசகு இருக்கிறது என்பதை
அவள் ஊகித்துக் கொண்டுவிட்டாள். அந்தத் தவறைத்
திருத்திக் கொண்டு அவர்களிருவரும் இணைந்து வாழ முடி
யாமல் ஒரு சமயம் அவள் முட்டுக்கட்டையாக இருக்கி
றாளோ? இதை இப்படியே போகவிடக்கூடாது. உடனடி
யாக நிவர்த்தி செய்தாக வேண்டும் என்று எண்ணி



ச்ஞ்சலப்பட்ட அவளுக்குப் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

வெகு நாட்களாக அவளுக்கு க்ஷேத்திராடனம் செய்ய வேண்டுமென்ற ஆசை. தங்களுக்குள்ள மனவேற்றுமையைத் தாங்களே கலந்து பேசி முடிவெடுக்க இருவரையும் தனியே விட்டுவிட்டு அவள் க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்டால் என்ன? இந்த எண்ணம் ஏற்பட்டவுடனேயே அவள் தாமதிக்கவில்லை.

தென் நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க வாடகைக் கார் ஒன்றில் கிளம்பிய சிநேகிதிகளின் கோஷ்டியில் அவளும் சேர்ந்து கொண்டு புறப்பட்டு விட்டாள.

சகோதரியை வழி அனுப்பிவிட்டு அச்சகத்து வேலையைக் கவனித்த பின்னர் அவன் வீட்டிற்குத் திரும்பினான்.

மாலையிலே ஆரம்பித்த தலைவலி வீட்டிற்குள் வந்ததும் தாங்க முடியாது போகவே அவன் தள்ளாடிக்கொண்டு முன்னறையிலே உட்கார்ந்து விட்டான்

சிவந்துபோன அவன் கண்களையும் முகத்தையும் பார்த்த மனோகரி பயந்து விட்டாள். அவளையுமறியாது பரபரப்பாக நெருங்கி, ''உங்களுக்கு உடம்புக்கு என்ன?'' என்று கேட்டுவிட்டு நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

நெருப்பாகக் காய்ச்சல் கையைச் சுட்டது. அவள் நடுங்கிப்போனாள்.

கைத் தாங்கலுடன் அவனை அழைத்துச் சென்று படுக்கையறையில் கட்டிலின்மீது படுக்க வைத்தாள். டாக்டருக்குப் போன் செய்தாள். இரவு முழுவதும் அருகிலிருந்து வேளைக்கு மருந்து கொடுத்து ஆதரவுடன் கவனித்துக் கொண்டாள்.

மனைவியின் அன்பான பணிவிடையில் ஏற்பட்ட ஒரு நெருக்கத்திலே-உறவிலே ஒரு வார காலம் ஓடிச் சென்று விட்டது. காய்ச்சல் மறைந்து பூரணகுணமடைந்துவிட்ட போதிலும் உடல் சோர்வுடன் அன்று காலை அவன் படுக்கைமீது சாய்ந்து கொண்டிருந்தான். லேசாக மல்லிகை

மலரின் மணம் உள்ளே வீசியதும் திரும்பிப் பார்த்தான். ஸ்நானம் செய்து காய வைத்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டிருந்தாள் மனோகரி. சுற்றிலும் மலர்ந்துவிட்ட மல்லிகைச்சரம்-நெற்றியிலே பளிச்சிட்ட குங்குமப் பொட்டு-இடையிலே உடலைத் தழுவிய நூல் சேலை. அவனது கற்பனைக் கதாநாயகி கோலத்தில் மனோகரி அவன் அருகே வந்து நின்றாள் என்னென்னவோ இன்ப மான எண்ணங்கள்-நினைவுகள் பொங்கிக்கொண்டு அவன் உள்ளத்திலே எழுந்தன.

'இந்தச் சில மாதங்களில் அவள் மனம் மாறுபட்டிருக்கிறாள் இல்லாவிட்டால் இத்தனைப் பணிவும்-நெருக்கமுமாக அவள் பழகுவாளா?...' எண்ணி மகிழ்ச்சியில் திளைத்துப் போனான் அவன்.

''அக்கா சிதம்பரத்திலிருந்து விபூதி பிரசாதம் அனுப்பியிருக்கிறாங்க.'' காகிதப் பொட்டலத்தைப் பிரித்து திருநீற்றை விரலால் தொட்டு அவன் நெற்றியில் வைத்தாள்.

'மனோ!'' கனிவாக அவன் அழைத்தான். அவள் நின்றாள்.

''ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். உண்மையைச் சொல்வியா?'' அவள் மிரட்சியுடன் பார்த்தாள்.

''இத்தனை பரிவுடன் என்னைக் கவனிச்சிக் கொண்டாயே? அதனுடைய அர்த்தம்...'' கேட்டு முடிப்பதற்குள் அவன் இதயம் படபடத்தது.

நெஞ்சை அடைத்த வார்த்தைகளை அவள் விழுங்கிக் கொண்டாள. ''சிறு வயசிலேயே எனக்கு நர்ஸ் பயிற்சிக்குப் படிக்க வேணும்னு ரொம்ப ஆசை. அதுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. நோயாக இருப்பவர்களுக்குப் பணிவிடை செய்யறதுன்னா எனக்குப் பிடிச்ச விஷயம். மேலும் இந்த வீட்டுல தங்கவும்-சுகமாகச் சாப்பிட்டு வாழவும் எனக்கு நீங்க அனுமதி கொடுத்திருந்தீங்க-என்னால் நினைச்சுப் பார்க்க முடியாத எல்லா வசதிகளும் எனக்கு இங்கே கொடுத்திருக்கிறீங்க. அதுக்கெல்லாம் திருப்பி நான் ஏதாவது செய்ய வேண்டாமா...'' துக்கத்திலே அவள் வார்த்தைகள் தடைப்பட்டன.



''இந்த ஒரு காரணந்தானா? அப்படின்னா உன் மனசு அதே பழைய நிலையில் தான் இருக்கா...?'' தயக்கமாக அவன் கேட்டான்.

புடவைத் தலைப்பை கையில் முறுக்கிக் கொண்டு தரையைப் பார்த்தபடி அவள் பதில் சொன்னாள்.

''எத்தனையோ முயற்சிக்கிறேன்—இரவு பகலா ரொம்ப சிந்திக்கிறேன். என்னையே கேள்விகள் கேட்டு வதைக்கிறேன். எனக்கு மனசிலே அமைதியே இல்லை.

''உங்க அன்புக்கும்— உங்க கருணைக்கும் உங்க பரிவுக்கும் நான் தகுதியுடையவளான்னு நினைச்சுப் பார்க்கும்போது என் மனசு படர வேதனையை வார்த்தையால் எனக்கு சொல்ல முடியலை. இதுக்கெல்லாம் ஒரு காரணம் இருக்கிறதினால்தான், நான் என் வாழ்க்கையை நாசமாக்கிட்டு உங்க வாழ்க்கையையும் பாழடிச்சுக் கொண்டு இருக்கேன்...'' பேசமுடியாத அவள் திணறினாள் துக்கத்துடன் கண்களில் பொங்கிய கண்ணீர் அவள் பார்வையை மறைத்தது.

நெருப்பை யாரோ வாரித் தலைமீது கொட்டி விட்டது போன்ற துன்ப உணர்வில் துடித்துப் போன பார்த்திபன் இரு கைகளாலும் காதைப் பொத்திக் கொண்டுவிட்டான்.

''வேண்டாம் மனோ! வேண்டவே வேண்டாம். காரணத்தைக் கேட்க நான் விரும்பலை. இனி இந்த மாதிரி கேள்வியைக் கூட உன்கிட்ட நான் கேட்கவே மாட்டேன்—ப்ளீஸ், அழாதே மனோ...உன் கண்ணீர் என்னைச் சித்திரவதை பண்ணுகிறது'' வேதனையுடன் படுக்கைமீது சுருண்டு கொண்டுவிட்டான்.

## 9

பார்த்திபன் குளித்துவிட்டு அறையினின்று வெளி வந்தான். பூத்துவாலையால் முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த

நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டே ஏதோ கவனமாக நின்றான். மாடியிலிருந்த அந்தப் பெரிய ஹாலிலிருந்து வீணையின் நாதம் ஒலித்தது. மனோகரி முதன் முதலாக அங்கே வீணையை வாசித்துக் கொண்டிருந்தாள்.

'நல்லதோர் வீணை செய்து நலம்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?'...அவனுக்குப் பிடித்தமான அமரகவி பாரதியின் கவிதையில் சில அடிகளை அவள் இசைத்துக் கொண்டிருந்தாள் மிகவும் பொருத்தமான கவிதை' அந்த அழகான வீணையை நல்லசிவத்தின் வீட்டில் புழுதி பட ஒரு மூலையில் அல்லவா கிடத்தியிருந்தார்கள்?-எண்ணி தனக்குள் மெல்ல அவன் சிரித்துக் கொண்டான். சப்த மிடாது நடந்து ஹாலுக்குள் வந்து நின்றான். தலையைக் குனிந்தபடி வாசிப்பிலே ஒன்றியிருந்தாள் மனோகரி. பின் னர் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். சட்டென்று நிறுத்தி விட் டாள்.

''வாசி மனோ! ஏன் நிறுத்திவிட்டே?'' கேட்டான் அவன்

''வீணையைக் கவனிக்காம போட்டு வச்சதிலே சுருதி கலைஞ்சு கிடக்கு-மறுபடி மேளம் கட்டினாத்தான் சரியா கும்.'' அவள் கனிவோடு சொன்னாள்.

''அதுக்கென்ன உடனடியாகச் செய்து தர ஏற்பாடு பண்ணுகிறேன்'' என்றான் உற்சாகமாக.

அவனை நிமிர்ந்து பார்த்து லேசாக அவள் புன்னகைத் தாள். சோகம் படிந்த அந்த முகத்திலே மாரிக் காலத்து பிறைச்சந்திரனைப் போல் அபூர்வமாகத் தோன்றி மறைந்த மெல்லிய சிரிப்பு அவன் மனத்தை மகிழ்ச்சிக் கட லில் ஆழ்த்தியது.

எத்தனையோ முயற்சித்தும் அவனையுமறியாது அந்த பெண்மீது அவனுக்கு ஏன் இந்தப் பரிவு?

அவள் கேட்டதையெல்லாம் செய்து கொடுத்து அவளைப் பல வழியிலும் திருப்திபடுத்த முயன்றான் அவன். ஏன்? ஏன்?



மேளங்கட்டி வீணையின் சுருதியை ஒழுங்கு செய்து விட முடியும் கலைந்து போன என் வாழ்க்கையின் சுரு தியை-அலங்கோலமாகி அபஸ்வரம் தட்டிப்போன என் உணர்வுகளை என்ன செய்ய முடியும்? கேட்காமல் கேட் டன அவளது கண்கள். வேதனை அவன் நெஞ்சை இறுக்கி யது.

அங்கேயே நின்று கொண்டிருக்கப் பிடிக்காது அவன் விரைவாக உடை அணிந்துகொண்டு வெளியே கிளம்பி விட்டான்.

மனோகரியின் சொத்தான அந்த வீணை அத்தனை காலமாக நல்லசிவத்தின் வீட்டில்தான் இருந்தது. நாகமணி கொள்ளவும் மனமின்றி கொடுக்கவும் விருப்பமின்றி அதை தன்னிடமே வைத்துக் கொண்டிருந்தாள். வீணை ஒன்று மட்டுமல்ல. பார்த்திபன்வரதக்ஷிணை-சீர் என்று எதுவுமே எதிர்பார்க்கவில்லை என்று தெரிந்ததும் அவளுக்கு அதிக மானதொரு துணிச்சல். மனோகரிக்குச் சேரவேண்டிய அவளது தாயின் பாத்திரங்கள் சங்கீதப் புத்தகங்கள்-புடவை இன்னும் மற்ற பொருள்கள் எல்லாவற்றையும் தன்னுடன் நிறுத்திக் கொண்டு விட்டிருந்தாள். அவள் தந்தை விட்டுப் போயிருந்த பணத்தில் மீதியிருந்ததையும் கொடுக்க மனமிருக்கவில்லை. பார்த்திபனும் காமாக்ஷியும் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதை ஒரு பெரும் பொருட்டாகப் பாராட்டவுமில்லை. அவர்களுக்கு வேண் டியது மனோகரி என்ற வரைக்கும் அவர்கள் திருப்தியுடன் வாளா இருந்துவிட்டனர்.

திருமணத்திற்குப் பின்னர் ஒருமுறை நல்லசிவம் தமது குடும்பத்துடன் அவர்களைப் பார்த்துவிட்டுப் போக அங்கே வந்திருந்தார். அதற்குப் பின்னர் அவரும் வரவில்லை. பார்த்திபனும் அவர்களுடன் நெருங்கி உறவாடமுயற்சிக்க வில்லை. பண்டிகைகளுக்கு அழைப்பு அவர்களிடமிருந்து வந்தபோதெல்லாம் அச்சகத்தில் அதிக வேலை-வர இயல வில்லை என்று மறுத்து ஒதுக்கிவிட்டிருந்தான். வற்புறுத் திப் பெண்ணைக் கட்டிக் கொடுத்து அவனது வாழ்க்கையை

பாழடித்து விட்ட மனிதர் என்ற வரைக்கு நல்ல சிவத்தின் மீது அவனுக்கு மனக்கசப்பு நாகமணிமீது தாங்க முடியாத வெறுப்பு. அதற்குக் காரணம் இருந்தது.

ஒரு நாள் சாப்பிடும் போது அவன் எதேச்சையாகக் கவனித்து விட்டான். கலகலவென்று சப்தித்த வளைகள் நழுவி-முன்னங்கையில் விழுந்தபோது அவன் பார்த்து விட்டான். மனோகரியின் வலது முன்னங்கையின் உட்புறத்தில் பட்டையானதொரு காயவடு. தந்தத்திலே கடைந்தெடுத்தது போன்று உருண்ட அழகான கரத்தில் அப்படி ஒரு அலங்கோலம்!

"இந்தக் காயம் எப்போ ஏற்பட்டது?'' பதைத்துப் போய் விட்டான் அவன்.

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு ஒருகணம் வாளா இருந்தாள் அவள்-ஏனோ அவளுக்குச் சட்டென்று துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டுவிட்டது.

''சில வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்ட காயத்தின் வடு. நினைச்சாலும் இப்ப ஏற்பட்டது போல் மனசு பச்சை ரணமா வலிக்குது. அப்போ நான் பி.யூ.ஸி.யில் படிச்சுக் கொண்டிருந்தேன். ஒழிஞ்ச நேரத்திலே பெரியம்மாவுக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்வதுண்டு அன்னிக்குப் பல சரக்குக் கடையிலிருந்து ஆள் சாமான்களைக் கொண்டு வந்து வைத்தார். அவர் கொண்டு வந்த டின்னிலிருந்த எண்ணையை ஜாடியில் ஊத்தி எடுத்துக் கொண்டு உள்ளே வந்தேன். காலடியில் என்னவோ வழுவழுப்பா பட்டது. அவ்வளவுதான் ஜாடியைப் போட்டுகிட்டு விழுந்துட்டேன், ஐந்துகிலோ எண்ணை தரையைமொழிக்கிட்டு ஓடிச்சு. தோசை சுட்டுக் கொண்டிருந்த பெரியம்மாவுக்குக் கோபம் தாங்கமுடியலை. அப்படியே...'' சொல்ல முடியாது வேதனையுடன் அவள் நிறுத்தினாள்.

''எண்ணை வீணாகி விட்டதென்ற ஆத்திரத்தில் தோசைக் கரண்டியால் கைமேலே சூடு போட்டு விட்டாங்களா?''



திகைப்புடன் கேட்டான்

''ஆமாம்'' என்று தலையை அசைத்த மனோகரிமேலே பேச முடியாது தடுமாறினாள். கண்கள் கலங்கின. கட்டுக் கொள்ளாத கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான் அவன். பெரியப்பாவின் வீட்டைவிட பாழுங் கிணற்றை அவள் நாடியதின் ரகசியம் அவனுக்குஇப்போது நன்றாகவே புரிந்துவிட்டது.

தாயும் தந்தையுமில்லாத அனாதை என்ற துணிவில் நாகமணி அரக்கியாக மாறி எத்தனைக் கொடுமைகள் செய்துவிட்டிருக்கிறாள்? சே! அவளும் ஒரு பெண்ணா!... விவரிக்க முடியாத வெறுப்பில் அவர்கள் இருந்த வீட்டின் எல்லையைக் கூட அவன் பார்க்க விரும்பவில்லை சங்கதியைத் தம்பி வழியே கேள்விப்பட்ட காமாக்ஷியம்மாளும் அதிர்ந்து போய்விட்டாள். சம்பந்திகளுடன் அதிகத் தொடர்பு வைத்துக் கொள்ள அவளும் விரும்பாது விலகியே இருந்து கொண்டாள்.

பிறந்த வீட்டில் அன்பு என்பதையே காணாது வளர்ந்தவள். தன் வீட்டிலும் அமைதியின்றி தவிக்கிறாளே என்று பார்த்திபனுக்கு மனைவி மீது மிக்க இரக்கம். என்ன செய்தால் அவளுக்கு அமைதி ஏற்படும் என்ற தவிப்பு அவனுக்கு! அதனால் அவன் தன் மனக்கசப்பைப் பாராட்டாமல் நல்லசிவத்திற்கு-ஆபீஸிற்கே போன் செய்தான்.

''மாப்பிள்ளை ரொம்ப பிசியோ...மனோகூட பிறந்த வீட்டை மறந்துட்டதே...ஹி...ஹி...'' நல்லசிவம் மறுபக்கத்தில் சிரித்தார். அவனுக்கு எரிச்சல்.

''மனோகரியின் வீணை அங்கேயே உங்க வீட்டில் தங்கியிருக்கு. அதை அனுப்பி வைக்க முடியுமோ?'' கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான்.

''அனுப்பிடுவேன். எனக்குக் கார் வசதி ஏதும் கிடையாது. அதனால்...'' இழுத்தார் அவர்.

''கவலைப்படாதீங்க. நான் வந்து எடுத்துப்போகிறேன் உங்க மனைவிகிட்ட சொல்லி வையுங்கோ-அது

போதும்.'' உத்திரவிட்டான். தொடர்ந்து பேச விருப்ப மின்றிக் கீழே போனை வைத்து விட்டான்.

அடுத்த நாள். வேலை முடிந்ததும் நேரே அச்சகத்தி னின்று வண்டியை நல்லசிவத்தின் வீட்டிற்கு ஓட்டினான். மருமகனைக் கண்டதும் நாகமணிக்குக் கொஞ்சம் வியப்பு விஷயத்தைத் தெரிந்து கொண்டதும் அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ஏதேது மனோகரி வரவர கெட் டிக்காரியாகிக் கொண்டு வருகிறாளே; இப்போ வீணையை எடுத்து வரும்படிக் கணவனை ஏவி விட்டிருக்கிறாள். பிறகு பாத்திரங்கள் பண்டங்களை எடுத்துவர ஏவலாம். அதற்கும் பின்-அப்பா விட்டுப் போன மிச்சப் பணத்தை வசூலிக்க விரும்பினால்...இதை இப்படியே விடக்கூடாது-ஆரம்பத்திலேயே முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும்-என்று தனக்குள் கோபத்துடன் கருவிக் கொண்டாள். மேல் எழுந்த உபசாரமாக அவனை முன்னறையில் அமரச் செய்தாள். மெல்ல விஷயத்தை ஆரம்பித்தாள்.

''வீணையை மனோகரியின் அம்மா உபயோகித்துக் கொண்டிருந்தது உண்மை.ஆனால் சுமதிக்குத் தனக்குன்னு அதை வாங்கி வைத்துக் கொள்ள வசதி இருக்கவில்லை. இவர்தான் ஆயிரம் ரூபாய் போட்டு வாங்கினார்.அதனால் தான் வீணையை நாங்க எங்ககிட்டேயே வச்சுக் கொண் டோம். என் பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஒண்ணு இருந்தது; அதனாலே இதை வித்துவிட முடிவு செய்தோம். பாதி விலை கிடைச்சா போதும் தள்ளி விடலாம்னு இவர் சொல்லிக்கிட்டிருக்கிறார்...?''

அத்தனையும், பச்சைப் பொய் என்பதை பார்த்திபன் உணர்ந்து கொண்டான். பதில் பேசாது எழுந்து வெளியே சென்று காரின் டிக்கியைத் திறந்து தனது ஃப்ரீப்கேசை எடுத்தான். செக் புத்தகத்தை எடுத்து ஐநூறு ரூபாயிற்கு ஒரு ஏட்டை எழுதி கையெழுத்திட்டு கிழித்து எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

''மத்தவங்க கிட்ட விக்கிறதுக்குப் பதில் எங்ககிட் டேயே அதை விக்கலாமில்லையா...? நீங்க கேட்ட



தொகைக்கு ஒரு செக் இந்தாங்கோ. இப்போ வீணையை நான் எடுத்துப் போகலாமா?'' மேஜை மீது அதை வைத் தான்

''இங்கே இருக்கு. நீங்களே எடுத்துக்கலாமே.'' அவள் காட்டிய மூலையைக் கவனித்தான்.

அந்த நல்ல வீணையை நாகமணி நலங்கெடப் புழுதி யடைய ஒரு மூலையில் சாத்தி வைந்திருந்தாள்-ரஸனை இல்லாதவள்

சில தினங்களுக்குப் பின்னர் ஒருநாள் காலை-அச்சகத் திற்கு அவசரமாகப் புறப்பட்டுப் போன பார்த்திபன்-சிறிது பொழுதில் திரும்பிவிட்டிருந்தான்.

வாயிற்கதவைத் திறந்து விட்டு வியப்போடு பார்த்தாள் மனோகரி. சில நாட்களுக்கு முன்னர் மேளங்கட்ட அவன் எடுத்துச் சென்ற வீணையை வேலையாள் காரிலிருந்து எடுத்து வருவதைக் கவனித்தாள்.

''இதற்கு அவசரமா? நீங்க சாயங்காலம் திரும்பி வரும் போது எடுத்து வந்திருக்கலாமே...'' கேட்ட வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தாள். முன்னறையில் கம்பள விரிப்பின் மீது வீணையை வைத்துவிட்டு ஆள் அப்பால் போய்விட்டான்.

''அவசரமாக இருந்ததினால்தான் எடுத்து வந்தேன். ஆபீஸிற்குப் போனதும்தான் நினைப்புக்கு வந்தது இன் னிக்கு உன்னுடைய பிறந்தநாள் ஆச்சே. நீ வாசிக்க விரும் பலாம் இல்லையா?...'' கேட்டுவிட்டுப் புன்னகையுடன் சோபா ஒன்றில் சாய்ந்துகொண்டான்.

மனோகரி பரபரப்பாக உள்ளே சென்று கொஞ்சம் சூடாக காப்பியைத் தயாரித்து டம்ளரில் நிறைத்து எடுத் துக் கொண்டு வந்தாள். அவன் அருகிலிருந்த முக்காலி மீது அதை வைத்து விட்டு கம்பள விரிப்பின் மேல் அமர்ந்து கொண்டாள் ஆசையுடன் வீணையைத் தழுவி எடுத்து மடி மீது வைத்துக் கொண்டாள்.

''ஆமாம்! இன்னிக்கு என் பிறந்த நாள்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?'' வியப்புடன் கேட்டாள்.

''திருமணத்துக்கு முன் உன் பெரியப்பா உன் ஜாதகத்தை பொருத்தம் பார்க்கச் சொல்லி என் அக்காகிட்ட கொடுத்தார். அக்கா அதை என்கிட்ட கொடுத்தாங்க. அதைப் பாாத்து உன் பிறந்த தேதியைத் தெரிஞ்சு கொண்டேன்.''

''அக்கா பொருத்தம் பார்த்தாங்களா?'' மனோகரியின் கேள்வி அவனைச் சற்று திகைக்க வைத்தது.

''அக்காவுக்கு என்னவோ இதில் ரொம்ப நம்பிக்கை. பொருத்தம் பார்த்தாங்க. ஜாதகங்கள் பொருந்தியிருப்பதாக ஜோசியர் சொன்னாராம்.''

'ஜாதகங்கள் பொருந்திதான் இருந்தன; நம் மனசில்தான் பொருத்தமில்லாமல் போயிடுத்து...' அவன் சொல்லாமல் விட்டதை அவள் புரிந்து கொண்டாள். குற்ற உணர்வில் கன்னங்கள் சிவக்க-நெஞ்சு பதற கம்பள விரிப்பை உற்றுப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். பின்னர் மனக்குழப்பத்தைச் சமாளிக்க சுருதி கூட்டி வீணையை வாசிக்கத் தொடங்கினாள்.

ஏன் அந்தப் பாட்டை வாசிக்க முற்பட்டாள்-அவளுக்கே தெரியாது உணர்ச்சிவசப்படும் போதெல்லாம் அந்தப் பாட்டை வாசிக்க அவள் விரும்புவது வழக்கம்.

''துன்பம் நேர்கையில் யாழெடுத்து-நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?''

மனோகரிக்கு உண்மையில் அபாரமானதொரு திறமை இருந்தது. அவளது விரல்கள் மீட்டிய வீணையில் அவனது உணர்வுகளுடன் கலந்து உயிருடன் ஒட்டிக்கொண்டுவிட்டது போன்றதொரு பிரமிப்பு-மெய்மறந்து பார்த்திபன் உட்கார்ந்துவிட்டான்.

''தாங்க்யூ! இப்போ வீணை சுருதி சுத்தமா இருக்கு... காப்பி ஆறிப்போயிடும். எடுத்துச் சாப்பிடுங்கோ...'' உபசரித்தாள்.

''நீ இப்ப வாசிச்சது எனக்கு ரொம்ப பிடிச்ச பாட்டு. உனக்கும் அது ரொம்பப் பிடிச்சிருக்குப் பார்த்தியா?''



வேடிக்கையாக அவன் கேட்டுக்கொண்டு எழுந்தான். காப்பியைப் பருகிக்கொண்டே அவளை ஊடுருவிப் பார்த்தபடி நின்றான்

பதிலளிக்கத் தெரியாது-குழப்பத்துடன் தன் கை விரல்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

மெல்ல அருகில் வந்நான் பார்த்திபன். லேசாக சிவந்த கன்னங்களுடன்-ஒளி பொங்கிய கண்களுமாக அவள் மிகவும் அழகாகத் தென்பட்டாள்.

இந்தப் பெண் மட்டும் மிகச் சிறிதளவாவது அவனைப் புரிந்துகொள்ள முயற்சித்து வெற்றி பெற்றால்-மலர் போன்ற அவளது உள்ளத்தை-அதன் உணர்வுகளை மென்மையாக மதிக்கத் தெரிந்தவன், வெளி உலகத்தின் சூறாவளியினின்று அவளுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்கத் தவியாகத் தவிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு விட்டால் அவர்கள் இருவரது வாழ்க்கையிலும் எத்தனைப் பெரிய அமைதி ஏற்படும்...

சிந்தனையினின்று விழிப்புற்றான் அவன். டம்ப்ளரை அருகிருந்த மேஜைமீது வைத்துவிட்டு—''ஹாப்பி ரிடன்ஸ் டு யூ!...'' சிரித்தபடி ஆசீர்வதித்தான் பின்னர் தன் சட்டைப் பையிலிருந்து, மணி பர்சை எடுத்துத் திறந்து சில ரூபாய் நோட்டுகளை உருவி எடுத்தான்.

''அக்கா இருந்தாக்கா. உன்னை அழைச்சிட்டுப்போய் உனக்குப் பிடிச்ச சேலை ஒண்ணு பிறந்தநாள் பரிசாக எடுத்துக் கொடுப்பாங்க. அவர்களுக்குப் பதிலா நான் உன்னோடுகூட கடைக்கு வர முடியலை. அச்சகத்திலே வேலை தலைக்குமேலே கிடக்கு. காரை அனுப்பி வைக்கிறேன் நீயே கடைக்குப்போய் உனக்குப் பிடிச்சதா அழகானதொரு புடவை வாங்கிக்கோ. அது உனக்கு நானும் அக்காவும் கொடுக்கிற பிறந்தநாள் பரிசு'' அவளது உள்ளங்கையில் நோட்டுக்களை வைத்து அழுத்தினான்.

''தாங்க்யூ!'' என்றாள் நன்றிப் பெருக்குடன்.

''அத்தோட இன்னொரு விஷயம். அக்காகூட இப்போ வீட்டில் கிடையாது. அதனால் இனி கைதிபோல

நீ வீட்டோட அடைஞ்சு கிடக்க வேண்டாம். எங்கேயாவது கோவில் கடை, இதுகளுக்குப் போக விருப்பமிருந்தா போன் பண்ணு. அப்பப்போ கார் அனுப்பி வைக்கிறேன். சிநேகிதிகளைப் போய்ப் பார்க்க ஆசைப்பட்டாலும் தடை சொல்ல மாட்டேன். ஏதாவது வாங்கப் பிரியமிருந்தாலும் கூச்சப்படாமல் சொல்; தேவையான பணத்தைக் கேட்டு வாங்கிக் கொள்ள உனக்கு உரிமை உண்டு. ஞாபகப்படுத்துகிறேன்...'' என்று கூறிவிட்டு விரைந்தான்.

கணவன் அன்று வழங்கிய அந்த சுதந்தரத்தை மனோகரி அனுபவிக்கத் தொடங்கினாள். ஆனாலும் ஏனோ அவள் உள்ளத்திலே எழுந்த இன்பக் கனவுகள் சிதைந்து போய்விட்டதில் ஏற்பட்ட ஏமாற்றத்தில் சிதறிவிட்ட உணர்வுகளை ஒன்று கூட்டி ஒழுங்கு செய்து இவள் வாழத் தெரியாது தவித்துக் கொண்டிருந்தாள்.

அன்று காலை அவள் வெளியே கிளம்பியிருந்தாள். அங்கங்கே தேவையான சாமான்களை வாங்கி முடித்துக் கொண்டுவிட்டு முடிவாகப் புத்தகக் கடையொன்றில் புகுந்தாள். வரிசையாக வைக்கப்பட்டிருந்த கதைப் புத்தகங்களைக் கவனமாகப் பார்த்துக்கொண்டு நின்றவள் எதிர் பக்கம் புத்தக அடுக்குகளின் இடைவரிசையில் தெரிந்த அந்த முகத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

நீர்வீழ்ச்சி வேகத்தில் நினைவுகள் வந்து மோத உள்ளமும் உடலும் நடுங்க—நெஞ்சு படபடக்க பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள், 'மனோ! வாட் எ ப்ளசண்ட் சர்ப்ரைஸ்-'' பேசிக்கொண்டே எதிரே வந்து நின்றான் அரவிந்த்குமார். முன்னைவிட அவன் இளைத்து பாதியாகி விட்டிருந்தான். பல நாட்களாகக் கவனிக்கப்படாத தாடியும் மீசையும் மண்டிவிட்ட முகம். பஞ்சத்தில் அடிபட்டு விட்டவன் போன்ற தோற்றம்.

''நீ ரொம்ப மாறிவிட்டிருக்கிறாய் மனோ. உன்னைப் பார்த்து ஒரு யுகமாகிவிட்டது போலிருக்கு, இப்போ நான் என் மாமாவிடம் வேலை செய்யவில்லை. வேறு இடத்தில் வேலை செய்கிறேன்.''



மனோர்கரி குற்ற உணர்வுடன் தன்னைச் சுற்றிலும் கவனித்தாள்.

''நீங்களும் ரொம்ப மாறிட்டிருக்கிங்க'' என்றாள். அதற்குமேல் என்ன பேசுவது என்ற குழப்பம். நான் வாங்க வந்த புத்தகம் கிடைக்கலை. எனக்கு நேரமாச்சு, அதனாலே மன்னிச்சுக்கோங்க...' என்று கூறிவிட்டு அவள் விரைவாகக் கடையைவிட்டு வெளியே வந்தாள்.

''மனோ!...ப்ளீஸ் ஒரு நிமிஷம்...'' என்று சொல்லிக் கொண்டு அரவிந்த்குமார் வேகமாக அவளைத் தொடர்ந்து வெளிவந்தான்.

அவள் தயங்கிக்கொண்டு நின்றாள்.

''மனோ! நான் எத்தனைப் பெரிய பிசகை செய்துவிட்டேன்னு என்னையே நொந்து கொள்கிறேன். அன்னிக்கு எனக்குத் துணிவில்லாததால் உன்னை இழந்துவிட்டேன். அத்தோட என் அமைதியையும் பலிகொடுத்துவிட்டேன். அயாம் வெர்ரி அன்ஹாப்பி மான். உண்மையைச் சொல் மனோ...ஆர் யூ ஹாப்பி...இந்த மணவாழ்க்கையில் உனக்கு நிறைவு இருக்கா...''

''மன்னிக்கவும், எனக்கு நேரமில்லை...நான் போகணும்...''

தடுமாறிய மனோகரி...அவனைத் திரும்பிப் பார்க்காது வேகமாக நடந்தாள். காரில் ஏறி உட்கார்ந்த அவள் கட்டுப் படுத்த இயலாது அழுதாள்.

## 10

அன்று காலை. அச்சகத்திற்குக் கிளம்பத் தயாராகி விட்டிருந்தான் பார்த்திபன். கணவனுக்கு காப்பிப் பலகாரம் கொடுத்து உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தாள் மனோகரி. முன்னறை டெலிபோன் அலறியது. வேகமாகச் சென்று ரிஸீவரைக் கையில் எடுத்தாள். மறுபக்கத்தில் அரவிந்தகுமாரின் குரல். அவள் நடுநடுங்கிப் போனாள்.

"மனோ! உன்னை நான் இன்று காலை பத்து மணிக்கு அந்த ஷாப்பிங் சென்டர் புத்தகக்கடை வாசலில் பார்த்தாக வேண்டும். முக்கியம் நீ கட்டாயம் வரவேண்டும். மறுக்கக் கூடாது-'' வற்புறுத்தலாகக் குழைவாக அவன் கேட்டுக் கொண்டான்.

"முடியாது, எனக்கு வேலைகள் ரொம்ப இருக்கு...'' அவள் குரல் பயத்தில் உடைந்தது; டெலிபோனை பிடித்திருந்த கரம் நடுங்கியது

''கட்டாயம் சந்திக்க வேண்டும். உன்னால் இங்கு வர முடியாட்டா நான் உன் வீட்டுக்கு வரலாமா?...''

''நான் வீட்டில் இருக்கமாட்டேன் அதனால்...''

அவள் முடிக்கவில்லை. அவசரமாக காப்பியைப் பருகிவிட்டு பார்த்திபன் எழுந்து வாஷ் பேசினில் கையைக் கழுவும் சப்தம் கேட்டது.

''உன் கணவர் அருகில் நிற்கிறாரா? சரியாகப் பேச மாட்டேங்கிறேயே...எப்படியாவது முயற்சி செய்து நீ என்னை இன்னிக்கு சந்திக்கணும்...தாங்யூ'' போனை அவன் வைத்துவிட்டான்.

மனோகரி கலவரத்துடன் ரிஸீவரைக் கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் இதயம் பயத்தில் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. அருகில் இருமல் சப்தம் கேட்டதும் விழிப்புற்று போனைக் கீழே வைத்தாள்.

''யார்? உன் சிநேகிதியா? தன் வீட்டுக்கு வரச்சொல்லி நிர்ப்பந்தம் பண்ணுகிறாளா?'' சிரித்துக்கொண்டே கேட்டபடி பார்த்திபன் அருகில் வந்தான். குற்ற உணர்வு நெஞ்சை அமுக்க மனோகரிக்கு மூச்சே நின்றுவிடும் போன்ற ஒரு திகில்-தவித்துப் போனாள் அவள்.

''அரவிந்தகுமாருக்கு என்ன துணிச்சல்? வீட்டின் முகவரியைத் தேடி, தொலைபேசி எண்ணைக் கண்டு



பிடித்து வீட்டிற்கே போன் செய்துவிட்டிருக்கிறான். அங்கு வரவும் நினைக்கிறான். மறுபக்கத்தில் பேசியது யார் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டால்...'' நினைக்கவும் அவளுக்குப் பயங்கரமாக இருந்தது

''இன்னிக்கு செவ்வாய்க்கிழமை. உனக்குக் காலை ஒன்பது மணிக்கு கார் தேவைப்படும். நான் மறக்கலை. அனுப்பி வைக்கிறேன் கோவிலுக்கு போய்விட்டு அப்படியே உன் சிநேகிதியையும் பார்த்துட்டு வா. பகல் சாப்பாட்டுக்கு நான் இன்னிக்கு வீட்டுக்கு வர மாட்டேன்'' உற்சாகமாகப் பேசிக்கொண்டு பார்த்திபன் வெளியே கிளம்பினான். மனோகரிக்கு பதில் சொல்ல முடியாத குழப்பம். திரும்பி அவளைப் பார்த்த பார்த்திபன் ஒரு கணம் வியப்புடன் நின்றுவிட்டான்.

''ஒரு மாதிரியாக இருக்கியே? ஏன்? உடம்புக்கு என்ன?'' பரிவுடன் விசாரித்தான்.

திடுக்கிட்டுப் போனாள் மனோகரி. தயக்கத்துடன் தரையைப் பார்த்தாள்.

''ஒண்ணுமில்லையே. காலையிலிருந்து கொஞ்சம் தலைநோவு. அவ்வளவுதான்'' குமுறினாள் அவள்.

''புரிகிறது. நேற்று வார விரதம் நீ ராத்திரி பட்டினி, அதனால் இப்போ தலைவலி. இப்படியெல்லாம் உடம்பைப் போட்டு வாட்டிக்கொள்ளும்படி யாரும் கேட்கலையே...?'' பரிகாசமாகச் சிரித்துக்கொண்டு அவன் வெளியே விரைந்தான். கார் கேட்டைவிட்டு மறையும் வரையும் நின்று பார்த்துக் கொண்டிருந்த அவளுக்குத் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. கண்களில் நீர் முட்டியது பார்த்திபன் எத்தனை கண்யமான கணவன்? அவள்மீது அவனுக்குத்தான் எத்தனை நம்பிக்கை-எத்தனை அன்பு-பரிவு. இவ்வளவையும் நாசமாக்க மாபெரும் துரோக செயல் ஒன்று உருவாகிக் கொண்டு வருகிறதே-அதை அவன்

தெரிந்து கொண்டு விட்டால்...சிந்தித்துப் பார்க்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது.

இந்த அரவிந்த்குமார் இத்தனை நாட்களுக்குப்பின் அவள் வாழ்க்கையில் இப்போது வந்து ஏன் குறுக்கிட வேண்டும்?

வாடிப்போன அவன் முகத்தையும், குழைவான அவன் பேச்சையும் கேட்டு அவள் மனததில் ஏன் இந்த இரக்க உணர்வு?...புத்தி ஒரு நிலையில் இல்லாது ஏன் இப்படி குழம்ப வேண்டும்?...உணர்ச்சிப் போராட்டத்தில் அலை பாய்ந்து கொண்டு நின்ற அவள் மனம் தொடர்ந்து சிந்திக்கச் செயலற்று விட்டிருந்தது. என்னவோ பயங்கரமான தொரு சம்பவம் நிகழப் போகிறதென்ற வரைக்கும் அவளது உள்ளுணர்வு எச்சரித்தது.

வழக்கம்போல் அந்த நெடுஞ்சாலையின் கோடியிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு அவள் வீடு திரும்பினாள். பகல் உணவை டிபன்பாக்ஸில் எடுத்து வைத்துக்கொண்டு வெளியே கிளம்பினாள். அண்ணாசாலையை சமீபித்ததும் காரை நிறுத்தச்சொல்லி இறங்கினாள். ''சாப்பாட்டைக் கொண்டு ஐயாவுக்குக் கொடுத்துவிட்டு திரும்பி இங்கே வந்து காத்திருங்க-அதுக்குள்ளே நான் சாமான்களை வாங்கிட்டுத் தயாராக இங்கே வருகிறேன்-'' டிரைவருக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டிவிட்டு அவள் நடந்தாள்.

அரவிந்த்குமார் அவளுக்காக அந்த இடத்தில் காத்துக் கொண்டு இருந்தான். முதல் நாள் பார்த்ததுபோல் அவன் அலங்கோலமான தோற்றத்தில் காணப்படவில்லை. முகத்தையும் முடியையும் சீர்திருத்திக் கொண்டு பழையபடி அவன் அரும்புமீசையும் குறும்பு சிரிப்புமாக நின்றுகொண்டிருந்தாள். அவனை நெருங்க நெருங்க-குற்ற உணர்வின் சுமை தாளாது அவள் நெஞ்சு வேகமாகத் துடித்தது.



கலவரத்துடன் ஒருமுறை சுற்றிலும் அவள் கவனித்துக் கொண்டாள. அருகில் மெல்ல வந்தாள்.

''ஹாய் மனோ! எனக்குத் தெரியும் என்னை, ஏமாற்றமாட்டாய் வருவாய் என்று தெரியும.'' அவளை அவன் ஏற இறங்க பார்த்து விழிகளால் விழுங்கினான. வசதியான வாழ்வு தந்துவிட்ட செழுமையில் அவள முன்னை விட இப்போது மிகவும் அழகாக தெணபட்டதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

''அரவிந்த்! நீங்க ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதாலே நான் இங்கே வந்தேன். ஆனாலும் நாம இனி சந்திப்பது-பேசுவது எல்லாம தவறுன்னு உங்களுக்குத் தெரியும். நான் இப்போ வேறு ஒருத்தர் மனைவி...'' இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள.

''எனக்குத் தெரியும் மனோ எனது முட்டாள்தனத்தினால் நான் எத்தனை பெரிய பாக்யத்தை இழந்து விட்டேன்னு நினைச்சு நினைச்சு நான் படும் வேதனையை எப்படித்தான் உனக்கு விளக்குவேன்? மனோ, அந்தசமயம் நமது கல்யாணத்திற்கு குறுக்காக இருந்து தடை போட்ட என் தாயார் சமீபத்தில் காலமாய் விட்டாங்க-அவங்க பிரிவினால் அதிர்ச்சியடைந்து போயிருக்கும் என் தந்தை இப்போ என்ன பொன்னார் தெரியுமா? உனக்குப் பிடிச்ச அந்தப் பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கோ. எனக்கு ஆக்ஷேபணையில்லை என்கிறார்...இதைஎன்ன சொல்வது?'' மெல்லியதாக ஒலித்த அவனது குரல் கரகரத்தது.

''காலம் சடந்து போய் ஏற்பட்ட இந்த பெரிய மாற்றத்தால் யாருக்கு என்ன லாபம்? வீண் மன உளைச்சல்தான்: அரவிந்த், நாம் இனியும் கடந்துபோனவைகளை நினைத்துக் கண்ணீர் வடித்து மனசைக் குழப்பிக் கொள்வதில் பயன் கிடையாது...''

"மனோ! அப்படிச் சொல்லிவிடாதே. என்னால் உன்னை மறக்கவே முடியவில்லை. இரவும் பகலும் உன்னையே நினைத்துக் கொண்டு உருகுகிறேன். மனோ! நாமிருவரும் ஒருவரையொருவர் எத்தனை ஆழமாக நேசித்தோம்-ஏன் இன்னமும் நான் உன்னை அதே நிலையில்தான் நேசிக்கிறேன். உண்மையைச் சொல். மணவாழ்க்கையில் நீ சந்தோஷமாக இருக்கிறாயோ?— உன்னால் மறுபடியும் இன்னொருத்தரை நேசிக்க முடிகிறதா என்னால் முடியவில்லையே? என் மனம் உடைந்து உணர்வுகள் குலைந்து-ஐயோ நான் பித்தம் பிடித்தவனாக ஒன்றிலுமே பிடிப்பு இல்லாமல் திரிந்து கொண்டிருக்கிறேன்—மனோ! அயாம் எ ருயண்ட் பர்ஸன்."

பொங்கிக் கொண்டு வந்த தண்ணீரைச் சமாளிக்க முயற்சித்தாள் மனோகரி. உணர்ச்சி வசத்தில் அவள் உடல் பதறியது. கடற்கரையில் உல்லாசமாக அவனுடன் வார்த்தையாடிக் கொண்டு சிரித்து மகிழ்ந்த அந்த மனோகரி-அவள் இப்போது இல்லை. பார்த்திபன் மனைவி என்ற ஒரு பந்தம் அவளைச் சுற்றி ஒரு பெரிய இரும்பு வேலி போட்டு விட்டிருந்தது போன்ற பிரமிப்பு-அதன் அடையாளமாக கழுத்திலே துலங்கிய தாலி-அவள் நெஞ்சில் பட்டு உறுத்தியது. அவளது நிலையை உணர்த்தியது.

"அரவிந்த்! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அதிக நேரம் நின்று உங்களுடன் நான்பேசிக் கொண்டிருப்பதை யாராவது பார்த்தால்...

"பார்த்தால் என்ன? இனியும் நாம் நம்மை ஏன் ஏமாற்றிக் கொள்ள வேண்டும் மனோ! நீ வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்பதை உன் முகம் சொல்கிறதே. பணம், பதவி, பங்களா இதெல்லாம் இருந்து விட்டால் போதுமா? உணர்ச்சிகளுக்குப் பாதுகாப்பு-அரவணைப்பு இவை தேவையில்லையா? உண்மையான அன்பு இல்லாவிட்டால் உள்ளத்து உணர்வுகள் நன்றாக இணையுமா? அந்த வாழ்வும் ஒரு வாழ்க்கையா? சொல்-நன்றாக



யோசித்துப் பார். நீ வாழ நினைத்தபடி இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறாயா?" அவன் பேசிக் கொண்டே போனான்.

மந்திரத்தில் கட்டுண்டவள்போல் அவள் செயலற்று நின்றாள். அடி மனத்திலே நீரு பூத்த நெருப்பாக அடங்கிக் கிடந்த அந்த ஆசைகள்—அர்த்தமற்ற நினைவுகள்—பயனற்ற எண்ணங்கள்-பலவீனமான சிந்தனைகள் எல்லாம் நெருப்பைக் கிளறி—ஊதிவிட்டது போன்று வேகமாக எழுந்து நின்றன.

"அரவிந்த்! இப்போது என்ன செய்கிறது. பெரியப்பா என்னை வற்புறுத்தினார். மணந்துகொண்டு விட்டேன். வசிக்கவீடும்-உணவும் கிடைக்கிறது. என் கணவர் கண்ணியமானவர். அதை எண்ணிக் கடமைக்காக வாழ்கிறேன். அதைக்காட்டி என் மனசைப் புண்படுத்துகிறீங்களே-" தாங்கமாட்டாத துக்கத்துடன் கேட்டாள். கண்ணீர் பொங்கி கன்னங்களில் முத்துக்களாக சிதறி நெஞ்சின்மீது விழுந்தது.

"மனோ! இப்படி கண்ணீர் உகுத்து அழுது உன்னால் ஓரளவு மன ஆறுதல் பெற முடிகிறது. ஆண்பிள்ளை நான். வெளிப்படையாக அழுது புலம்ப முடியாது-மனதிற்குள்ளே அழுதழுது நான் தவிக்கிற தவிப்பு-" முடிக்காது நிறுத்தினான் அவன்.

கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் தன்னைச் சுற்றிலும் ஒரு முறை கலவரத்துடன் அவள் கவனித்துக் கொண்டாள். "இப்படித்தான் நடக்கணும்னு விதி-அதை நொந்து கொள்வதில் லாபமில்லை..." என்றாள் துயரத்துடன்.

'நமது தவறுகளை விதியின்மேல் போட்டுவிடுவது மடமை. நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலையை மனம் வைத்தால் நாம் நிவர்த்திக்க முடியும்?"

திடுக்கிட்டுப் போய் அவன் முகத்தைத் திகைப்புடன் பார்த்தாள் மனோகரி.

''நீங்க என்ன சொல்றீங்க?...'' பதட்டமாகக் கேட் டாள்.

''இந்த போலியான வாழ்க்கையை நீ நீடித்துத் தாங் கிக் கொண்டிருக்க வேண்டுமா?... இந்தப் பங்களா, பணம், இந்த வசதிகள் இவைகளை எல்லாம் என்னாலும் உனக் குத் தர முடியும். அத்துடன் உண்மையான அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்க முடியும். எனக்கு இப்போது அபாரமானதொரு துணிவு ஏற்பட்டுவிட்டது. மனோ என்னை நம்பு''

விவரிக்க இயலாத ஒரு பயங்கர உணர்வில் அவள் உடல் முழுதும் நடுங்கியது. ''அரவிந்த்? உணர்ச்சி வசப் பட்டு தவறாக என்னென்னவோ பேசுகிறீங்க-'' என்றாள் நடுங்கிய குரலில்.

''இல்லை மனோ! சரியாகத்தான் பேசுறேன். பழமை யான அர்த்தமில்லாத சம்பிரதாயங்களில்-கொள்கைகளில் ஊறிப்போய் விட்டிருக்கும் உன் மனசுக்கு நான் சொல்வது தவறாகத் தெரிகிறது. வீட்டிற்குப் போய் நன்றாகச் சிந்தித்துப் பார். ஒண்ணே ஒண்ணு உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து எனக்கு இந்த சிறு உதவி யைச் செய்ய வேணும். இரண்டு தினங்களுக்கு ஒரு தடவை யாவது உன்னை நான் சிறிது நேரம் பார்க்க வேண்டும் பேசவேண்டும். அப்போதுதான் ஒரு சிறிதளவு அமைதி எனக்கு எற்படும். மறுக்காதே. ப்ளீஸ் மனோ. நீ மறுத் தால் தற்கொலையைத் தவிர எனக்கு வேறு எதிலும் அமைதி ஏற்படாதுபோல் தவிக்கிறேன்'' உருக்கமாக-கண் களில் நீர் பனிக்க தழுதழுத்த குரலில் வேண்டிக் கொண் டாள். அவளைப்போல் அவனும் அமைதியின்றித் தவிக் கிறானே பாவம்! இரக்க உணர்வில் மனம் கரைந்து விட் டான் மனோகரி.

''அரவிந்த்! உங்களுக்காக இந்தக் காரியத்தைச் செய்ய ஒப்புக் கொள்கிறேன். கொஞ்ச நாட்களுக்கு மட்டுந் தான் என் கணவருக்கோ எங்கள் வீட்டில் மற்ற யாருக் கேனும் தெரிந்தால் விபரீதமாகிவிடும். எந்தக் காரணம்



கொண்டும் வீட்டுக்கு வந்துடாதீங்க. தயவு செய்து போன் பண்ணாதீங்க; வியாழக்கிழமை இதே இடத்தில் காலை பத்து மணிக்கு சந்திக்கிறேன்'' சுருக்கமாகக் கூறிவிட்டு வெளியே சாலைக்கு வந்தாள். தயாராகக் காத்திருந்த காரில் ஏறிக் கொண்டாள். மனத்திலே பெரும் உறுத்தல் கண்யமாக அவளை நடத்தும் கணவன் பார்த்திபனுக்கு அவள் இவ்வாறு துரோகம் இழைப்பது நியாயமா? மன சாட்சியின் சாடலைத் தாள முடியவில்லை.

''இளமையின் கனவுகளுடன் இன்பமாக சஞ்சரித்த உள்ளத்தில் முதல் முதலாக அன்பைத் தெளித்த அரவிந்த குமார் அமைதியின்றி தவிக்கிறானே-அவனுக்குக் கொஞ் சம் மனச்சாந்தி ஏற்பட அவனைச் சந்தித்துப் பேசினால் என்ன தவறு?''-தனக்குள்ளே பலவும் எண்ணிக் குமைந் தாள். கணவனிடம் பேச முடியாத விஷயம். வெளியே சொல்லிக் கொள்ள முடியாத பிரச்சினை. அவளே எண்ணி முடிவு காண வேண்டிய சிக்கல். இது மாதிரி சந்தர்ப்பங் களில் மனம் விட்டுப்பேசி தெளிவு காண உண்மையை உணர்ந்து சரியான பாதையில் செல்ல அவளுக்குத்தான் தாய் என்பவள் இல்லையே? வீட்டிற்கு வந்ததும் அவள் நேரே படுக்கை அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு-மனம் வெடித்துவிடும்போல் வெகுநேரம் அழு தாள்.

சில நாட்களுக்குப் பின்னர் காமாக்ஷியம்மாள் க்ஷேத்தி ராடனத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்திருந்தாள். அவள் எதிர்பார்த்தபடி தம்பிக்கும் அவன் மனைவிக்கும் இடையே உறவு நெருக்கமாகிவிடவில்லை. அவளுக்குப் பெருத்த ஏமாற்றம். அதைவிட மனோகரியின் நடத்தை யில் காணப்பட்ட மாறுதல் அவளை மிகவும் கவலையில் ஆழ்த்தியது. தம்பி மனைவி திருமணத்திற்கு முன்னர் வேலைக்குப் போய் வந்த பெண்தான். தினமும் தனியே பஸ்ஸில் பயணம் செய்தவள்தான் ஆபீஸில் பல ஆண் பெண்களுடன் பேசிப் பழகினவள்தான். என்றாலும் இப் போது தம் தம்பியின் மனைவியாகிவிட்ட பின்னர் அனா

வசியமாக வெளியே தனியே காரில் ஊரைச் சுற்றி வருவானேன். தம்பியின் கௌரவத்திற்கு அது பொருந்தாத செய்கையாக அவளுக்குப் பட்டது.

கோவில்கடை என்று ஏன் இவள் 'அடிக்கடி வெளியே புறப்படுகிறாள்? திரும்பிவரும்பொழுது கண் கலங்கி பிரமை பிடித்தவள்போல் ஏன் காணப்படுகிறாள். தனக்குள் எண்ணி காமாக்ஷி சஞ்சலப்பட்டாள். சந்தேகப்படவும் செய்தாள்.

ஒருநாள் காலை, மனோகரி கோயிலுக்குப் போவதாகக் கூறிவிட்டு வெளியே கிளம்பிவிட்டிருந்தாள். சிறிது பொழுதில் காமாக்ஷியம்மாள் சிநேகதி ஒருத்தி வந்து, அவளைத் தன்னுடன் டவுன் கடைகளுக்கு வரும்படி வற்புறுத்தி அழைத்துக்கொண்டு சென்றாள், நேத்தாஜி சாலையில் பல கடைகளில் சாமான்களைத் தேடி இருவரும் ஏறி இறங்கினர். தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு அவைகளை காரின் டிக்கியில் அடைப்பதில் ஈடுபட்டிருந்த அந்தம்மாள் கவனிக்கவில்லை. ஆனால் காமாக்ஷி கவனித்து விட்டாள். சூழ்நிலை கூடத் தெரியாது, சுவாரஸ்யமான பேச்சு போலும். யார் அவன்? தன் சிநேகிதி பார்த்துவிடப் போகிறாளே என்ற பதை பதைப்பு.

வீட்டிற்கு வந்த காமாக்ஷிக்கு இருப்பே கொள்ளவில்லை. மனோகரி அடிக்கடி வெளியே சென்றது அந்த வாலிபனைச் சந்திக்கவா? அடக் கடவுளே! ஏழைப்பெண் என்றாலும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றல்லவா எண்ணி தம்பிக்கு வலிய முடித்து வைத்தாள். அவள் தாயார் வழி தவறிப் போனவள் என்று கேள்விப்பட்டும் அதைப் பாராட்டாது ஏற்றுக் கொண்டதற்கு இதுவா பரிசு? தாயைப்போல் பெண் என்ற பழமொழி உண்மையாகிவிட்டதே. பார்த்திபனுக்குப் பொறுமை அதிகம்- ஆனால் கொதித்தெழுந்தால் எரிமலையாகப் பொங்கிவிடுவானே? அவனிடம் இதைப்பற்றி எப்படி எச்சரிப்பது? மனோகரியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாத சங்கடமான விஷயம்-பலவும் எண்ணி வருந்தினாள்.



அன்று மாலை அச்சகத்தினின்று பார்த்திபன் திரும்பி வந்ததும் குளித்துவிட்டு சாப்பிடும்வரை காமாக்ஷி பொறுமையாகக் காத்திருந்தாள். கட்டு தினசரி பத்திரிக்கைகளுடன் அவன் முன்னறைக்குச் சென்று அமர்ந்து கொண்டான். பின் தொடர்ந்து அவளும் அருகே ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். கையில் எடுத்துப் பிரித்த பத்திரிகையைத் தாழ்த்தி பிடித்துக்கொண்டு சகோதரியை வியப்போடு பார்த்தான் அவன்.

''என்ன அக்கா? என்னமோ பீடிகை பலமாக இருக்கிறதே?...'' வேடிக்கையாக அவன் சிரித்தான்.

காமாக்ஷிக்குக் கட்டுக்கொள்ள முடியவில்லை. கோபம் மூச்சைத் திணற அடித்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. ''நான் பத்துநாள் வெளியூருக்குப் போய் வருவதற்குள் வீட்டிலே ரொம்ப மாறுதல்கள் பண்ணியிருக்கிறியே...'' என்றாள் கடுமையாக.

'நீங்க சொல்கிறது ஒண்ணும் விளங்கலையே-'' புன்னகைத்தான் அவன்.

''தன்னந்தனியே மனோகரியை என்னத்துக்கு வெளியே அனுப்பறே? ஒரு குடும்பப்பெண் தினசரி கடைத் தெருவிலே சுத்திக் கொண்டிருந்தா பார்க்கிறவங்களுக்கு நல்லாவா இருக்கும். நினைச்ச பொருளையெல்லாம் வாங்கிறதுன்னு அப்படியென்ன ஒரு பழக்கம். எத்தனை லசதியிருந்தாலும் அளவோட செலவு செய்து வாழத் தெரிய வேண்டாமா...நீ மனோகரிக்கு கொடுத்திருக்கிற இடம் எனக்கு கொஞ்சங்கூட பிடிக்கலை...'' படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

''என்னக்கா ஒரேயடியாகப் பழியை என் மேலேயே போட்டுவிட்டீங்க. அவ என்னதான் அப்படி செலவு செய்தான்னு அவளையே கூப்பிட்டு கேட்டால் போச்சு'' பரிகாசமாக அவன் முடிக்குமுன் மனோகரி பால் டம்ளருடன் அங்கே வந்தாள்.

''மனோ! உன்மேல் அக்கா ஒரு கம்ளைண்ட் கொண்டு வந்திருக்கிறாங்க - அதைப்பத்தி பேசணும். உள்ளே போகாதே. கொஞ்சம் இரு...'' என்றான் வேடிக்கையாக.

வியர்த்து விருவிருத்துப் போய்விட்டாள் மனோகரி. முகம் சிவந்து நெஞ்சு படபடக்க செயலற்று கணவன் முகத்தைக் கவலையுடன் பார்த்தாள்.

' நீ இன்னிக்கு கடைத் தெருவுக்கு போயிருந்தியே-என்ன வாங்கினே? அங்கே என்ன செய்தே? டிடெய்லா ஒரு ரிப்போர்ட் தேவை?'' அவன் சிரித்தான்.

மனோகரி மௌனமாக நின்றாள். குற்ற உணர்வின் சுமையைத் தாள முடியாது அவள் நெஞ்சு துடித்தது.

''அவன் கேட்கிறான்-பதில் பேசாமல் நின்னா என்ன அர்த்தம்?'' பொறுமையற்ற காமாக்ஷி கடுமையாகவே அதட்டி விட்டாள்

மனோகரி உள்ளே விரைவாகச் சென்றாள். அன்று தான் வாங்கிய சாமான்கள் கொண்ட பார்சலை எடுத்து வந்து கணவன் அருகே மேஜைமீது வைத்தாள். ''என் பிறந்த நாளுக்கு நீங்க கொடுத்த பணத்தை நான் உடனே செலவழிக்கலை...அவ்வளவு பணம் போட்டு புடவை எடுக்க மனசில்லாமல், நூறு ரூபாய்க்குள் இந்த நைலக்ஸ் புடவையும் - இந்த ரவிக்கைத் துண்டும்-வளையல்களும் வாங்கினேன் - பில் மிச்ச பணம் எல்லாம் இதோ இருக்கு.'' கூறிவிட்டு கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு விம்மியபடி அவள் உள்ளே சென்று விட்டாள்-பார்த்திபன் திகைத்துப் போனான் தன் ஆசை மனைவி அழுவதைக் காண அவனால் சகிக்கவில்லை-''மனோ! அக்கா என்ன சொல்லிவிட்டாங்க-இப்படி அழுகிறே. ப்ளீஸ்...ஸ்டாப்பிட்...'' குழைவாகப் பேசி ஆறுதல் சொல்லிக் கொண்டு அவள் பின்னால் எழுந்து சென்றான்.

காமாக்ஷிக்கும் கோபம் தாள முடியவில்லை-அவளும் எழுந்து அப்பால் சென்று விட்டாள்.

கொஞ்ச நேரம் சென்றதும், அவன் தன் சகோதரியைத் தேடிக்கொண்டு அங்கே வந்தான். தேவாரப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு உட்கார்ந்த காமாக்ஷி அவனைக் கண்டு வியப்புடன் எழுந்து வந்தாள்.



''அக்கா மனோகரியிடம் அப்படி ஏன் கடுமையா பேசினீங்க? உணர்ச்சி வசப்பட்டு போகும் மென்மையான சுபாவம் அவளுக்கு. மனம் நொந்து அவள் இன்னமும் அழுது கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் அவங்க வீட்டிலும் இதுவரை அழுதது போதாதா. நம் வீட்டிலும் வந்து அழணுமா? இந்த வீட்டு நிர்வாகம் அவள் கையில் இருப்பது உங்களுக்குப் பிடிக்கலை-அவ்வளவுதானே. நாளையிலிருந்து நீங்களே எல்லாப் பொறுப்பையும் ஏத்துக்கோங்க... அவள் நிம்மதியாக இருக்கட்டும்...'' சற்றுக் கடுமையாகவே பேசிவிட்டான்.

காமாக்ஷி திகைத்துப்போனாள் — முகத்திலடித்தது போன்ற அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தை நோகச் செய்தன

''தெரியாம பேசி விட்டேன்—இனிமே என் நாக்கை கொஞ்சம் அடக்கியே வச்சுக்கிறேன்—மன்னிச்சுக்கோ—'' தம்பியைப் பார்க்க மனமின்றிப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டினாள். துக்கம் நெஞ்சை இறுக்க கண்களில்-நீர்மல்க அவள் வெகுநேரம் அயர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

எத்தனை கெட்டிக்காரன் என்றாலும்—ஒரு பெண்ணின் மயக்கத்திற்கு முன்-எத்தனை பெரிய முட்டாளாகி விடுகிறான் மனிதன். அவளுக்கு வியப்பு-வேதனை-நடக்க இருக்கும் ஒரு பெரும் விபத்தைப் பற்றி அவள், அவனை எச்சரிக்கை செய்ய விரும்பினாள். அதை அவன் உணர மறுக்கிறான் என்ன செய்வது.

## 11

புக்ககம் புறப்பட்ட புதுமணப் பெண் பெற்றவர்களைப் பிரியத் தயங்குவது போல்-நிலையத்தினின்று மெல்ல நகர்ந்தது ராக்போர்ட் எக்ஸ்பிரஸ். அசைந்து நெளிந்து வெளியேறிய வண்டித் தொடரின் வேகம் அதிகரிக்கவே இரைச்சலுடன் ஓடத் தொடங்கியது. பெண்கள் வண்டியில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்த மனோகரியின் முகத்

திலே குளிர் காற்று குப்பென்று வீசியது-அவள் உடல் நடுங்கியது. வண்டியின் சக்கரங்கள் எழுப்பிய தாள கோஷத்தின் எதிரொலியாக தாங்கமுடியாத திகிலில் அவள் நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொள்ளத் துவங்கியது.

வண்டி புறப்படும் வரை அவளுக்குத் தான் செய்யத் துணிந்த காரியத்தின் விளைவைப்பற்றிய நினைப்பு அத்தனை பயங்கரமாக இருக்கவில்லை. உணர்வுகள் மரத்துப் போன நிலையில் அவள் பிரமை பிடித்தவள்போல் இருந்தாள். மந்திர சக்தியில் கட்டுண்டவள் போல்தான் பிசகான அந்த செயலில் அவள் துணிந்து ஈடுபட்டு விட்டிருந்தாள்.

எழும்பூர் நிலையம் இருளில் கலந்து மறையத் தொடங்கியது. சென்னை நகரம் நிமிஷத்திற்கு நிமிஷம் வேகமாக விலகிக் கொண்டு சென்றபோதுதான் அவளுக்குத் தன் செய்கையில் விளையப் போகிற விபரீதம் புலனாகியது. ஐய்யய்யோ! ஏன் இந்த மாபெரும் பிசகைச் செய்ய அவள் மனம் ஒப்பினாள்? இருக்க இடம்-உண்ண உணவு-வசதியான வாழ்வு எல்லாம் தந்து அவளைப் பாதுகாத்த பார்த்திபனுக்கு எத்தனை பெரிய தலைக் குனிவை அவள் ஏற்படுத்தி விட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டாளே! இது மாபெரும் துரோகம். மன்னிக்க முடியாத குற்றம். ஏன் அவள் அரவிந்தகுமாரின் வார்த்தைகளுக்கு இப்படி மயங்கினாள்? துரோகச் செயலுக்கு செவி சாய்த்தாள். தாய் வழி தவறிப் போனவள் என்றால் மகளும் அதே காரியத்தைச் செய்ய முற்பட வேண்டுமா? அடக் கடவுளே! இப்போது அவள் என்ன செய்வாள்? கலவரமும், திகிலும் தாள முடியாது அவளுக்கு அழுகை வந்தது. என்ன காரியம் செய்து விட்டோம் என்று எண்ணிய மாத்திரம் தன் மீதே மிக்க வெறுப்பு-சே! தொடர்ந்து திருச்சி ஜங்ஷன் வரை அவள் பயணம் செய்துதான் ஆக வேண்டுமா? நடுவில் இறங்கி தண்டவாளத்தில் விழுந்து மடிந்து விட்டால்...கட்டுக் கொள்ள முடியாது அவள் அழுதாள். பார்த்திபனுடன் அவளால் இணைந்து வாழ முடியாத உணர்ச்சி குழப்பம். ஆனாலும் அவர் அவளை எத்தனை கன்யமாகப் பாதுகாத்து வந்தார். அவளது உணர்ச்சிகளை மதித்தார் மலர்



போல் மென்மையாகப் போற்றி வந்தார். அதற்குப் பிரதியாக அவள் அளித்த பரிசு இந்த மீளா அவமானமா?'' தன் நன்றி கெட்டத் தன்மையை நினைக்க நினைக்க-அவள் நெஞ்சே வெடித்தது. இப்படிச் செய்ய ஒரு பயங்கர எண்ணம் ஏன் ஏற்பட்டது? இதனின்று மீளும் வழி?

''மணி என்னம்மா?'' எதிர் புறத்திலிருந்த கிழவி அவளைப் பார்த்துக் கேட்டாள்.

கைகடிகாரத்தைக் கவனித்தாள். 'பதினொன்று ஆகுதம்மா?' மூடிக்கு முன் அவள் நெஞ்சை சம்மட்டிகொண்டு சுடுவது போன்ற வேதனை. 'இத்தனை நேரம் பார்த்திபன் வீட்டிற்கு வந்து விட்டிருப்பாரே? அழுத்திச் சாத்தினால் உள்ளே பூட்டிக் கொள்ளும் அமைப்புக்கொண்ட வாசற் கதவுக்கு அவரிடமும் திறக்க சாவி இருக்கிறது. கதவைத் திறந்து உள்ளே வந்ததும் அவர் கவனிக்கப் போவது அந்தக் கடிதத்தைதான். அவள் கடிதத்தை பார்வையில் படும்படி மேஜைமீது வைத்து விட்டு வந்திருந்தாள். இந்நேரம் கடிதத்தை அவர் படித்திருபபார்...' அவளால் மேலே சிந்திக்க முடியவில்லை. சூழ்நிலையை மறந்து அவள் அடக்க மாட்டாது குமுறி அழத் தொடங்கினாள்.

எதிர் ஆசனத்திலிருந்த அந்த கிழவிக்கு ஆச்சர்யம். அதே சமயம் பரிதாபம். கல்யாணமான பெண்போல் இருக்கிறது. யாருக்கு என்ன வந்து விட்டது. அழுது கொண்டு பயணம் செய்கிறாளே?

''ஏம்மா? யாராவது உடம்புக்கு முடியாம இருக்காங்களா? பாவம் அழறியே!'' பரிவுடன் விசாரித்தாள்.

மனோகரி என்ன பதில் சொல்வாள்?

''அம்மாவுக்கு உடம்புக்கு முடியலையா? தனியே திருச்சிவரை போறியா? நான் இருக்கேன் துணைக்கு கவலைப்படாதே அழாதேயம்மா. ஆண்டவன் இருக்கார் காப்பாத்திடுவார்-நல்ல சேதி கிடைக்கும் கவலைப்படாதே...'' கிழவி அடுக்கிக் கொண்டே போனாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மனோகரி. சிந்தனைகள் அலைபாய்ந்தன. பரிதாபப்பட்டு அவள் தொடர்ந்து அரவிந்தகுமாரைச் சந்தித்து வந்ததின் விளைவு எங்கே கொண்டு அவளை நிறுத்தி விட்டிருக்கிறது? அவன் பேச்சிலே ஏன் அத்தனை மயக்கம்? அவளது சுயபுத்தி எங்கே போய் விட்டிருந்தது. இந்தச் சதி திட்டங்களுக்கு சூழ்நிலை கூடவல்லவா சாதகமாக அமைந்து தொலைந்தது?

தொடர்ந்து மனோகரி செய்துவந்த தவறைக் கண்டித்து நிறுத்த உரிமையின்றி வாளா பார்த்துக் கொண்டிருக்க காமாக்ஷிக்கு மனம் ஒப்பவில்லை. புரிந்து கொள்ள மறுக்கும் தம்பியிடம் அவன் மனைவி தவறான பாதையில் செல்ல முற்படுகிறாள் என்று சொல்லத் துணிவு இல்லை. தூரத்து உறவினர் வீட்டுக் கல்யாண அழைப்பு மடலைக் கண்டதும் அவள் பயணமாகி விட்டாள். மதுரையில் நடந்த கல்யாணத்தில் கலந்து கொண்டு விட்டு-பின்னர் அப்படியே கன்யாகுமரியிலிருந்த சில நெருங்கிய உறவினர்கள் வீட்டிற்கு சென்று சில நாட்கள் தங்கி விட்டு.. பின்னர் மெல்ல சென்னைக்குத் திரும்புவது என்ற திட்டம். அவள் கிளம்பிவிட்டாள். பார்த்திபன் தடுக்கவில்லை. காமாக்ஷியம்மாளும் வீட்டில் இல்லை.

ஏன் என்று விசாரிக்க ஆள் இல்லாத நிலையில் மனோகரி துணிந்து தொடர்ந்து அரவிந்தை சந்தித்து வந்தாள், ஒரு சந்திப்பின் போதுதான் அவள் மனம் கரைந்து போய் புத்தி தடுமாறிவிடும் வகையாக அவன் வெகுவாகப் பேசி விட்டான்.

''மனோ உண்மையைச் சொல். இன்னமும் இந்தபோலி வாழ்க்கையில் தொடர்ந்து வாழ நினைக்கிறாயா? யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்று அஞ்சிக் கொண்டு என்னை சந்திக்கிறே. இந்த சந்திப்பு எனக்கு அமைதியைத் தரவில்லை. ஆறாத் துயரத்தைத்தான் தருகிறது. இதில் இருந்து உன்னை நான் விடுதலை செய்யத் துடிக்கிறேன். மனோ, நன்றாக யோசித்து முடிவு எடு.



உனது துயரங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து உன்னை மகிழ்ச்சியாக வாழ வைப்பது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நீ சரி என்று ஒத்துக்கொள் போதும். நாமிருவரும் இந்த நரக வாழ்க்கையினின்று வெளியேறி சட்டபூர்வமாக உன் கணவனிடமிருந்து விடுதலை பெற்று-பின்னர் கணவன் மனைவி என்று வாழலாம். இந்த சமுதாயத்தையே எதிர்ப்பது என்று நான் துணிந்து- விட்டேன்-நீயும் துணிய வேண்டும் அப்பொழுதுதான் நம் இருவருக்கும் அமைதி. யோசித்துப்பார் மனோ...'' பன்னிப் பன்னிப் பேசி மனத்தைக் குழப்பிவிட்டான்.

மனோகரிக்கு சில நாட்களாக உறக்கம் இல்லை. இதை எண்ணி எண்ணி குழம்பினாள். ஆனால் அரவிந்த்குமார் பேச்சிலே கெட்டிக்காரன். உணர்ச்சி ததும்ப அவன் எடுத்துச் சொன்னதெல்லாம் ஒப்புக் கொள்ளக்கூடிய நியாயமான கருத்துக்களாகத்தான் மனத்திற்குப் பட்டது. முடிவில் அந்த விபரீத எண்ணத்திற்கு அவள் ஒப்புதல் கொடுத்து விட்டாள். அதற்குப்பின் நடக்க வேண்டியதை அரவிந்தே சிந்தித்து தீர்மானித்தான். அவள் தலையாட்டிப் பொம்மையாக இருந்து விட்டாள்.

மாதம் ஒரு நாள் சமையல் ஆளுக்கு ஓய்வு கொடுப்பது வழக்கம். இம்முறை அவர் தமது மகளைக் காண மதுராந்தகம் போய்வர பார்த்திபனிடம் இரண்டு நாட்கள் லீவு வேணுமென்று கேட்டார். அவனும் கொடுத்து விட்டான் தோட்ட வேலையாள்-வீட்டு வேலையாள் எல்லோருமே ஐந்து மணிக்குமேல் மாலையில் அங்கே தங்குவதில்லை. பார்த்திபன் புதன் கிழமைகளில் அச்சகத்தினின்று இரவு பதினொரு மணிக்குத் தான் திரும்புவான்.

இந்த சந்தர்ப்பங்களைத் தன் சதித் திட்டத்திற்கு சாதகமாக்கிக் கொண்டு விட்டாள் அவள்.

அரவிந்த் முன்னதாகவே திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்று அவளை ஜங்ஷனில் சந்திப்பது-இருவரும் சேர்ந்து பயணம் செய்தால் பல வித தொல்லைகள் நேரலாம். பத்திரிகை தொழில் நடத்திய-பார்த்திபனுக்கு வெளி உலகில்

செல்வாக்கு அதிகம் உண்டு. உண்மையை உணர்ந்து கொண்டுவிட்டால் சும்மாவிட மாட்டான். போலீஸ்-வம்பு-வழக்கு என்று பல சிக்கல்களில் அவர்கள் அகப்பட்டுக் கொள்ள நேரும் அதையெல்லாம் தவிர்க்க அரவிந்த் அவளது நகைகள், பணம் முதலிவை கொண்ட பெட்டியை எடுத்துக் கொண்டு ஒரு நாள் முன்னதாகவே திருச்சிக்குப் போய் விடுவது-மனோகரி புதன்கிழமை இரவு கணவனுக்கு ஒரு கடிதம் எழுதிவைத்து விட்டு-கதவைப் பூட்டிக் கொண்டு-டாக்ஸியில் எழும்பூரை அடைந்து ராக்போர்ட் எக்ஸ்பிரசில் கிளம்பிவிட வேண்டியது. விடியுமுன் அது திருச்சி ஜங்ஷனை அடைந்து விடும் அங்கே அரவிந்த்குமார் அவளுக்காகத் தயாராகக் காத்திருப்பான். பின்னர் தங்களது மறு வாழ்வைப் பற்றி அவர்கள் திட்டமிட வேண்டியதுதான் பாக்கி...

இதற்கு அவள் ஒத்துக் கொண்டுவிட்டாள். கிளம்பியும் விட்டாள். ஏன் இப்போது மனத்திலே இந்தப் பெரும் கலக்கம்? திகில்-பயம்-அருவருப்பு? அவளுக்கே விளங்காத புதிர். நேரம் நடு இரவை நெருங்கிக் கொண்டிருந்தது. காற்றை ஊடுருவிக் கொண்டு கடும் வேகத்திலே நகர்ந்த வண்டியின் ஆட்டம் தாலாட்டுப் போல அமைய-பயணிகள் பலர் கூடவே ஆடிக் கொண்டு உறங்கத் தொடங்கி விட்டனர் சில்லென்று வீசிய காற்றின் சிலுசிலுப்பைத் தாளாது மனோகரி புடவைத் தலைப்பை இழுத்துத் தலையை மூடிக் கொண்டாள். அவள் செய்துவிட்ட இந்த தவறுக்குப் பின்னர் அவள் முகத்தை மூடிக் கொள்ளவேண்டியவள்தானே? அவள் உள்ளத்திலே ஒரு நெருடல்-பதட்டம் கலக்கம்-சொல்ல முடியாத வேதனை?

பக்கத்திலே உட்கார்ந்திருந்த கிழவிக்கு மட்டும் ஒரு சிறு சந்தேகம். பெட்டி கூஜா-படுக்கை ஒன்றுமே எடுத்துக் கொள்ளாது ஒரு சிறு கைப்பையுடன் புறப்பட்டிருக்கிறாளே இந்த பெண் ஏன்?

கிழவியின் பேரன் பெட்டியில் கொடுத்த ஐம்பது ரூபாய் அப்படியே புத்தம் புது நோட்டுகளாக இருந்தன.



''பத்திரம்! தூங்கி விடாதீங்க. வர வர ரயிலில் திருட்டு அதிகம் நடக்கிறது'' என்று அவர்கள் வீட்டில் எல்லோரும் பன்முறை எச்சரித்து அனுப்பியிருந்தனர். கிழவி கண்களை மூட பயந்தாள் விழித்துக் கொண்டிருக்கப் பேச்சு அவசியமே. அவள் தொண தொணக்கத் தொடங்கி விட்டாள்.

''ஏம்மா பெட்டிகூட எடுத்துவராம புறப்பட்டிருக்கிறியே. அம்மாவுக்கு ஆச்சு போச்சுன்னு இருக்காபாவம்?'

திடுக்கிட்டுப் போனாள் மனோகரி. அவளது பெட்டிக்குள் இரண்டு புது பட்டுப்புடவைகள்-அவளது நகைகள்-ஆறு மாதங்களாக சிக்கனமாக இருந்து பார்த்திபன் செலவுக்குக் கொடுத்ததில் மீதம் பிடித்து சேமித்து வைத்த இரண்டாயிரம் ரூபாய்கள் எல்லாம் இருந்தன. ஆமாம்; அரவிந்தகுமார் நகைகளையும் பணத்தையும் எடுத்து வர வேண்டும்; முதல் நாளே அவனிடம் அதைப் புத்தகக் கடையருகே ஒப்பித்து விடவேண்டும் என்று ஏன் வற்புறுத்தினான்? அந்தப் பெட்டியை வாங்கிக்கொண்டதும் அவளைப் பற்றிய நினைப்பு இன்றி வேகமாக கூட்டத்திற்குள் கூட்டமாக சாலைக்குள் மறைந்தானே அதன் பொருள்?

''தேவையில்லைனு கொண்டு வரலை பாட்டி...'' பதிலளித்துவிட்டுத் தூங்குகிறவள் போல் கண்களை மூடிக் கொண்டாள்.

செய்யத் தகாத ஒரு பாதகத்தை அவள் செய்து விட்டாள் இந்நேரம் பார்த்திபன் அந்தக் கடிதத்தைப் படித்திருப்பான்-சுருக்கமாகத்தான் அந்தக் கடிதத்தை அவள் எழுதியிருந்தாள். அதிலிருந்த வார்த்தைகள் அவளுக்கு மனப்பாடமாகி விட்டிருந்தன.

' இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும் பொழுது நான்-இங்கே இருக்க மாட்டேன் கடந்த பல மாதங்களாக நான் சொல்ல முயற்சித்த உண்மையை நீங்கள் கேட்க மறுத்தீர்கள்-இப்போது சொல்லித்தான் ஆகவேண்டிய நிலை. திருமணமாவதற்கு முன்னமே என் மனத்தை வேறு ஒருத்தருக்கு நான் தந்துவிட்ட காரணத்தால் என்னால் தங்களு

டன் இணைந்து வாழ முடியாது உணர்வுகள் தடை செய்தன. ஒதுங்கியே இருந்தேன். இதனால் இருவருக்கும் மன அமைதி இல்லாது போயிற்று தவித்தோம் இந்த போலியான வாழ்க்கையினின்று தங்களுக்கு விடுதலை வழங்க-நான் புறப்பட்டுப் போகிறேன்-மன்னிக்கவும். தேட முயற்சிக்காதீர்கள். எனக்கென்று கொடுத்த நகைகளை எடுத்துப் போவதைப் பற்றி தாங்கள் மறுப்பு சொல்ல மாட்டீர்கள். இதுவரை என்னைப் பாதுகாத்ததற்கு நன்றி...''

கடிதத்தைப் படித்ததும் பார்த்திபன் கட்டாயம் வெகுண்டு போவார். கணவன் முகம் கோபத்திலே எப்படி மாறும் என்பதை அவளால் ஊகிக்க முடியும். அவளிடம் இதுவரை அவன் அத்தனை ஒரு கோபத்துடன் பேசியது இல்லை. ஒருமுறை அவள் பார்த்திருக்கிறாள். டெலிபோனில் யாரோ ஒருத்தருடன்-பத்திரிக்கை சம்பந்தப்பட்ட விஷயத்தில்-வார்த்தைகள் தடித்து கோபத்துடன் அவன் பேசியபோது — அப்பப்பா...எரிமலை வெடித்தெழுந்து விட்ட கோலம்! அவன் முகம் ரத்தமாகச் சிவந்து கண்கள் நெருப்பைக் கக்க-வார்த்தைகள் வாளாக அறுக்க ...சினத்திலே மீறி நின்ற அவனை அவளால் பார்க்கவே முடியவில்லை. அவனுக்கு அத்தகைய ஒருசினம் வரக்கூடும் என்பது தெரிந்ததுதான். இப்போது அது வரப் போகிறது அந்த முன்னறை என்ன பாடுபடப் போகிறதோ? மனோகரியின் கற்பனை வேகமாகத் தொடர்ந்தது. பார்த்திபன் கடிதத்தைப் படித்துவிட்டு சும்மா இருந்துவிட மாட்டார். நேரே காரில் அவளது பெரியப்பா வீட்டிற்கு விரைவார்.

பெரியம்மா நாகமணிக்கு இந்த வம்பு எட்டு தலைமுறைக்குப் போதுமே? முகத்தில் அறைந்து கொண்டு உரத்த குரலில் பக்கத்து வீட்டவர்களுக்குக் கேட்கும்படி அலறி அழத் தொடங்கி விடுவாள்.

பெரியப்பா குறுக்கும் நெடுக்குமாக ஆத்திரத்துடன் கையை ஆட்டிக்கொண்டு உலாவுவார்-அதிகமாகக்கோபம் வந்துவிட்டால் அவருக்குப் பேசவே முடியாது.



''இப்படி ஒரு காரியத்தை மனோகரி செய்வாள்னு நான் எதிர்பார்த்ததுதான். நடத்தைகெட்டவள் மகள்-பின் எப்படியிருப்பாள்-'' வனிதா விஷமமாகத் தங்கையிடம் அவளைப்பற்றி விமரிசனம் செய்வாள். ''மனோகரிக்கு என்னவந்துவிட்டது-அழகான-நல்லகணவன்,வசதியான வாழ்க்கை, இதையெல்லாம் உதறிவிட்டு சே! அரசனை நம்பி புருசனை விட்ட கதையாக...எனக்கு இப்படி ஒரு நல்ல இடம் வாய்ச்சால்...என் கணவரை தெய்வமாக கும்பிட்டுக் கொண்டு நான் அழகாக வாழ்ந்து காட்டுவேனே...'' லாவணி எரிச்சலோடு சொல்வாள்.

காமாக்ஷியம்மாள் சங்கதியைக் கேட்டால் இடி விழுந்தாற் போல் அதிர்ந்து போய்விடுவாள்-மெல்ல விஷயம் ஊரிலே பரவி விடும். மனோகரியின் முட்டாள் தனத்தைக் குறித்து எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பார்கள்-கடுமையாகப் பேசுவார்கள்-துச்சமாகப் பேசுவார்கள்-பின்னர்? ...ஒரு சமயம் போலீஸ் உதவியுடன் அவளை பார்த்திபன் தேடிக் கண்டு பிடித்து விட்டால்? பரிவுடன் பார்த்த அந்தக் கண்களில் அதற்குப் பின்னர்? அவளை சுட்டெரித்து விடாதா? அவளால் மேலே சிந்தித்துப் பார்க்க முடியாத பயங்கரம். உடல் நடுங்கியது-மெய் பதறியது-உள்ளம் பதைத்தது. தன் பிசகை எண்ணி அவள் மீண்டும் ஒரு மூச்சுக் கண்ணீர் உகுத்தாள்.

''அழாதேயம்மா, 'தைரியமாயிரு, உன் அம்மா சுகமாகி விடுவாங்க. ஆண்டவன் இருக்கிறார்-'' கிழவி ஆறுதலாகச் சொன்னாள்.

''உன்னைக் கூட்டிக் கிட்டுப் போக ஸ்டேஷனுக்கு யாராச்சும் வருவாங்களா?'' கேட்டாள் அவள்.

''வருவாங்க'' சொல்லி முடிப்பதற்குள் அருவருப்பான ஒரு நினைவில் உடலே நடுங்கியது. எந்த அரவிந்திற்காக மனம் இறங்கி இந்த மாபெரும்தவறான காரியத்தில்அவள் இறங்கினாளோ அவன்மேல் இப்போது அவளுக்குத் தாங்க முடியாத வெறுப்பு. பாம்பு போல் இவன் மறுபடி ஏன்

அவளது வாழ்க்கையில் குறுக்கிட்டான்? இல்லாத ஆசைகளை, கற்பனைகளைத் தூண்டிவிட்டு மானம் அழிய மதி கெட்டுப் போகப் போதித்தானே ஏன்?

இல்லை! இல்லை! இப்போதும் நிலைமை மீறிவிடவில்லை. மனம் குழம்பிப்போய் தானே இந்த தவறுசெய்து விட்டாள்? நல்லவேளை, மானம் அழிந்து போகுமுன் அறிவு உதயமாகிவிட்டது. அவள் தப்பி விட்டாள். இனி அவளுக்கு வேண்டியது எந்த விதமான வாழ்க்கையுமில்லை. கணவனின் மன்னிப்பு. அவ்வளவுதான். பெண்மைக்கு இழிவு எதுவுமின்றி, அவள் உடனடியாகத் திரும்பி விட வேண்டும். பார்த்திபன் சினத்துடன் சீறி வழங்கப் போகும் தண்டனையை அவள் ஏற்கத்தான் வேண்டும்-வேறு வழி?

அரவிந்த்குமார் திருச்சி ஜங்ஷனில் காத்திருப்பான். அவனிடம் கண்டிப்பாக பேசி-பெட்டியை வாங்கிக் கொண்டு கிடைத்த பஸ்ஸில் உடனே சென்னைக்குத் திரும்பி விடவேண்டும். ஒரு சமயம் அவன் பெட்டியைக் கொடுக்க மறுத்து அவளைப் பயமுறுத்தினால் அஞ்சக் கூடாது. அங்கு உள்ள போலீஸ் அதிகாரியை அணுகி உண்மையைச் சொல்லிவிட வேண்டும். மோசக்காரன்அரவிந்த். முதலில் அவளுக்கு வாழ்க்கை கொடுக்க மறுத்தான்-பின்னர் அவள் வேறு ஒருத்தனுடன் வாழ்வதைக் காணப் பொறுக்காது அதைக் குலைக்க வந்துவிட்டான். இந்த உண்மை, இப்போதல்லவா அவளுக்கு விளங்குகிறது?... ஏன் இதற்கு முன் தெரியவில்லை?

பல பல எண்ணி சஞ்சலத்தில் தவித்து மனம் வெடிக்க அழுது, முடிவில் ஒரு தீர்மானத்துடன் அவள் புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு-ஜன்னல் மீது தலையைச் சாய்த்துக் கொண்டாள். திருச்சி ஜங்ஷன் எப்போது வரும் என்ற தவிப்பு.



விடியற்காலை ஆறு மணி. வண்டி ஜங்ஷனை அடைந்தது. பயணிகள் அனைவரும் தங்கள் பெட்டி படுக்கை சாமான்களுடன் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு இறங்கினார்கள்.

மனோகரி கைப்பையை பிடித்துக்கொண்டு கலக்கத்துடன் இறங்கினாள். பிளாட்பாரத்தில் வழிந்த கூட்டத்திலே, அரவிந்தகுமாரை' அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை ஒருபுறம் ஒதுங்கி நின்றுகொண்டு கண்களைப் பல திக்கிலும் ஓட விட்டாள். வண்டியினின்று இறங்கிய கூட்டம் சடுதியில் கரைந்து விட்டது-நேரமும் அத்துடன் நகர்ந்தது. ஒரு மணிக்குமேல் அவள் பிளாட்பாரத்தில் கவலையுடன் நின்று கொண்டிருந்தாள். அரவிந்தகுமாரைக் காணவில்லை. முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு நெஞ்சு படபடக்க அவள் சுற்றிலும் மீண்டும் பார்த்தாள்.

''ஏம்மா! யாருக்காக நிக்கறீங்க. ராக்போர்ட் எக்ஸ்பிரஸ்ஸில் வந்தவங்கதானே!'' ரயில்வே ஊழியர்களில் ஒருத்தர் அவளை ஏற இறங்கப் பார்த்தபடி கேட்டார். பெட்டி படுக்கை ஏதுமின்றித் தன்னந்தனியே கைப்பையுடன் ஒரு இளம் பெண் மருள விழித்துக் கொண்டு அந்த வேளையில் அங்கு நின்றால் யாருக்கும் சந்தேகம் ஏற்படுவது இயற்கைதானே!

அவமானத்தில் குன்றிப் போனாள். ''அண்ணன் வருவதாகச் சொன்னார்; பரவாயில்லை நான் பஸ் நிலையத்திற்கே போய் பார்க்கிறேன்.'' நிற்கப் பிடிக்காது கிளம்பி வெளியே வந்தாள். சேலம் பஸ்ஸைப் பிடிக்க ஒரு கூட்டம் போய்க் கொண்டிருந்தது அத்துடன் அவள் கலந்து கொண்டாள்.

பஸ் நிலையத்தில் - குற்ற உணர்வின் சுமையோடு-கையில் ஐந்து ரூபாய் பணத்துடன் அவள் நின்றுகொண்டிருந்தாள். மீதி பணமெல்லாம் அந்தப் பெட்டியில்தான் இருந்தது. திரும்பிப் போக டிக்கெட்டிற்கு பணம் தேவை-

காதுகளில் வைரக்கம்மல்-கழுத்திலே தங்கத்திலான தாலிச் சரடு-கைகளில் தங்க வளையல்கள் இருந்தன. ஆனால் விடியற்கால வேளையில் அவைகளை விலை கூறிக் கொண்டு முன்பின் தெரியாத அந்த ஊரில் அவள் யாரிடம் போவாள்.

பழக்கூடைக்காரனிடம் பேரம் செய்து கொண்டிருந்த குறுந்தாடி வாலிபன் அவளை விழுங்கிவிடுபவன்போல் வெறித்தான். அருகிலிருந்த ஹோட்டலில் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு ஏப்பம் விட்டபடி வந்த மல்ஜிப் பாக்காரரின் கண்களில் அவளைக் கண்டதும் வேறு ஒரு பசி. சுற்றிலும் ஓநாய்களும், கழுகுகளும் சூழ்ந்துகொண்டு கொத்திக் குதற நிற்பன போன்ற ஒரு பயங்கர உணர்வில் அவள் நடுங்கிப் போய் நின்றாள்.

வீட்டைவிட்டு ஒரு இளம் பெண் கிளம்பினால்-யோசிக்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.

"எங்கே போறே?" உல்லாசமாகக் கேட்டுக் கொண்டு அருகில் வந்த வெற்றிலைப் பாக்கு ஆசாமியைப் பார்க்கப் பிடிக்காது நகர்ந்தாள்.

யாரோ தோள் பட்டையைத் தொட்ட உணர்வு-திடுக்கிட்டுத்திரும்பினாள்.

"சே! என்னைத் தொடாதே. தொழு நோயுடன் பிச்சை கேட்க வந்துட்டேயே"-கிரீச்சென்று கத்திக் கொண்டு நகர்ந்தாள். நிமிர்ந்தாள்.

அவள் நெஞ்சு இரண்டாகப் பிளந்துவிடும் போன்ற வேதனையான திகைப்பு.

அந்த முகத்தை அவள் எப்படி மறக்க முடியும்? இரவும் பகலும் அவளது நெஞ்சோடு ஒட்டிக்கொண்டு நிலைத்துவிட்ட உருவம் காலத்தால் அழிக்க முடியாத நினைவு...

"நீங்க...நீங்க..." கொந்தளித்த உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாது அவள் தடுமாறிக்கொண்டு நெருங்கினாள்.



நோயினால் பாதிக்கப்பட்டு...உருக்குலைந்து விட்டிருந்த கரங்களை புடவைத் தலைப்பில் மறைத்துக் கொண்டாள் அவள். ஆனால் உள்ளத்திலே பொங்கிய உணர்வுகளை மனத்தில் கொள்ள முடியவில்லை. அடக்கவும் முடியவில்லை.

"நீ...நீ... என் மனோ இல்லையா?' பெற்றவள் அழுதுகொண்டே பெண்ணை நெருங்கினாள்.

"வீட்டைவிட்டு என் கணவரைவிட்டு உங்களைப் போல் ஓடிவந்து விட்டேன் அம்மா. என்னைக் காப்பாத்துங்க-பயமா இருக்கு''-விம்மிக்கொண்டே அவள் கரங்களைப் பற்றிக்கொண்டாள் மனோகரி.

## 12

பொழுது விடிந்து இளஞ் சூரிய வெளிச்சம் எங்கும் பரவிக்கொண்டு வந்தது. இருமருங்கிலும் மரங்கள் அடர்ந்த சாலைமீது ஆனந்த நிலையத்து மோட்டார்வான் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. வண்டியை ஓட்டுபவர் அருகே முன் பக்கத்தில் ஆசிரம வாசிகள் இரண்டு ஆண்கள் அமர்ந்திருந்தனர். சாமான்கள் நிறைந்த அட்டைப் பெட்டிகளும்-பார்சல்களும் நிறைக்கப்பட்டிருந்த வானின் உள்ளே மனோகரி தன் தாயின் அருகில் நெருங்கி உட்கார்ந்திருந்தாள். இரவு முழுவதும் அழுது சிவந்து வீங்கிப் போன கண்களில் ஒரே எரிச்சல். உறக்கமில்லாது தவித்ததில் ஏற்பட்ட தலைவலி. இவைகளையெல்லாம் அவள் பொருட்படுத்தவேயில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னர், அதுவும் பயங்கரமானதொரு நிலையில்-தாயின் உதவியையும், ஆலோசனையையும் - அரவணைப்பையும் நாடி ஏங்கி சஞ்சலப்பட்ட சமயம் எங்கிருந்தோ வந்து முளைத்து முன் நின்ற தாயைக் கண்டு ஏற்பட்ட பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவள் உள்ளம் நிறைந்துவிட்டிருந்தது

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டியதில்லைதான். யாரும் கேட்காதபடி தாயும் மகளும் மனம் விட்டுப் பேசிக் கொள்ள பல விஷயங்கள் இருந்தன. வழி நெடுகிலும் இருவரும் வாய் ஓயாது பேசினார்கள். பொங்கிப் புறப்பட்ட உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாது கண்ணீர் வடித்தனர்-ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லித் தேற்றவும் முயன்றனர் பல வருஷங்களுக்குப் பின்னர் மீண்டும் மனோகரி தன் தாயின் தோள்மீது ஆசையுடன் சாய்ந்து கொண்டு மிகவும் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

“நீங்க இப்படி ஒரு நோயிலே துடிச்சுக் கொண்டிருந்தது தெரியாமல் நீங்க மாபெரும் தவறுசெய்துவிட்டதாக நினைச்சு ஒவ்வொரு நாளும்-ஒவ்வொரு நிமிஷமும் அவமானத்திலே துடிச்சு-உங்களை அணு அணுவாக வெறுத்து கொண்டு வாழ்ந்தேன் அம்மா. என்ன நடந்ததுன்னு உண்மையை ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தா எத்தனையோ நல்லா இருந்திருக்குமே...'' அவள் குரல் துயரத்திலே கரகரத்தது.

மகளது கண்ணீரை மிகவும் சிரமப்பட்டுத் துடைத்தாள் சுமதி

“ஞாபகமிருக்கா மனோ! ஒருநாள் நீ பள்ளிக் கூடத்திலிருந்து வந்தபோது சாப்பாடு போட்டேனே அது தான் கடைசியா நான் உனக்கு போடப் போகிற சோறுன்னு தெரிந்த நான் துக்கத்திலே துடிதுடிச்சுப் போனேன். நீ அறியாத பெண்; உன்கிட்ட சொல்ல முடியலை. என் ஓரகத்தி நாகமணியும் உன் பெரியப்பாவும் என்னைப் புரிந்து கொள்ளும் அளவில் அவங்க மனதில் அன்பிருந்தால் அவங்ககிட்ட ஒளிக்காம சொல்லியிருப்பேன். அந்த முடிவுக்கு நான் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்புதான் எனக்கே விஷயம் தெரிந்தது. என் சாது ஓரத்து சதை தடித்து உணர்ச்சி குறைந்துகொண்டு வருவதை உணர்ந்தேன். இடது கையின் மேல் சர்மத்தில் லேசா சிவப்பு நிறத்தில் திட்டு திட்டா ஏற்பட்டிருந்த நிறமாறுதல் அந்த



இடத்தைத் தொட்டால் உணர்வில்லாத நிலை. வீணை வாசிக்க முடியாது கை விரல்களில் பலஹீனம். உடல் அயற்சி. அவ்வப்போது காய்ச்சல்...தொடர்ந்து அசட்டையாக இருக்க முடியாமல் டாக்டர் ஒருத்தரைப் பார்க்கப் போனேன்-அவர் சொன்ன உண்மையைக் கேட்டு நான் இடி விழுந்தது போலாகிவிட்டேன்.

''தொழு நோய் ஆரம்பமாகி வேகமாகப் பரவிக் கடுமையாகிக் கொண்டு வருகிறது. உடனடியாக சிகிச்சைக்கு உட்படவேண்டும்.'' டாக்டர் வற்புறுத்தினார்.

''வரக்கூடாத நோய் வந்து விட்டதுன்னு தாங்க மாட்டாத துக்கத்திலே நான் அழுததைவிட இந்த நோய் உன் வருங்காலத்தை எவ்வளவு தூரம் பாதிக்கக் கூடும்னு எண்ணிக் கலங்கி-கதறி அழுதேன். எவ்வளவு நாட்கள் மூடி மறைத்து வைக்க முடியும். நாகமணிக்கு விஷயம் தெரிந்துவிட்டால் உன்னையும் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவாளேன்னு பயம்; பலருக்கும் தெரிந்துவிட்டால் தொழு நோய்க்காரியின் மகள்னு உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள தயங்குவாங்களேன்னு அச்சம். உன்னை அந்தப் பேராபத்திலிருந்து காப்பாற்ற-உனது வருங்காலத்தை நாசமாக்காது பாதுகாக்கத்தான் நான் யாரிடம் சொல்லாமல் மறைந்து போனேன். என்னைக் கவனித்த வைத்தியர் கொடுத்த கடிதத்தை எடுத்துக்கொண்டு கார்க்கி ஸானிடோரியத்தில் போய் சேர்ந்துவிட்டேன். நோயை ஆரம்பத்திலே கவனிக்காத தவறினால் அது கடுமையாகி விட்டது. அதனால் நான் அந்த ஸானிடோரியத்தில் ஆறு வருஷங்களுக்குமேல் தங்க நேரிட்டது. இரண்டு வருஷத்துக்கு முந்திதான் குணமாகிவிட்டேன்னு அவர்கள் என்னை வெளியே அனுப்பினார்கள். எங்கே போவதுன்னு கலங்கிக் கொண்டிருந்த சமயத்தில் புண்ணியவான் டாக்டர் ஸ்மித் அங்கே வந்தபோது என் நிலைக்கு இரங்கி தாம் நடத்திக் கொண்டிருந்த இந்த மறு வாழ்வு இல்லத்தில் அனுமதித்துக் கொண்டார். தொடர்ந்து நான் இங்கேயே உதவி செய்து கொண்டு வாழ்கிறேன்...

''தற்கொலை செய்து கொண்டதாக மத்தவங்க நம்பி விடுவாங்கன்னு நான் புறப்பட்டுப் போனேன். ஆனால் என்னைப் பத்தித் தவறான கதை பரவிவிட்டிருக்கிறதுங் கிறதை கேட்டு ரொம்ப வருத்தமாக இருக்கு. என் விதி யைத் தவிர நான் யாரை நொந்துக்க முடியும் சொல்லு...''

''குணமாகியவுடனேயே நீங்க திரும்பி வந்திருக்க லாமே? ஏன் வரலை அம்மா...?''

"எப்படி முடியும். நோய் குணமாகிவிட்டது. என்னால் தீங்கில்லை. நோய் பிறருக்கு ஒட்டாதுன்னு வைத்தியர் சான்றிதழ் வழங்கிவிட்டாலும் மத்தவங்க நம்பணுமே. என் உடம்புக்கு ஏற்பட்டிருக்கும் சீர்குலைவைப் பார்த்து நாகமணி பயப்படலாம் இல்லையா? உன்னைப் பெண் பேச வருகிறவங்க என்னைப் பார்த்து அருவருப்பு அடைய லாம். புராண காலத்திலே இந்நோய் வந்தவங்களைக் கல் லால் அடித்து இம்சிப்பாங்கன்னு கதைகளில் படிச்சிருக்கி றாய் இல்லையா? இப்போ இன்னமும் இந்நோயாளிகளை பிறர் சொல்லால் அடிக்கிறாங்க அம்மா. வைத்திய கலை சிகிச்சை எல்லாம் முன்னேறிவிட்டிருக்கும் இந்தக் காலத் தில் கூட ஒரு பயம். கவனமாக சமூகத்திலே என்னைப் போன்றவங்களுக்கு சட்டென்று ஒன்றி இருக்க மறுவாழ்வு கிடைக்கிறதில்லை-ரொம்ப கடினம்...அதனால் நான் ஆனந்த நிலையத்திலேயே தங்கிவிட்டேன்.''

"எனக்காக எத்தனை பெரிய தியாகம் நீங்க செஞ்சிருக் கிறீங்க-அது தெரியாம உங்க நடத்தையைப் பற்றி சந்தே கிச்சி, உங்களை நான் உள்ளூர வெறுத்துக் கொண்டிருந் தேனே-எத்தனை பெரிய பிசகு. அதை நினைச்சு ரொம்ப வெட்கப்படுகிறேன்-துக்கப்படுகிறேன்.''

''உங்களுக்கு உடலில் ஏற்பட்ட கொடும் நோய் காரணமாக நீங்க வீட்டைவிட்டு வெளியேறினீங்க-எனக்கு மனசிலே 'துரோகம்னு' பெரிய நோய் ஏற்பட்டு வீட்டை விட்டு வந்துவிட்டேன். உங்க நோய் குணமாகி உங்களுக்கு மறுவாழ்வு கிடைச்சுடுச்சு. என் நோய் குணமாகி எனக்கு மறுவாழ்வு கிடைக்குமா...?''



பேச முடியாது அவள் விம்மினாள். சுமதி மகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

''அழாதே கண்ணு...ஆசிரமத்துக்குப் போய் யோசிப் போம்...'' ஆறுதலாகச் சொன்னாள்

மனோகரியால் பேசாமல் இருக்கவே முடியவில்லை. அந்தக் கொஞ்ச நேரத்திற்குள் தாய் தன்னை பிரிந்த நாளிலிருந்து அன்று வரை நடந்த எல்லாவற்றையும் கண் ணீரும் விர்மலுமாகச் சொல்லி முடித்து விட்டாள்.

சுமதி திடுக்கிட்டுப் போனாள்.

''என்ன சொன்னே? பிரபல எழுத்தாளர், பத்திரிக்கை ஆசிரியர் பார்த்திபனா உன் கணவர்? என்ன ஆச்சர்யம்?''

''ஏம்மா அப்படி அதிசயப்படுகிறீங்க.''

''மனோ உனக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட அதிர்ஷ் டத்தை புரிஞ்சுக்காமல் குழம்பிப் போய் எத்தனை பெரிய தவறு செஞ்சுட்டே...? அவர் எத்தனை பெரிய அறிவாளி தெரியுமா? எங்க ஆசிரமத் தலைவர் டாக்டர் ஸ்மித்துக்கு அவர் ரொம்ப தெரிஞ்சவராச்சே போன வருஷம் எங்க ஆசிரமத்து ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிச்சார்- தொழுநோயுள்ளவர்களின் மறுவாழ்வு பற்றி மிகவும் உருக்கமாகப் பேசினார். ஆசிரமத்துக்குக் கணிசமாக ஒரு நன்கொடை கொடுத்தார். தமது பத்திரிக்கையில் தொழு நோயாளிகளின் மறுவாழ்வு பற்றிய சிரமங்களை விவரித் துக் கட்டுரை ஒன்று எழுதி உதவினார்...அவரா உன் கணவர்? என் மருமகன். எனக்கு ரொம்ப பெருமையாக இருக்கும்மா. நான் கொடுத்து வச்சவள். மனோ! அவர் ஏழை நோயாளிகளிடம் காட்டின கருணை வீணாக வில்லை; அவர் செய்த தர்மம் அவரைக் காத்துவிட்ட தும்மா. அவரது வீடு மாசுபடாது தப்பியது. நீ மானமழி யாது பிழைச்சே...அதுவே போதும்.'' மகளை மீண்டும் தாய் இறுக்க அணைத்துக் கொண்டாள்.

அம்மா! அப்படிப்பட்ட நல்ல ஒரு கணவரை விட்டு நான் கிளம்பி வந்திருக்கிறேனே-எப்பேர்ப்பட்ட முட்டாள் ...எனக்கு மன்னிப்பு கிடைக்குமா...'' மகள் விம்மினாள்

"எங்க ஆசிரமத் தலைவருக்கு அவர் நண்பர்-நோயுற்றவர்கள்மீது கருணை உள்ளம் கொண்டவர். ஆனால் தமது இல்வாழ்க்கையில் அவரது கொள்கைகள் எப்படிப் பட்டதோ. தனக்கு வாய்த்த மனைவி இப்படிப்பட்டவளாக இருக்க வேண்டுமென்று அவருக்கு சில இலட்சியங்கள் இருக்கலாம் அல்லவா...அவைகளை நாம் எப்படியம்மா மாற்ற முடியும்?"

"அப்படின்னா என் வாழ்க்கை...?அவர் என்னை மன்னிக்காட்டா நான் என்னம்மா செய்வேன்...?"

"இதைப்பத்தி நீ முன்னமேயே யோசித்திருக்கணும்?"

"என் சூழ்நிலை-நான் உங்கமேலே கொண்டிருந்த வெறுப்பு...இதெல்லாம் என் புத்தியைக் கலக்கிடுச்சு அம்மா..."

"நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நீ படிச்சபெண். நல்லது கெட்டது புரிஞ்சு கொள்ளுகிற வயது வந்தவ. சூழ்நிலை-பாரம்பரியம்-சமூகம் இவைகள் மேல் பழியைப் போட்டுட்டு குழம்பிக்கொண்டு உண்மையைப் புரிந்து கொள்ள மறுத்துத் தவறு செய்துவிட்டாய். தாய் வழி தவறிவிட்டால் மகளும் தவற வேணும்னு விதியில்லையே. குற்றவாளிக்குப் பிறந்த குழந்தை குணவானாக வளரக் கூடாதா? நத்தை வயிற்றிலே முத்து பிறப்பதில்லையா... சரி அழாதே. ஆசிரமத்திற்குப் போய் மீதியைப் பத்தி ஆலோசிப்போம்" மகளைத் தேற்றினாள் தாய்.

ஆனந்த நிலையம் திருச்சிக்கு அருகிலிருந்த திருவெங்கிட மலை என்ற குன்றின் அடிவாரத்தில் சற்றுத் தொலைவில் இருந்தது அதை உருவாக்கி சிறப்பாகச் செயல்படச் செய்து வந்த தலைவர் டாக்டர் எட்வர்ட்ஸ்மித் தமது வாழ்க்கை முழுவதையும் தொழுநோய் அடைந்தவர்களின் மறுவாழ்விற்கே அர்ப்பணம் செய்துவிட்டிருந்தார் அதில் வந்து சேர்ந்துவிட்ட சுமதி சுருசுருப்பாக பணிபுரிந்து வைத்தியரின் நன்மதிப்புக்கு உள்ளாகி நாளடைவில் பெண்கள் பகுதியின் மேற்பார்வையாளராக உயர்த்தப் பட்டு விட்டிருந்தாள். மாதமொருமுறை ஆசிரமத்து வான்



தேவையான சாமான்களை வாங்கிவர திருச்சி டவுனுக்கு வருவது வழக்கம். சில தினங்களில் நடக்கவிருந்த ஆண்டு விழாவுக்கு அதிக சாமான்கள் வாங்கவந்த அவர்கள் இரவு அங்கேயே தங்கி இருக்க வேண்டி வந்துவிட்டது. உறவினர்கள வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் காலை பஸ் நிலையத்தில் வண்டியை சந்திப்பதாகச் சொல்லியிருந்த அந்த இரண்டு பேருக்காக சுமதி அன்று காலை அங்கே காத்துக் கொண்டு நின்றாள். சுருக்கமாகத் தன்னையும் பற்றிச் சொல்லிவிட்டு அவள் பெருமூச்செறிந்தாள்.

"அம்மா! நீங்க அங்கே வந்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று? இல்லாவிட்டால்..." நினைக்கவும் மனோகரிக்கு அச்சமாக இருந்தது. மீண்டும் அவள் பயத்துடன் தாயை அணைத்துக்கொண்டாள்.

ஆனந்த நிலையம் அமைதிமிக்கதொரு சூழ்நிலையில் அமைந்திருந்ததைக் காண மனோகரிக்கு மெத்த வியப்பு. வெளியே பெரிய மதில் சுவர்கள். உள்ளே பெரியதொரு தோட்டம் நடுவிலே ஒரு கல் கட்டிடம். சுற்றிலும் ஓடு வேய்ந்த சிறு வீடுகள் பல-நோய் குணமாகி மறுவாழ்வை நாடி அங்கு வந்திருந்தவர்கள் பலதரப்பட்டவர்கள்-ஜாதி -மத இன பேதமின்றி ஒரே குடும்பத்தவர்களாக அங்கு எல்லோரும் கூடி, பல ஆக்க வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு அதிசயித்தாள் மனோகரி.

அங்கு வாழ்ந்தவர்கள் அனைவருக்கும் எத்தனையோ குறைகள். எனினும் வாழ்க்கையில் அவர்கள் நிறைவைப் பெற முயன்றார்கள் எல்லா நிறைவுகளையும் வாழ்க்கை அவளுக்கு வாரி வழங்கி விட்டிருந்தும்- அவள் அதை எப்படிக் குறைப்படுத்திக் கொண்டு விட்டாள்-கறைபடுத்தவும் முற்பட்டாளே! எண்ணி எண்ணி தன் பிசகைக் குறித்து வருந்தி பச்சாதாபத்தில் மனம் உருகினாள் அவள்

அன்று மாலை சுமதி தன் மகளை ஆசிரமத்து தலைவருக்கு அறிமுகப்படுத்த அழைத்துச் சென்றாள். ஆசிரமத்து நடுவே விரிந்த பெரிய கட்டிடம்தான் சிகிச்சைமனை.

அதையொட்டியிருந்த பெரிய அறையில்தான் டாக்டர் ஸ்மித் வசித்தார்.

மகளை அழைத்துக் கொண்டு தாய் அருகே சென்ற போது அவர் ஒரு நோயாளியைக் கவனிக்கும் நிமித்தம் கிகிச்சை மனைக்குப் போயிருந்தார். மனோகரி சுற்றிலும் கவனித்தாள். எளிமையாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த அறை சுவற்றிலே பல படங்கள்.

''இயேசுநாதரும்-சீரடிபாபாவும் தொழுநோய் பற்றிய நோயாளிகளிடம் காட்டிய கருணையைப் பற்றிப்படித்திருக்கிறாய்-மகாத்மா காந்தியும்-டாக்டர் ஸ்வைஸ்டர் இருவரும் செய்த மாபெரும் சேவையைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறாய். இதை எப்பொழுதும் நினைவில் நிறுத்திக் கொண்டு உற்சாகமாக இப்பணியில் ஈடுபட எங்கள் தலைவர் தமது அறை சுவற்றிலே இம்மகான்கள் படங்கள் அலங்கரிக்கும்படி அழகு படுத்தியிருக்கிறார்...'' தாயார் விவரிக்கு முன்பே டாக்டர் ஸ்மித், ''வணக்கம் உட்காருங்கோ...'' உபசரித்த வண்ணம் உள்ளே வந்தார்.

''அம்மா! இந்த வெள்ளைக்கார டாக்டர் தமிழ் பேசுகிறாரே?...'' ஆச்சர்யப்பட்ட மனோகரி உட்கார்ந்து கொண்டாள். அதற்குள் அவசரமாக பக்கத்தறைக்குள நுழைந்த வைத்தியர் மரத்தட்டொன்றில் தேநீர் நிறைந்த கோப்பைகளை ஏந்திக் கொண்டு வெளியே வந்தார்.

''தடுழில் சரளமாகப் பேசுவார் எம்மதமும்-சம்மதம் -எம்மொழியும் எங்கள் மொழின்னு வாழ்கிறவர்-எங்கேயோ பிறந்தவர்-ஏழை எளியவர்-நோயுற்றவர் எங்கிருந்தாலும் 'என் கடன் பணி செய்து கிடப்பது' என்று புறப்பட்டு நம் நாட்டிற்கு வந்து நமக்குத் தொண்டு புரிகிறார்-இவரும் ஒரு மகான் அம்மா-அவ்வளவுதான் சொல்ல முடியும்'' சுமதி மெல்லிய குரலில் மகளுக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''அன்புக்கு அடைக்கும் தாழ் உண்டா?'' மனோகரி எண்ணி முடிக்குமுன் மரத்தட்டை அருகிலிருந்த முக்காலி மீது வைத்து விட்டு டாக்டர் அமர்ந்தார்.



''முதலில் தேநீர் சாப்பிட்டுவிட்டுப் பின்னர் பேசலாம்...'' அவரது நீல நயனங்கள் மனோகரியைப் பார்த்து லேசாகச் சிரித்தன.

''உன் அம்மா எல்லாவற்றையும் சொன்னாங்க. பார்த்திபன் எனது நெருங்கிய நண்பர்களில் ஒருத்தர். அவருக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கலக்கம் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது. அதனால் உன் உத்திரவைக் கேட்காமல் சற்று முன் அவருடன் தோலைபேசியில் பேசினேன்... நீ இங்கே எங்களுடன் பத்திரமாகத் தங்கியிருக்கிறாய் என்று சொன்னேன்.'' அவர் முடிக்கவில்லை. திடுக்கிட்டுப் போனாள் மனோகரி. ''அவர் என்ன சொன்னார்?'' நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. வார்த்தைகள் பயத்தில் தடுமாறின.

''அவர் இருந்த மன்நிலையில் அதிகம் பேசுவார்என்று நான் எதிர்பார்க்கவில்லை... 'அப்படியா? நன்றி' என்று சொல்லி போனை வைத்துவிட்டார். உன் தாயாருடன் இன்று பகல் நான் வெகுநேரம் உன் வருங்காலத்தை பற்றி பேசினேன். உன்பொருட்டு நாங்கள் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம்-நீ அதற்கு ஒத்துக் கொள்ளவேண்டும்...''

மனோரகரியின் கண்கள் கலங்கின. அவர் முகத்தை நிமிர்ந்து பார்க்க வெட்கித் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

''டாக்டர் நான் மாபெரும் குற்றம் செய்துவிட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாதுன்னு பயமாக இருக்கு...'' அவள் துயரத்துடன் விம்மினாள்.

''தனது குற்றத்தை உணர்ந்து பச்சாதாபப்படுகிறவர்களுக்கு மன்னிப்பு உண்டு-கவலைப்படாதே...'' ஆறுதலாக அவர் பேசியது புண்பட்ட அவள் மனத்திற்கு மிகவும் இதமாக இருந்தது.

''உன் தாயார் நாளை தபாலில் உன் கணவருக்கு விவரமாக ஒரு கடிதம் போடுவார்கள்-நாளை மறுநாள் ஆசிரமத்து ஆண்டு விழா-அது முடிந்ததும் உன்னை உன்தாயார்

உன் கணவரிடம் சேர்ப்பிக்க அழைத்துக் கொண்டு போவார்கள்...'' அவர் முடிக்காமல் அவளை இரக்கமாகப் பார்த்தார்.

மனோகரிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. இருக்கையை விட்டு எழுந்திருந்தாள். உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்கின

''புரிகிறது டாக்டர். ஒரு சமயம் என் கணவர்என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தால்ன்னுதானே யோசிக்கிறீங்க. அவர் அப்படி ஒரு தண்டனை வழங்கினால் நான் மறுப்பு சொல்லாமல் ஏற்க வேண்டியவள்தான்-எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும். அவர் ஏற்றுக்காவிட்டால் நான் என் தாயோடு மீண்டும் திரும்பி இங்கே வந்துவிடுவேன் உங்களுடன் இந்த இடத்தில் தங்கியிருந்து என் கால முழுவதும் பணி செய்து என் பாவத்தைக் கழுவிக் கொள்வேன். என்னையும் இங்கே சேர்த்துக் கொள்ளவேண்டும்-மறுக்கக் கூடாது'' கண்களில் நீர்மல்க-துன்பத்தில் குரல் தடைபட அவள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

''ஆசிரமம் வளர்ந்து கொண்டு வருகிறது-அதனால் உன் போன்றவர்களின் சேவைக்கு இங்கே இடம் உண்டு-கவலை வேண்டாம்'' புன்னகைத்தார் அவர்.

சுமதி தன் மகளுக்குத் தன்னிடமிருந்து புது சேலைகளிரண்டை எடுத்துக் கொடுத்து உதவினாள். மறுநாள் நடந்த ஆண்டுவிழாவில் மனோகரி டாக்டர் கேட்டுக் கொண்டதை மறுக்க இயலாது-பேடைமீது அமர்ந்து வீணை வாசித்தாள். அற்புதமாக அவள் வீணை இசைத்ததைக் கேட்டு மகிழ்ந்து ஆரவாரித்து இன்னொரு பாட்டு என்ற கோஷம் சபையில் எழுந்தது. உணர்ச்சி வசப்பட்டு மனோகரி அந்தப்பாட்டை அவளையுமறியாமல் இசைக்க தொடங்கினாள்.

''துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து இன்பம் சேர்க்க மாட்டாயா...'' பாட்டு முடிந்தது-ஒரே கைதட்டல்-கூச்சல்-பாராட்டுதல்கள். திரைமூடப்பட்டதும் மனோகரி எழுந்து ஓடிச் சென்று தாயைக் கட்டிக்கொண்டு கோவென்று அழுதாள்.



''என்னால் இனி வீணை வாசிக்க முடியலையென்று வருந்திகிட்டு இருந்தேன். நீ எத்தனை அற்புதமா வாசிக்கிறே-ரொம்ப பெருமையாக இருக்கு...ஏம்மா அழறே...? மகளை அணைத்துக்கொண்டு தாய் பரிவுடன் விசாரித்தாள்.

''அம்மா இந்தப் பாட்டு எனக்கு ரொம்ப பிடிக்கும்; அவருக்கும் ரொம்ப பிடிக்கும்...வாசிக்கும்போது அவர் நினைப்பு வந்துவிட்டது. அவரை நான் எத்தனை ஆழமாக நேசிக்கிறேன் என்கிற உண்மை இப்பத்தான் மனசில் புரிகிறது...''

''அசடே அழாதே, கடவுளை நல்லா வேண்டிக்கோ. சுபமாக முடியும்னு எதிர்பார்ப்போம்-'' தாய் மகளைத் தேற்றினாள்.

டாக்டர் ஸ்மித்தின் ஏற்பாட்டின்படி மனோகரிஅடுத்த நாள் தாயின் துணையுடன் சென்னைக்குப் பயணமானாள் நகரத்தை அவர்கள் அடைந்தபோது இருட்டிவிட்டது. வீட்டிற்குச் சற்று தொலைவிலேயே அவர்கள் இருவரும் டாக்ஸியிலிருந்து இறங்கிக் கொண்டனர். கவலையுடன் மெல்ல நடந்தனர்.

வீட்டின் கேட் அருகே வந்ததும் சுமதி நின்றாள். கையில் பிடித்துக் கொண்டிருந்த துணிகள் அடங்கிய பையை மகளிடம் கொடுத்தாள். தன் பர்ஸிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து மகளின் கையில் வைத்தாள்.

''ஏழைத்தாய். சீதனம் கொடுக்கக் கையில் ஏதும் கிடையாது உன் மஞ்சள் குங்குமம் வாங்க இதை வச்சிக்கோ. அவைகள் நிலைக்க நீ நல்லா வாழணும்னு வாழ்த்துகிறேன். மாடியறையிலே வெளிச்சம் தெரிகிறது. அவர் வீட்டில் இருக்கிறார்னு நினைக்கிறேன்...உள்ளே உன்னை அனுமதிச்சு உன்னை ஏத்துக்கொண்டு விட்டா நீ மறுபடி வெளியே வரவேண்டாம்-வாசல் வரர்ந்தாவில்

குழல் விளக்கைப் பொருத்து-புரிந்துகொண்டுநான் சந்தோஷத்தோட மறு பஸ்சிலே கிளம்பிப்போய் விடுகிறேன்-ஏற்க மறுத்து கதவைச் சாத்தினால் என்னோட ஆசிரமத்திற்கு அழைச்சிட்டுப்போய் விடுகிறேன் அந்தக் கதவு உனக்காக எப்போதும் திறந்திருக்கும்...'' சொல்லி முடிப்பதற்குள் துக்கத்தில் தழதழத்தது தாயின் குரல்-கண்களில் நீர் தளும்ப மகளை அணைத்து முத்தமிட்டு விடை கொடுத்தாள்.

தோட்டத்து நடைபாதைமீது கால்கள் போக மறுத்தது. மனோகரி தடுமாறிக்கொண்டு நடந்தாள். மெல்ல படிகளைக் கடந்து வராந்தாவிற்கு வந்தாள். தோட்டத்தில் எரிந்த விளக்கு வெளிச்சத்தின் துணையோடுஅழைப்பு மணியின் பொத்தானைத் தேடி மெல்ல விரலால் அழுத்தினாள் கிணுகிணுவென்று அது எழுப்பிய ஓசையைக் கேட்டு அவளே பயந்து விட்டாள். மாடிப்படிகளில் ஒலித்த காலடி ஓசைக்கு எதிரொலியாக அவள் இதயம் இரட்டிப்பு வேகத்திலே துடித்துக் கொண்டது. மூக்கைப் பிடித்துக் கொண்டு கலங்கிய உள்ளத்துடன் கதவைப் பார்த்தபடி அவள் திகிலோடு நின்றாள்.

முன்னறையிலே ஒலித்த கால்டி ஓசை நின்றதும்-அவளுக்கு மூச்சே நின்றுவிடும் போன்ற அச்சம்.

கதவைத் திறந்தான் பார்த்திபன்...ஒரே ஒரு முறை தான் அவளால் அவனைப் பார்க்க முடிந்தது. கண்களில் நீர் பொங்கியது.

''நான் உள்ளே வரலாமா?''-கரகரத்தது அவள் குரல்.

நகர்ந்து அவளுக்குப் போக வழிவிட்ட அவனது பாதங்களையே பார்த்துக் கொண்டு அவள் உள்ளே வந்தாள். பார்த்திபன் கதவைத் தாளிட்டான். மெல்லத் தலையை நிமிர்த்தி அவனை மிகவும் பரிதாபமாக அவள் பார்த்தாள் க்ஷவரம் செய்யாத முகம்-சிரிப்பை இழந்த கண்கள்-காய்ச்சலில் அடிபட்ட தோற்றம். அவனைக் கண்டதும் ஓவென்று கத்தி அழவேண்டுமென்ற ஆவேசம் அவளுக்கு. கண்களில் நீர் பொங்க நிலை குலைந்து நின்றாள்.



''மாபெரும் பிசகைச் செய்துவிட்டேன்-ஒப்புக் கொள்கிறேன். ஆனால் உங்க கௌரவத்தை பாழடிக்காது-என் மானத்தையும் இழக்காம தப்பை உணர்ந்து கொண்டு திரும்பி வந்துவிட்டேன்...எனக்கு மன்னிப்பு உண்டா...?'' மேலே பேச முடியாது அவள் விம்மினாள்.

''உன் அம்மாவும் டாக்டரும் கடிதங்கள் விவரமாக எழுதியிருந்தாங்க. அதையெல்லாம்விட நான் உன் வார்த்தைகளை நம்புகிறேன்... அழாதே— கண்களைத் துடைச்சுட்டு உள்ளேபோ... குளியலறையிலே வெந்நீர் இருக்கு சமையற்காரன் நாலு நாளாக லீவு. குளிச்சிட்டு முதல்லே கொஞ்சம் சீக்கிரம் சமையலை கவனி... நான் இன்னும் இந்த வாரத்துத் தலையங்கம் எழுதி முடிச்சபாடில்லை...'' புன்முறுவலித்தான்.

மெய் சிலிர்த்துப் போனாள் மனோகரி ''அப்படின்னா என்னை மன்னிச்சுட்டீங்களா...'' விம்மியழுத அவளால் நிற்க முடியவில்லை. துவண்டு கொண்டு குனிந்து அவனது பாதங்களைத் தொட்டுக் கண்ணீரால் நனைத்தாள்.

''என்ன இது மனோ அழாதே... நடைந்ததையெல்லாம் மறந்துடுவோம்...'' ஆறுதலாகச் சொல்லி வாரி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

''தெய்வம் தொழாள்...ன்னு வள்ளுவர் சொன்னவாக்கின் உள் அர்த்தத்தை இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டேன். உங்களைப்போல இத்தனை நல்ல கணவர் இருந்தால்-தெய்வத்தைத் தேடிக் கோவிலுக்கு ஏன் போகணும்?' பேச முடியாது தன் முகத்தை அவனது பரந்த மார்பிலே புதைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்... பார்த்திபனது பலம் பொருந்திய கரங்கள் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டன.

''கொழுநன் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை! என்ற அந்த அடிக்கு ஒப்ப உங்களுக்கு ஒரு நல்ல மனைவியாக நான் வாழ நினைக்கிறேன்— எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க. இனி நீங்கதான் என் தெய்வம் எல்லாம்...'' விம்மினாள்.

''கொடுத்தேன்—கொடுத்தேன்'' என்பது போல்—இன்பத்திலே துடித்த பார்த்திபனது இதய நாதம் அவள் காதுகளில் கேட்டன.

மெல்ல அவள் தலையை நிமிர்த்தி தன் கரத்தால் அவள் கண்ணீரைத் துடைத்தான் பார்த்திபன்.

அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது—''கொஞ்சம். இருங்கள் வாசல் விளக்கைப் பொருத்திவிட்டு வருகிறேன். மகளுக்கு ஒளிமயமான வருங்காலம் இருக்கிறதுன்னு என் அம்மாவுக்கு தெரியட்டும்...'' மெல்ல அவனது அணைப் பினின்று விலகி— அவள் வாயில் விளக்கை ஏற்றினாள்—பளிச்சென்று, விளக்கு எரியத் தொடங்கியது.

முற்றும்

# வாழ நினைத்தால்

லக்ஷ்மி

